www.padippakam.com


# புதிய ஜனநாயகம்

மார்க்சிய - லெனினிய அரசியல் ஏடு

1-15 பிப்ரவரி '91 6/6 விலை ரூ.2.00




பி.ஜே.பி. மீண்டும் பார்ப்பனத் தலைமை

## வளைகுடா யுத்தம் எண்ணெய்க்கு ரத்தம்!

• ஜார்ஜ் புஷ்




படிப்பகம்

www.padippakam.com



# மதுரை சட்டக்கல்லூரி:

# அநீதிக்கு எதிராக தொடரும் பயணம்

மதுரை சட்டக் கல்லூரி மாணவர்கள் போராட்டம் பற்றி 1 - 15 டிசம்பர் '90 புதிய ஜனநாயகம் இதழில் எழுதியிருந்தோம். தேர்வுக் கட்டணத்தை உயர்த்துதல், தேர்வுகளை நடத்துவதிலும் விடைத்தாளை திருத்துவதிலும் திட்டமிட்ட முறையில் மாணவர்களின் வாழ்வை நாசமாக்கி வந்த மதுரை காமராஜர் பல்கலைக் கழக நிர்வாகத்திற்கு எதிராக தமிழக அரசிடம் முறையிட்டும் எவ்வித நடவடிக்கையும் இல்லை என்பதால் மாணவர்கள் போராட்டத்தில் குதித்தனர்.

மாணவர்களின் நியாயமான போராட்டத்தை துணைவேந்தர் தரக்குறைவாக விமர்சித்து போலீசுத் துணையுடன் காட்டுமிராண்டித் தனமாக ஒடுக்கினார். துணை கமிஷனர் சிவனாண்டி தலைமையிலான போலீசு கும்பல் எவ்வித முன்னறிவிப்பும் இல்லாமல் தாக்கி மாணவர்களின் மண்டையைப் பிளந்தது. பலரைக் கைது செய்து பொய் வழக்குப் போட்டது போலீசு. ஊர்வலம், பொதுக் கூட்டத்திற்கு அனுமதி மறுத்ததோடு மாணவர்கள் பிரசுரம் அச்சடிக்க முடியாதவண்ணம் அச்சக உரிமையாளர்களை மிரட்டியது.

ஆனால் இத்தனைக்கும் மத்தியில் மாணவர்கள் ரயில் மறியல், பஸ் மறியல் போராட்டம் நடத்தினர். சிறையிலும் வெளியிலும் உண்ணாவிரதப் போராட்டம் நடத்தினர். மாணவர்களின் போராட்டம் வீறுகொண்டு எழுவதைக் கண்டு அஞ்சிய போலீசு உயரதிகாரிகள் வலிய சமாதானம் செய்து கொள்ள வந்தனர். சிவனாண்டி தலைமையிலான போலீசு கும்பல் மீது நடவடிக்கை எடுப்பதாகவும், மாணவர்கள் மீதான பொய் வழக்கை திரும்பப் பெறுவதாகவும் போலீசு உயரதிகாரிகள் உறுதியளித்த தன் பேரில் மாணவர்கள் போராட்டத்தை கைவிட்டனர்.

ஆனால் இதுநாள்வரை எவ்வித நடவடிக்கையும் இல்லை. எனவே மாணவர்கள் தங்கள் மீதான பொய் வழக்கை திரும்பப் பெறக் கோரியும் சிவனாண்டி தலைமையிலான போலீசு கும்பல் மீது நடவடிக்கை எடுக்கக் கோரியும் மதுரையிலிருந்து சென்னை நோக்கி 7.1.91 அன்று பயணம் தொடங்கினர். பிற கல்லூரி மாணவர்களுக்கும் பொது மக்களுக்கும் தங்கள் நியாயமான கோரிக்கையை - போராட்டத்தை விளக்கி ஆதரவு திரட்டும் முகமாகவும் இப்பயணத்தை மேற்கொண்டுள்ளனர்.

எஞ்சியுள்ள மாணவர்கள் புதிய ஜனநாயக வாசகர் வட்டம், மதுரை சட்டக் கல்லூரி மாணவர் பிரிவு சார்பாக பிரசுரம், சுவரொட்டி மூலம் பிரச்சாரம் மேற்கொண்டு ஆதரவு திரட்டி வருகின்றனர்.

மறுபுறம், போலீசு அதிகாரி சிவனாண்டி பல பொது நிகழ்ச்சிகளில் திட்டமிட்டே கலந்து கொண்டு தன்னை சமூக பொறுப்புள்ளவனாகவும், நேர்மையானவனாகவும் காட்டிக் கொள்ள முயற்சித்து வருகிறான். இதுவல்லாமல் பிற பத்திரிகைகளும் மாணவர்கள் போராட்டத்தை தனிப்பட்ட ஒரு போலீசு அதிகாரியை எதிர்க்கும் போராட்டம் என சித்தரித்து திசை திருப்பி வருகின்றன. ஆனால் மாணவர்கள் அனைத்தையும் முறியடித்து தங்கள் போராட்டம் மக்கள் விரோத போலீசு கும்பலின் அடக்குமுறைக்கு - பல்கலை கழகத்தின் அநியாயத்திற்கு - அரசின் அலட்சியப் போக்கிற்கும் எதிரான போராட்டம் என்பதை நிலைநாட்டி வருகின்றனர். தங்கள் கல்லூரி வளாகத்திற்குள் பிரச்சினையை முடக்கி விடாமல் வெளியே கொண்டு வந்து பிரச்சாரம் மேற்கொள்ளும் இம்மாணவர்களுக்கு ஆதரவு தருவது அனைவரின் கடமை. ஏனெனில் சட்டபூர்வ கிரிமினல் கும்பலான போலீசாரால் அல்லது அவர்களது ஏவலின் பேரில் சட்டவிரோத கிரிமினல் கும்பல்களால் மாணவர்கள் எந்நேரமும் தாக்கப்படலாம் என்ற நிலையே நீடிக்கிறது.

# எருமைத்தோல் அதிகாரிகளுக்கு புரியும் மொழியில் போராட்டம்!

திருச்சி நகர மக்களை பெரிதும் பாதிக்கும் பிரச்சினை, காந்தி மார்க்கெட் நெரிசல். பெருவியாபாரிகள் சாலையை ஆக்கிரமித்துக் கொண்டதாலும், சரக்கு இறக்க லாரிகள் பகலில் உள்ளே வருவதாலும், கடைகளுக்குரிய போதிய இடவசதி இன்மையாலும் இந்நெரிசல் ஏற்படுகிறது. பெருவியாபாரிகளிடமும், லாரி டிரைவர்களிடமும் போலீசும் நகராட்சி அதிகாரிகளும் மாமூல் வாங்குவதால் நெரிசலை போக்க நடவடிக்கை எடுக்காமல் காலங்கடத்தி வருகிறார்கள். இதை அம்பலப்படுத்தி கடந்த ஒன்றரை ஆண்டு காலமாக பகத்சிங் இளைஞர் முன்னணி, நெரிசலை போக்கக் கோரி - மார்க்கெட்டை நவீனப்படுத்திக் கட்டக்கோரி போராடி வருகிறது. நகராட்சியும் சரி, நகர்மன்ற தலைவரும் சரி இதை சட்டை செய்வதே இல்லை. எனவே, தகுந்த சவுக்கடி கொடுக்கும் பொருட்டு சாலை மறியல் போராட்டம் நடத்த ப.இ.மு.வினர் திட்டமிட்டனர்.

பகுதி மக்களிடையே பல நாளாக பிரச்சாரம் செய்த பின்னர் 29.12.90 அன்று காலை காந்தி மார்க்கெட்டில் பஸ் மறியலில் ஈடுபட்டனர். ஓட்டுனர் ஒருவர் மறியலுக்கு ஆதரவாக பஸ்ஸை நிறுத்தி பிறரையும் செல்ல வேண்டாம் என்று கேட்டது குறிப்பிடத் தக்கது. 10 நிமிட மறியலுக்குப் பின் தோழர்கள் ஜெகதீசன், தாஸ், சுகதேவ், கிரிஸ்டி ஆகியோரை போலீசு கைது செய்தது. பேருந்தை வேறுபக்கம் திசை திருப்பி விட்டு போராட்டத்தை தோல்வியடையச் செய்ய போலீசு முயன்றாலும் தோழர்கள் போலீசு நிலையத்திற்கு முன்பும் கோஷமெழுப்பி எதிர்ப்பு தெரிவித்தது பரவலாக பிரச்சாரமானது. உடன் ப.இ.மு.வினர் தோழர்களின் கைதை கண்டித்து விடுவிக்கக் கோரி சுவரொட்டி ஒட்டினர். சைக்கிள் ரிக்ஷாக்காரர்கள் முதல் பலர் தாமாக முன்வந்து சுவரொட்டியை வாங்கிச் சென்று ரிக்ஷாக்களில் ஒட்டி பிரச்சாரம் செய்தனர். ப.இ.மு. தோழர்களின் கைதைக் கண்டித்து திருவானைக்காவலைச் சேர்ந்த இளைஞர் சமுதாய நற்பணி மன்றத்தினரும் சுவரொட்டி ஒட்டி தமது எதிர்ப்பை தெரிவித்தனர். பரவலாக மக்கள் எங்கும் போராட்டத்தை ஆதரித்து பேசினர். வேறுவழி இல்லாமல் போலீசு அன்று மாலையே தோழர்களை விடுவித்தது.

ப.இ.மு. போராடியதன் விளைவாக மார்க்கெட்டை நவீனப்படுத்தும் பொருட்டு அருகேயுள்ள சப்ஜெயிலை அகற்ற தீர்மானித்துள்ளது நகராட்சி. எனினும் நடைமுறைப்படுத்தும் வரை தொடர்ந்து பகுதி மக்கள் ஆதரவுடன் போராடுவது என ப.இ.மு.வினர் உறுதி பூண்டுள்ளனர்.



படிப்பகம்

www.padippakam.com


# புதிய ஜனநாயகம்

மார்க்சிய - லெனினிய அரசியல் ஏடு

ஆறாம் ஆண்டு

6

1 - 15 பிப்ரவரி '91

உள்நாடு :
தனி இதழ் : ரூ.2
ஆண்டு சந்தா : ரூ.48

வெளிநாடுகள் :
(வான் அஞ்சலில்)
ஆண்டு சந்தா : US $ 11

படைப்புகள் அனுப்பவும் மற்றும் அனைத்துத் தொடர்புக்கும்:



செ.மதியழகன்,
ஆசிரியர், புதிய ஜனநாயகம்,
21, பாலாஜிசிங் தெரு,
சைதாப்பேட்டை,
சென்னை - 600 015.


## நாடாளுமன்ற - சட்டமன்ற ரௌடித்தனம்! எதுவுமே புனிதமில்லை! ஏன் இந்தப் பம்மாத்து!

தமிழ்க்குடிமகன் தமிழக சட்டப் பேரவைத் தலைவராக பதவியேற்ற போது, ''முன்னாள் அவைத்தலைவர் பாண்டியனைப் போல வானளாவிய அதிகாரத்தை நான் பயன்படுத்தப் போவதில்லை'' என்று மிகவும் மாண்போடு சொன்னார். ''இல்லை! அதற்கான அவசியம் வரும்!'' என்ற மாண்புகெட்ட பாண்டியன் மறுத்துச் சொன்னார். பாண்டியன் சொன்னதுதான் சரியானதென்று தமிழக சட்டப்பேரவை கூடும் ஒவ்வொரு நாளும் நிரூபிக்கப்பட்டு வருகிறது.

அமளிதுமளி, கூச்சல் குழப்பம், ஆபாசவசவுகள், ஆடை அவிழ்ப்பு - கிழிப்பு, சில சமயம் அடிதடிரகளை - ரௌடித்தனம், வெளிநடப்பு - இல்லையேல் வெளியேற்றம், பல நாட்கள் எதிர்க்கட்சியினரை அவையிலிருந்து நீக்கிவைப்பது - இவையெல்லாம் வாடிக்கையாகிவிட்டன. பாண்டியனைப் போல வாய்க்கொழுப்போடும் - முரட்டுத்தனமாகவும், கொச்சையாகவும் பேசி நடந்து கொள்வதில்லை என்பதைத் தவிர தமிழ்க்குடிமகனின் நடத்தை வேறுவிதமாக இல்லை. பாண்டியன் எம்.ஜி.ஆரின் எடுபிடியாக நடந்ததைப் போலத்தான் கருணாநிதியின் கைத்தடியாக இவர் நடந்து கொளகிறார்.

''எந்தவித நியாயமும் காரணமும் இல்லாது எப்படியாவது எங்கள் ஆட்சியைக் கலைத்து விட ஜெயலலிதா - வாழப்பாடி கும்பல் துடிக்கிறது. அதன் விளைவுதான் சட்டப்பேரவைக் குழப்பங்கள்'' என்பது கருணாநிதி கட்சியின் வாதம். இதிலே ஒரு பகுதிதான் உண்மை இருக்கிறது. இன்னொரு பகுதி உண்மை, எப்படியாவது ஜெயலலிதா கட்சியைப் பிளந்து, ஜெயலலிதாவைத் தனிப்பட்ட முறையில் அவமானப்படுத்தி அரசியலில் இருந்தே விரட்டிவிடுவது; அதன் மூலம் ஆட்சிக் கலைப்பு அபாயத்தில் இருந்து தப்பித்துக் கொள்வது என்பதற்காக கருணாநிதி கும்பல் செய்யும் சதி - நரித்தனத்தில் அடங்கியிருக்கிறது. ஆட்சியைக் கலைக்கவும், கவிழ்க்கவும் ஜெயலலிதா - வாழப்பாடி கும்பல் மேற் கொண்டுள்ள வழிமுறைகள் எவ்வளவு அநியாயமானவையோ, அநாகரிகமானவையோ சட்ட விரோதமானவையோ அதே போன்றவைதான் கருணாநிதி கும்பலின் செயல்களும். இருதரப்புக்குமே சுயநலனும் பதவி வெறியும்தான் நோக்கமாக உள்ளன. அவற்றை அடைவதற்கும் தக்கவைத்துக் கொள்வதற்குமான வழிமுறைகள் பற்றி எவ்வித கூச்ச நாச்சமும் கிடையாது.

தேசிய முன்னணி - ஜனதா தளம் ஆண்ட 11 மாதங்களில் கருணாநிதி ஆட்சியைக் கலைக்கவோ, கவிழ்க்கவோ முடியாது என்று நம்பிக்கை இழந்துவிட்ட ஜெயலலிதா அரசியல் துறவறம் பூண்டு மர்ம வாழ்க்கைக்குப் போய்விட்டார். ஆனால் அதற்குமுன்பு ராஜீவ் ஆட்சியிலும், பின்பு சந்திரசேகர் ஆட்சியிலும் பதவிவெறியால் ஜெயலலிதா எச்சில் ஒழுகி, ஆட்டம் போடாத நாளே கிடையாது. தன்னை மானபங்கப்படுத்தவும், கொல்லவும் முயன்றதாக ஒரு நாள் ஜன்னி கண்டவளைப் போல அலறுவார். சட்டம் ஒழுங்கு குலைந்ததாகவும் புலிகள் கொட்டமடிப்பதாகவும் இன்னொரு நாள் கடும் சுரம் கண்டவளைப் போல கூச்சல் போடுவார். இதற்கேற்ப சட்டமன்ற ரௌடித்தனங்களை நடத்தும்படித் தனது எம்.எல்.ஏ.க்களுக்குக் கட்டளை இடுவார்.

அ.தி.மு.க.வும் பிளவுபட்டு, காங்கிரசுடனும் கூட்டுச் சேராமல் அவை தனித்தனியே பிளவுப்பட்டிருந்ததால்தான் கருணாநிதி ஆட்சிக்கு வர முடிந்தது. அவை ஒன்றுபட்டிருந்தால் கருணாநிதியால் எப்போதுமே வெற்றி பெற முடியாது. எனவே எதிர்த் தரப்பைப் பிளவுபடுத்தும் எத்தணிப்புகளில் எப்போதும் ஈடுபடுகிறார் கருணாநிதி. இதைத்தான் அவரது ''ராஜதந்திரம்'' என்று அவரது கட்சிக்காரர்களும் பீற்றிக் கொள்கிறார்கள். ஜெயலலிதாவின் பாசிச - வக்கிர அரசியல் வாழ்க்கை; அ.தி.மு.க. கட்சிக்குள் பதவிக்கும், பணத்திற்கும் நடக்கும் போட்டி - முரண்பாடுகள் - இவற்றைத் தனது நோக்கத்திற்குப் பயன்படுத்திக் கொள்வதுதான் கருணாநிதியின் ''ராஜதந்திரம்'';வேறொன்றுமில்லை..

இதற்காக போலீசு - உளவுத்துறையிலிருந்து, சபாநாயகர் வரை முறைகேடாகப் பயன்படுத்திக் கொள்வதன் மூலம் ஜெயலலிதாவை போலவே தானும் ஒரு பொறுக்கி அரசியல் வாதிதான் என்பதைக் கருணாநிதி காட்டிவிடுகிறார். முன்பு, எதிர்க்கட்சித் தலைவர் எம்.எல்.ஏ. பதவியை ராஜினாமா செய்வதாகவும், அரசியலில் இருந்தே விலகுவதாகவும் கடிதம்-அறிக்கை எழுதி தனது குடும்ப நண்பர் நடராஜனிடம் ஜெயலலிதா கொடுத்து வைத்திருந்தார்; மோப்பம் பிடித்து விட்ட கருணாநிதி,போலீசை ஏவி அவற்றைக் கைப்பற்றி பத்திரிக்கைளுக்கும் சபாநாயகருக்கும் கொடுத்துக் கேடாகப் பயன்படுத்த முயன்றார். ஆனால் அந்த விவகாரம் கருணாநிதிக்கு எதிராகவே திரும்பியது.

இப்போது திருநாவுக்கரசு, சாத்தூர் ராமச்சந்திரன், உக்கம்சந்து, ராமராஜன் ஆகியோர் அ.தி.மு.க.வை பிளந்து போட்டிக் குழு ஏற்படுத்தியுள்ளனர். அவர்களிடம் பெரும்பான்மை இல்லை என்று தெரிந்தும் கட்சித் தலைமை நிலையத்தைக் கைப்பற்றும்படி தூண்டிவிட்டு, நடுநிலை வகிப்பதாக நடித்து, போலீசை ஏவி அதற்குப் பூட்டுப்போட்டது. சட்டப்பேரவையில் திருநாவுக்கரசு கும்பலின் நிலை என்னவென்று ஆறுமாதங்களாக முடிவு செய்யாதிருந்த சபாநாயகர், கடந்த ஜனவரி 21-ந் தேதி எந்தக்கட்சியையும் சேராத உறுப்பினர்கள் என்று அறிவித்தார். அடுத்த நாளே அதை ''அ.தி.மு.க. - 2'' என்று தனிக்கட்சியாக அங்கீகரிப்பதாகவும் அறிவித்தார். இந்த முடிவை ஏற்க மறுத்த ஜெயலலிதா கும்பல் சபாநாயகரைச் சூழ்ந்து கொண்டு அடித்தனர்; அவரது துண்டை உருவினர். பதிலுக்கு ஜெயலலிதா கட்சி சட்டசபைத் தலைவர் ராதாவின் சட்டை கிழிக்கப்பட்டு, காவலர்களால் அக்கட்சி எம்.எல்.ஏ.க்கள் கூண்டோடு வெளியேற்றப்பட்டனர். இதைத் தொடர்ந்து இரண்டு கூட்டத் தொடர்களில் இருந்து அவர்களை நீக்கிவைப்பதாக சபாநாயகர் தமிழ்க்குடிமகன் உத்தரவிட்டார். சபாநாயகர் முடிவை

படிப்பகம்

www.padippakam.com

மறுபரிசீலினை செய்யும் தாங்களும் சட்டப் பேரவையைப் புறக்கணிப்பதாக காங்கிரசு நிர்பந்திக்கிறது. சபாநாயகரும் மறுபரிசீலினைக்கு ஒப்புக்கொண்டு (தற்காலிகமாக) ஏதாவது ஒரு சமரசத்துக்கு வருவதற்கான வாய்ப்பும் உள்ளது.

இந்தக் குறிப்பிட்ட விவகாரத்தில் தமிழ்க்குடிமகன் முடிவு சட்டபூர்வமாகச் சரியானதுதான். ஆனால் தார்மீக ரீதியில் அதை நியாயப் படுத்த முடியாது. ஏனென்றால் சபாநாயகருக்குரிய ''நடுநிலை - மாண்போடு'' ஒரு போதும் அவர் நடந்து கொண்டதில்லை. ஜெயலலிதா கட்சியைப் பிளந்து அரசியல் ஆதாயம் அடைவதில் கருணாநிதியின் எடுபியாகத்தான் நடந்து கொள்கிறார். அரசியல் தொழிலுக்குத் திடீரென்று நுழைந்த தனக்குக் கருணாநிதி பதவி கொடுத்ததற்கு விசுவாசமாக நடந்து கொள்வதிலேயே கவனமாக இருக்கிறார். இது அரசியல் நோக்கர்கள் அனைவரும் அறிந்தது தான்.

தமிழக சட்டப்பேரவையில் இப்போது நடக்கும் ரௌடித்தனங்களும் ஆபாசக் கேளிக் கூத்துகளும் தமிழ்நாட்டுக்கோ, வேறு பிற மாநிலப் பேரவைகளுக்கோ, நாடாளுமன்றத்துக்கோ கூட புதியவை அல்ல. ஆயிரத்தோராவது முறையாக இப்படி நடந்த போதும் முதலாளித்துவப் பத்திரிக்கைகளும், ''ஜனநாயக'' வாதிகளும் மீண்டும் மீண்டும் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

**தமிழக சட்டப் பேரவையில் இப்போது நடக்கும் ரௌடித்தனங்களும் ஆபாசக் கேலிக்கூத்துகளும் தமிழ்நாட்டுக்கோ, வேறு பிற மாநிலப் பேரவைகளுக்கோ, நாடாளுமன்றத்துக்கோ கூட புதியவை அல்ல. ஆயிரத்தோராவது முறையாக இப்படி நடக்கிறது.**

''நாடாளுமன்ற - சட்டமன்றக் கண்ணியம் மாண்புகளைக் காக்க வேண்டும்; அதன் உறுப்பினர்கள் ஜனநாயக மரபுகளையும், நாகரிகத்தையும் கடைப்பிடிக்க வேண்டும்; சபாநாயகர் பதவிக்குரிய புனிதத்தையும் நடுநிலை சுதந்திரத்தையும் மதிக்க வேண்டும்'' என்று அனைவருமே கோருகின்றனர். இப்படித்தான், ஆளும் கட்சியின் மிரட்டல், நீதித்துறையின் தலையீட்டிலிருந்து சபாநாயகர் மற்றும் நாடாளுமன்றத்தின் உரிமையும் அதிகாரத்தையும் காப்பதற்காக கட்சி வேறுபாடின்றிக் கடந்த மாதம் அனைவரும் பெரும் கூச்சல் கிளப்பினர். வி.பி.சிங் தலைமையிலான ஜனதா தளத்தில் இருந்து சந்திரசேகர் தலைமையில் பிரிந்துபோன 37 எம்.பி.களைப் பதவி நீக்கம் செய்யும்படி மனுக்கொடுத்திருந்தனர். அதற்கு அந்த 37 பேரிடம் விளக்கம் கேட்டிருந்தார் சபாநாயகரும், வி.பி.சிங் ஆதரவாளருமான ரேபிரே. மனு மீதான முடிவை தள்ளிவைக்கவில்லை என்றால் சபாநாயகரைக் கைது செய்வேன் என்று மிரட்டினார், சட்டமந்திரி சுப்பிரமணிய சுவாமி. சபாநாயகரையே மிரட்டியதற்காக எதிர்க்கட்சிகள் போராடி அவரை பகிரங்கமான, நிபந்தனையற்ற மன்னிப்புக் கோரும்படி செய்தனர்.

இதே விவகாரம் குறித்து ஆளும் கட்சி புதுடில்லி உயர்நீதிமன்றத்தில் ஒரு வழக்குத் தொடுத்திருந்தது. ஆளும் கட்சி எம்.பி.க்கள் 37 பேர் பற்றி முடிவெடுப்பதை நிறுத்தி வைக்கும்படி உயர்நீதிமன்றம் சபாநாயகருக்கு இடைக்காலத் தடை உத்தரவு போட்டது. இந்த வழக்கில் சபாநாயகரைவிட நீதிபதிக்குத்தான் அதிகாரம் கூடுதலாக இருக்கிறதென அரசு உயர் வக்கீல் வாதாடினார்.

ஆளும் கட்சி தவிர அனைத்துக் கட்சிகளுமே இதை எதிர்த்து நாடாளுமன்றம் -சபாநாயகரின் உரிமையைப் பறிப்பதாக குற்றஞ்சாட்டின. உடனே உயர்நீதிமன்றத்தில் தனது மனுவைத் திருத்திக் கொள்வதாக அரசு சொன்னது. அடுத்தநாளே உயர்நீதிமன்றமும் தனது இடைக்கால தடை உத்தரவை நீக்கிவிட்டது. ஆனால் ஜனதா தள விவகாரத்துக்குள் புகுந்து 25 எம்.பி.க்களை நீக்கியது செல்லாதென ஒரே நாளில் தீர்ப்புக் கூறியது. அதற்கும் அடுத்த நாளே 5 மந்திரிகள் உட்பட 8 ஆளும் கட்சி எம்.பி.க்களை கட்சிமாறிகளென சபாநாயகர் சபையிலிருந்து நீக்கிவிட்டார். அதே சமயம் ஆளும் கட்சியை அங்கீகரித்தார்.

இந்தச் சம்பவங்கள் காட்டுவதென்ன? சபாநாயகரை மிரட்டிப் பணியவைக்கவும், நீதிபதியை விலைக்கு வாங்கவும் முடியும் என்பதைத்தானே! சபாநாயகர் முடிவுக்குப் பிறகும் கூட கட்சிமாறி மந்திரிகளை விலக்க முடியாது; அவர்கள் பதவியில் நீடிப்பர் என்று அடம்பிடிக்கிறது ஆளும் கட்சி. இந்த அளவுக்குத்தான் சட்டமும் சபாநாயகரும் மதிக்கப்படுகின்றனர்.

நாடாளுமன்ற உரிமை, ஜனநாயகத்தின் மாண்பு குறித்து அப்போது கூச்சல் போட்ட எதிர்க்கட்சிகள், குறிப்பாக தேசிய முன்னணி -ஜனதா தளத்தின் யோக்கியதையும் வேறுமாதிரி இல்லை. சந்திரசேகர் தலைமையில் மூன்றில் ஒரு பங்கு ஜனதா தள எம்.பி.களான 54 பேர் பிரிந்து போனதை ஏற்பதற்கு பதில் ஒரு அரசியல் சாணக்கியத் தனத்தில் இறங்கியது. முதலில் 25 எம்.பி.க்களை மட்டும் - எவ்வித காரணமும் கோராமல் கட்சியில் இருந்து நீக்கியது; பிறகு மீதி 29 பேரைக் கட்சி தாவல் தடைச் சட்டத்தின் கீழ் பதவி நீக்கம் செய்யும்படி கோரியது. சபாநாயகரை வைத்துக் கொண்டு இதைச் சாதித்துவிடவும் சந்திரசேகர் ஆட்சியைக் கவிழ்க்கவும் கூட கனவு கண்டது. சபாநாயகரும் இதனை ஏற்றுத்தான் உடனடியாக ஜனதா தளப் பிளவை அங்கீகரிக்காமல் இழுத்தடித்தார்; பிறகு நிர்பந்தம், அம்பலப் பட்டுவிடும் பயம் காரணமாக ஆளும் கட்சியை அங்கீகரித்தார். மத்தியில் சந்திரசேகர் கும்பலைக் கவிழ்க்க வி.பி.சிங் தலைமை என்ன செய்ததோ, அதையே தனக்கு அவர்கள் திருப்பிச் செய்ததும் உ.பி. சபாநாயகர் - கவர்னர் மீது பாயந்தது ஜனதா தளம்.

எம்.ஜி.ஆர். ஆட்சியில் பாண்டியனும், பாண்டிச்சேரி சபாநாயகரும் தமது வானளாவிய அதிகாரத்தைப் பயன்படுத்திய போதும், தி.மு.க. உறுப்பினர்களைப் பதவி நீக்கம் செய்த போதும் அழுதுபுலம்பினார்; ஆத்திரப்பட்டார் -கருணாநிதி. அவரே இப்போது தமிழ்க்குடிமகனைத் தனது எடுபிடியாக்கி எதிர்க்கட்சி மீது ஏவுகிறார். பாண்டிச்சேரியில் 4 ஜனதா தள உறுப்பினர்களில் 3 பேர் விலகினர்; அது கட்சி தாவல் சட்டப்படி செல்லும்; ஆனாலும் அவர்களில் 2 பேரை சபையிலிருந்து நீக்கும்படி செய்தார், கருணாநிதி. அதைச் செய்த சபாநாயகரே காங்கிரசிடம் சோரம் போய் கட்சி தாவி விட்டார். அவரை துரோகியென ஏசினார் கருணாநிதி. தி.மு.க. ஜனதா தளம் ஆகியவற்றின் மேற்கண்ட அரசியல் |சதிராட்டங்களை ஆமோதிக்கும் - ஆதரிக்கும் போலிக் கம்யூனிஸ்டுகள், எதிர்த்தரப்பினர்



இதையே செய்தால் ஜனநாயகப் படுகொலை நடந்துவிட்டதாக அலறுகின்றனர். காங்கிரசோ நீண்டகாலமாகவே இப்படி நடந்து வந்திருக்கிறது. புதிதாக வந்து 'பத்தினி' வேடம் போடும் பாரதிய ஜனதாவும் இதற்கு விதிவிலக்கல்ல என்று ராஜஸ்தானில் ஆட்சியைக் காப்பாற்றிக் கொள்ளக் கட்சிமாறிகளின் தயவை நாடியதன் மூலம் காட்டிவிட்டது.

ஆகவே, ஆட்சியைக் கைப்பற்றுவதற்கும், பிறகு அதைத் தக்கவைத்துக் கொள்வதற்கும் எல்லாவிதமான கிரிமினல் சமூக விரோதமான குற்றங்களிலும் எல்லா ஓட்டுக் கட்சிகளுமே இறங்கிவிட்ட பிறகு நாடாளுமன்ற, சட்டமன்ற சபாநாயகர்களே அரசியல் சட்ட விதிமுறைகளைத் தமது கட்சிக்குச் சார்பானவைகளாக வளைத்துக் கொள்வதும், அவர்களே எதிர்க்கட்சிகளால் தாக்கி அவமானத்துக்குள்ளாவதும் வியப்புக்குரியதல்ல. நாடாளுமன்ற ஜனநாயக அமைப்பில் எதுவுமே புனிதமானவை அல்ல என்பதையே இவை காட்டுகின்றன. ●



படிப்பகம்

www.padippakam.com

# வளைகுடா யுத்தம் எண்ணெய்க்கு ரத்தம்!

**வளைகுடா யுத்தம் அமெரிக்காவின் ஆதிக்க வெறியை மட்டுமல்ல; அதன் ஓட்டாண்டித் தனத்தையும் முட்டாள்தனத்தையும் ஒவ்வொன்றாக காட்டுகிறது. சதாம் உசேனின் அரசியல் - யுத்த சாகசங்கள் குவைத் ஆக்கிரமிப்பை மறைக்க எத்தணிக்கிறது.**

உலகின் முழு கவனமும் வளைகுடா பக்கம் திரும்பி விட்டது. ஈராக் அமெரிக்காவை எதிர்த்து யுத்தம் செய்ய துணியாது என்ற பிரமை தகர்ந்து விட்டது. யுத்தம் தொடங்கியதிலிருந்து எதிர்பார்த்ததைவிட அழிவுகள் அதிகமாகிக் கொண்டே போகிறது.

உலகின் மாபெரும் வல்லரசு அமெரிக்காவின் அதி நவீன யுத்த வியூகங்களும் நம்பிக்கைகளும் ஒவ்வொன்றாகத் தகர்கின்றன. ஈராக்கின் யுத்த தந்திரம்; தாக்குதல் மற்றும் தற்காப்பு; பின்வாங்கல் மற்றும் போக்கு காட்டும் நேர்த்தி, போர் வல்லுனர்களையே அசர வைக்கிறது.

இரண்டு வாரங்களில் ஈராக்கை வீழ்த்தி விடுவோம் என்று மீசையை முறுக்கிக் கொண்டுபோன அமெரிக்கா இப்போது போர் பலமாதங்கள் தொடரும் என்று தலையைச் சொறிகிறது!

யுத்த முனையில் ராணுவ சக்திகளின் பலம் இப்படி இருக்கிறது.

ஈராக் ஒருபுறம்; அதற்கெதிராக அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ், சவூதி அரேபியா, ஓமன், கட்டார், ஐக்கிய அரபு எமிரேட், பெகரைன், மொராக்கோ, வங்கதேசம், பாகிஸ்தான், எகிப்து, சிரியா, செக்கோஸ்லோவியா, அர்ஜென்டினா, ஹோண்டுராஸ், நைஜர், செனகல், இத்தாலி, கனடா, 'நேட்டோ' நாடுகள், ஆஸ்திரேலியா, ரஷ்யா முதலிய 28 நாடுகள்!

அதாவது ஈராக்கின் 10 லட்சம் துருப்புக்கள் (இதில் 4.8 லட்சம் 'ரிசர்வ்' துருப்புகள்) 5,500 டாங்கிகள், 3,500 பீரங்கிகள், 200 ஏவுகணை வீச்சு பீரங்கிகள், 800 ஏவுகணைகள், 800 சண்டை விமானங்கள், 9 யுத்தக் கப்பல்கள்!

இதற்கு எதிராக அமெரிக்கா மற்றும் நேச நாடுகளின் 6,76,000 துருப்புகள், 4,500 டாங்கிகள், 1,250 நாசகார விமானங்கள், 180 அதி நவீன யுத்தக் கப்பல்கள் மற்றும் ஏவுகணைகள்; பீரங்கிகள் எவ்வளவு என்ற விபரம் இல்லை.

மேலும் அதிகார பூர்வமாக அறிவிக்கப்படாத ரசாயன ஆயுதங்கள், உயிரியல் கிருமி ஆயுதங்கள், உளவு, தக்வல்கள், தாக்குதல் இலக்குகள் சேகரிக்க செயற்கை கோள்கள், மின்னணு அதி நவீன கட்டுப்பாட்டு வலைப்பின்னல்கள்!

இந்த யுத்தத்தில் அமெரிக்க தரப்புக்கு ஆகும் ஒரு நாள் செலவு (ஏவுகணை வீச்சுகள், விமான இழப்புகள் உட்பட) சுமார் ஒரு பில்லியன் டாலர்! ஏறக்குறைய 1,700 கோடி ரூபாய்! ஏவுகணைகளை எதிர்த்து அழிக்கும் ஒரு 'பேட்ரியாட்' ஏவுகணையின் மதிப்பு 1.25 கோடி ரூபாய்!

அமெரிக்கத் தரப்பு ஒவ்வொரு ராணுவ வீரருக்கும் வழங்கியிருக்கும் ரசாயன ஆயுத பாதுகாப்பு முகமூடி, உடை, பூட்ஸ், கையுறை இவற்றின் மதிப்பு சுமார் 230 டாலர். ஏறக்குறைய ரூ. 4,600! இவ்வாறு வெவ்வேறு பருவ சூழ்நிலைகளுக்கேற்ப போட்டுக் கொள்ள 3 ஜோடி உடை தரப்படுகிறது.

பி.52 என்ற ராட்சத குண்டு வீசும் விமானம் ஒவ்வொரு முறையும் ஈராக்கின் மீது 14 'டன்' எடை வெடிகுண்டுகளை கொண்டு போய் கொட்டுகிறது. பாதுகாப்பாக இவ்விமானங்கள் இந்துமாக்கடலிலுள்ள டிகோகார்சியா தீவிலிருந்து ஒவ்வொரு முறையும் 7,000 கி.மீ தூரமுள்ள பாக்தாத்திற்குச் சென்று குண்டு போட்டுவிட்டு திரும்புகிறது. போர் தொடங்கிய இரண்டு நாளில் ஈராக்கின் மீது அமெரிக்க விமானங்கள் கொட்டிய வெடி குண்டுகளின் எடை 40,000 டன்!

யுத்தச் செலவுகளுக்காக அமெரிக்காவுக்கு ஜெர்மனி 8,000 லட்சம் டாலரும் சவூதி அரேபியா 500 கோடி டாலரும் ஜப்பான் 400 கோடி டாலரும் கொடுப்பதாக உறுதி கொடுத்துள்ளது. இதில் கணிசமாக முதல் தவணை ஒன்றையும் இந்நாடுகள் கொடுத்துள்ளன. ஜப்பான் 40,000 சோனி "வாக்கி - டாக்கி"களையும் கொடுத்துள்ளது. பிரிட்டன், பிரான்ஸ் உட்பட போரில் இறங்கியுள்ள மற்ற 26 நாடுகள் எவ்வளவு கொடுத்துள்ளன என்பது ரகசியமாக இருக்கிறது.

யுத்தத்திற்கு ஆகும் செலவில் ஏறக்குறைய சரிபாதியை அமெரிக்காவும், கால் பங்கை ஈராக் எதிர்ப்பு வளைகுடா நாடுகளும் மீதி கால் பங்கை நேட்டோ நாடுகளும் போடுகின்றன. போரில் இணைந்துள்ள மற்ற நாடுகள் ஈராக்கை எதிர்த்து நிற்பதாக தோற்றமளிப்பதற்காக அமெரிக்கா மற்றும் மேற்கத்திய ஏகாதிபத்தியங்களால் நிர்ப்பந்தமாக சேர்க்கப்பட்டவை.

இவர்களின் வாழ்த்துக் கோஷங்கள் காதைப் பிளக்க, ஐ.நா. சபை அதிகார பூர்வ அனுமதி வழங்க, அமர்க்களமாக போரில் குதித்தது. அமெரிக்கா! 'சூப்பர்மேன் ராம்போ' பாணியில் மயிர்க் கூச்செரியும் போர் வியூகங்களை வகுத்தது. போருக்கு "பாலைவன புயல்" என்று பெயரிட்டது. இப்போருக்கு அதிகபட்சம் 6 நாட்கள் தான் தேவை என்றது.

முதல் கட்டமாக ஈராக்கின் விமான தளம், ஏவுகணைத் தளம், ரசாயன ஆயுத மையங்கள், தகவல் தொடர்பு கட்டுப்பாட்டு கேந்திரங்கள், சதாம் உசேன் இருக்கும் அதிபர் மாளிகை இவற்றை முற்றிலுமாக அழிப்பது; பாக்தாத் நகரத்தை உலகின் தொடர்பிலிருந்து துண்டித்தெறிவது! இதற்காக அலை அலையாக விமானங்களிலிருந்து அந்த இலக்குகள் மீது குண்டு மழை பொழிவது!

இரண்டாவதாக, குவைத்தில் நிறுத்தியுள்ள 4.3 லட்சம் ஈராக் துருப்புகளைக் கொண்ட படையை ஈராக்கின் கட்டுப்பாட்டிலிருந்து பிளப்பது! அவற்றுக்குச் செல்லும் உணவு, ஆயுதங்கள், மருந்துகள் ஆகியவற்றை தடுத்து அழிப்பது!

மூன்றாவதாக, ஈராக் படையின் முதுகெலும்பாக இருக்கும் குவைத் வாயிலில் நிலை கொண்டுள்ள அதிநவீன பயிற்சி பெற்ற 1.5 லட்சம் 'குடியரசு பாதுகப்புப் படை'களை வான், தரை வழியே சுற்றி வளைத்து அழிப்பது!




**சதாம் உசேன், குவைத் அமீர், ஜார்ஜ் புஷ்: சதுரங்க ஆட்ட 'நாயகர்கள்'!**



படிப்பகம்

www.padippakam.com




**ஈராக் - பாகதாத் நகரில் குண்டுமழை பொழியும் அமெரிக்க விமானங்கள்.**

நான்காவதாக, துருக்கி, சவூதி வழியாக பீரங்கிப் படை மூலம் ஈராக்கிற்குள் முன்னேறுவது; அரபு வளைகுடாவில் நிறுத்தி வைத்துள்ள கப்பற்படை மூலம் குவைத்தின் கடல் எல்லைகளை மூடி அதன் வான்புற தேசத்தை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவது; குவைத்தில் எஞ்சி இருக்கும் ஈராக் படையை நசுக்கி குவைத்தை மீட்பது!

கடைசியாக, சதாம் உசேன் கும்பலை சிறை பிடித்து (உயிரோடு இருந்தால்) போர் குற்றவாளிகளாக விசாரிப்பது; தண்டிப்பது! இவை யாவற்றையும் ஏக காலத்தில் ''பாலைவன புயல்'' வேகத்தில் முடித்து விடுவது! அதாவது அதிகபட்சம் 6 நாளில்!

கெடுபிடி போர் தொடங்க வேண்டிய ஜனவரி 16-ந்தேதி கறுப்பின மக்களின் அன்பு தலைவர் மார்ட்டின் லூதர் கிங் நினைவு நாள்! எனவே, தனது படையிலிருக்கும் கணிசமான கறுப்பின துருப்புகளை மயக்குவதற்கு போரை அன்று தொடங்காமல் மறுநாள் தள்ளி வைத்தார், புஷ்!

ஜனவரி 17 ந்தேதி இந்திய நேரப்படி பின்னிரவு 3.20 மணிக்கு ஈராக்கின் மீது அமெரிக்க ராணுவம் அலை அலையாகச் சென்று குண்டுமழை பொழிந்தது. பாக்தாத் நகரம் பற்றியெரிந்தது. அப்போது பதுங்கு குழிகளுக்கு ஓடிய பல லட்சக்கணக்கான மக்கள் இது நாள் வரையில் என்ன ஆனார்கள் என்று தெரியவில்லை! ஏறக்குறைய 3 லட்சம் மக்கள் இறந்திருப்பார்கள் என்று நம்பப்படுகிறது.

பெருந்திரளான மக்களை போரில் கொலை செய்தும், பாக்தாத் நகரத்தை சாம்பலாக்கியும் அமெரிக்காவின் யுத்த தந்திரம் வெற்றி பெறவில்லை. இது மட்டுமல்ல; அமெரிக்காவின் யுத்த இலக்குகள், தாக்குதல் வியூகங்கள் கோமாளித்தனமாகவும் தன்னையே பலவீனப்படுத்திக் கொள்ளும் முட்டாள் கூட்டம் என்பதையும் காட்டிவிட்டது.

யுத்தம் தொடங்கிய ஒன்றரை நாளிலேயே 'ஈராக்கின் அனைத்து விமானம் மற்றும் ஏவுகணை தளங்களை அழித்து விட்டோம்; வான் பிரதேசத்தை எங்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்து விட்டோம்' என்று அமெரிக்கா கூறியது. ஆனால் தலையில் குட்டியது மாதிரி ஈராக் ஒரே நேரத்தில் இரண்டு திசைகளில் தனது 'ஸ்கட்' ஏவுகணைகளை செலுத்தியது.

அமெரிக்காவின் தாக்குதல் படைகள் நின்று கொண்டிருக்கும் சவூதி அரேபியாவின் துறைமுக நகரம் தகரான் மற்றும் தலைநகரம் ரியாத் மீதும் அமெரிக்காவின் எடுபிடி நாடான இஸ்ரேல் தலைநகர் டெல் அவிவ் மீதும் ஜெருசெலம், ஹைபா நகரங்கள் மீதும் ஏவுகணைகளை வீசியது.

☆ தொடர்ந்து 100க்கும் மேற்பட்ட 'ஸ்கட்' ஏவுகணைகளை இந்த நகரங்கள் மீது வீசி பெரும் அழிவை ஈராக் ஏற்படுத்தியது. இதில் சவுதியின் எண்ணெய் கிணறுகளும் நாசமானது.

☆ வளைகுடாவில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த அமெரிக்க சண்டைக் கப்பல்கள் மீது விமானங்கள் மூலம் குண்டுகள் வீசியது. கடல் கண்ணி வெடிகளை புதைத்து அவற்றின் நடமாட்டங்களைக் கட்டுப்படுத்தியது. பல லட்சம் பீப்பாய் கச்சா எண்ணெயைக் கடலில் கொட்டி நீரை மாசு படுத்தியது.

☆ பிரிட்டன், அமெரிக்கா, பிரான்ஸ் விமானப்படையினரை சிறைப் பிடித்து வானொளியில் காட்டி மிரட்டியது.

☆ அட்டை, பிளாஸ்டிக்கில் செய்த விமானங்கள், ஏவுகணை வீச்சு பீரங்கிகள் முதலியவற்றை ஏராளமாக நிறுத்தி அமெரிக்காவை முட்டாளாக்கியது; அவர்களுடைய ராணுவ சக்தியை விரயம் செய்தது.

☆ தனது, விமானப் படைகள், ஏவுகணை

**அமெரிக்கா மற்றும் பிற ஏகாதிபத்தியங்கள் இப்போரை நீதிக்காகவோ, குவைத்தின் இறையாண்மையைக் காப்பதற்காகவோ நடத்தவில்லை. உலகின் தங்க வயலாக இருக்கும் குவைத்தின் எண்ணெய் வளத்தைச் சுரண்டவும், தங்களுடைய எடுபிடி ஷேக்குகளது ஆட்சியை நிறுவுவதற்கும்தான் மூர்க்கமாக சண்டை போடுகிறார்கள்.**



படிப்பகம்

www.padippakam.com

'கள், பீரங்கிகள், முதலியவற்றை நவீன ராட்சத பதுங்கு குழிகளில் மறைத்து தாக்குதலில் ஈடுபடுத்தியது.

☆ மொத்த அரபு மக்களின் எதிரியான ஜியோனிச இஸ்ரேலை விடாமல் தாக்கியது. அதற்கு ஆத்திரமூட்டித் தன்னை தாக்க வைப்பதன் மூலம், அமெரிக்க ஆதரவு மற்றும் நடுநிலை அரபு நாடுகளை தம் பக்கம் இழுக்க சளைக்காமல் முயற்சித்தது; அதன் மூலம் அமெரிக்காவை பீதியிலேயே நிறுத்தி வைத்திருந்தது.

☆ குறுகிய கால அதிரடிப் போருக்கு எத்தணித்த அமெரிக்காவை, வேதனையும், சிக்கலும், விரயமும் நிறைந்த நீண்ட கால போரில் தள்ளியது.

☆ உலகத்திலுள்ள அனைத்து முஸ்லீம் நாட்டு மக்களும், தங்கள் அரசுகளை அமெரிக்க எதிர்ப்பு - ஈராக் ஆதரவு நிலைப்பாடு எடுக்கும்படி நிர்ப்பந்திக்கும் போராட்டங்கள் நடத்துமளவுக்கு, தான் நடத்திய இஸ்லாம் ''புனிதப் போர்'' பிரச்சாரத்தில் வெற்றியடைந்தது. குவைத்தை ஆக்கிரமித்ததை மறைப்பதில் இதனால் தற்காலிக வெற்றியடைந்தது.

— இவையெல்லாம் ஏதோ அதிபர் சதாம் உசேனின், நிபுணத்துவம் வாய்ந்த யுத்த தந்திரத்துக்கு கிடைத்த வெற்றிகளோ, அவருடைய மன உறுதி, போர்ப் பயிற்சி, அரசியல் தேர்ச்சி இவற்றாலோ அல்ல. மாறாக, சதாம் உசேனின் இப்போதைய ராணுவ மற்றும் அரசியல் சாகசங்கள் அனைத்திற்கும் அமெரிக்காவும், அதனுடைய சகபாடிகளும் தான் வழிகாட்டிகள்!

> **புரட்சியாளர்கள் என்று கூறிக்கொள்பவர்கள் கூட, இப்போது சதாம் உசேனை பற்றி தடுமாற்றம் அடைகிறார்கள். போர் துவங்குவதற்கு முன்பு வரை சதாம் உசேனை குவைத் ஆக்கிரமிப்பாளன் என்று சரியாகவே கணித்தார்கள். அமெரிக்கா ஈராக்கின் மீது போர் தொடுத்தவுடன் சதாம் உசேனை பாதுகாப்பாக பின்னால் மறைத்துக் கொள்கிறார்கள்.**

கடந்த 10 ஆண்டுகளில் அமெரிக்காவும் மேற்கத்திய ஏகாதிபத்தியங்களும் ஆயுத விற்பனையில் - சந்தை பிடிப்பதில் ஒன்றுக்கொன்று வெறியுடன் போட்டி போட்டன. உலக ஆயுத தளவாடங்களில் பாதிக்கும் மேற்பட்ட விற்பனையை, இந்த அரபு நாடுகளின் தலையில் அவை கட்டின.

இப்போது பத்திரிகைகளில் வரும் செய்திகளைப் பார்த்தாலே இந்த உண்மை புரியும். சதாம் உசேனும் அவரது ஆயுதங்களும் மறைந்திருக்கும் 300க்கும் மேற்பட்ட அணுஉலை மற்றும் பாதுகாப்பு நவீன பாதாளக் கோட்டைகளைக் கட்டிக் கொடுத்ததும் கூட இந்த நியாயவான்கள்தான்!

அதற்கான மதிப்பாக சதாம் உசேனிடமிருந்து அவர்கள் கப்பல் கப்பலாக எண்ணெயும் டாலரையும் வாங்கிக் கொண்டார்கள். (இவ் விவரங்களும் இப்போது ஏராளமான பத்திரிகைகளில் வெளிவந்து நாறுகிறது). இந்த கொழுத்த வியாபாரம் தொடர்ந்து நடப்பதற்காகத்தான் வளைகுடா பகுதியை சதி மூலம் நிரந்தர போர்க்களமாக்கினர். உதாரணம் அரபு - இஸ்ரேல் மற்றும் ஈராக் - ஈரான் யுத்தங்கள்.

இப்போதும்கூட அவர்கள் இப்போரை நீதிக்காகவோ, குவைத்தின் இறையாண்மையைக் காப்பதற்காகவோ நடத்தவில்லை. உலகின் தங்க வயலாக இருக்கும் குவைத்தின் எண்ணெய் வளத்தை சுரண்டவும், தங்களுடைய எடுபிடி ஷேக்குகளது ஆட்சியை நிறுவுவதற்கும்தான் மூர்க்கமாக சண்டை போடுகிறார்கள். குவைத்தின் வளத்தைப் பார்த்தாலே இது தெரியும்.

அங்கு ஆண்டுக்கு எடுக்கும் எண்ணெயின் அளவு 9.1 கோடி டன். ஈராக்கில் 13.9 கோடி டன்! (இந்தியா ஆண்டொன்றுக்கு உபயோகப்படுத்தும் எண்ணெயின் அளவு 5.4 கோடி டன். அமெரிக்கா ஆண்டொன்

# உளவியல் யுத்தம்! புரட்சியாளர்கள் தடுமாற்றம்!

*அமெரிக்கா வழக்கம் போல் தனக்கு ஆதரவாக போர் வதந்திகளை பிரம்மாண்டமான அளவில் உலகம் முழுக்க பரப்புகிறது. இதற்காக எல்லா நாடுகளிலும் உள்ள கூலி எழுத்தாளர்களையும் பிரச்சார நிறுவனங்களையும் தங்களுடைய தூதரகங்கள் மூலம் 'பராமரிக்கிறது'. இப்போது சதாம் உசேனை பற்றிய, அவதூறு அதனுடைய குறிப்பான இலக்கு.*

*சர்வாதிகாரி ஸ்டாலின் வாரிசு சதாம் உசேன் என்று கற்பனைக்கு எட்டாத கதைகளை கூறுகிறது. இன்னொரு இட்லர் சதாம் உசேன் என்று கூறி எப்படி குழந்தை பருவத்திலிருந்தே அவரிடம் பயங்கரவாத குணங்கள் இருந்தன என்று விவரிக்கிறது. இன்னும் ஒருபடி மேலே சென்று ஜார்ஜ் புஷ் வீடு இல்லாமல் வீதியோரம் தூங்கி அதிபர் சேவை செய்வது போல ''சொகுசு அரண்மனையில் சதாம் உசேன்'' என்று பிதற்றுகிறது!*

*இவ்வாறான செய்திகளையும் கத்தை கத்தையாக தம்மிடம் இருக்கும் வளைகுடா போர் படங்களையும் பெரும் பத்திரிகைகளுக்கு சென்னையில் இலவசமாக விநியோகிக்கிறது. அமெரிக்க தூதரகம். இதைத் தான் உளவியல் ரீதியான யுத்தம் என்கிறார்கள் பெரும் அறிவாளிகள்!*

*இதே அளவுக்கு இல்லையானாலும் இதே நோக்கங்களுக்காக சதாம் உசேனைப் பற்றி பல வரலாறுகளை புனைந்து அனுப்புகின்றன, ஈராக் ஆதரவு முஸ்லீம் நாடுகள். வீரம் என்றால் சதாம் உசேன் என்று சாகச கதைகள் சொல்கின்றன. போர் துவங்கியதிலிருந்து உலகில் இருக்கும் முஸ்லீம் தாய்மார்கள் எல்லாம் பிறக்கும் தங்கள் குழந்தைகளுக்கு சதாம் உசேன், சதாம் உசேன் என்று பெயர் வைப்பதாக ஊதி பெருக்குகிறார்கள்.*

*புரட்சியாளர்கள் என்று கூறி கொள்பவர்கள் கூட இப்போது சதாம் உசேனை பற்றி தடுமாற்றம் அடைகிறார்கள். போர் துவங்குவதற்கு முன்புவரை சதாம் உசேனை குவைத் ஆக்கிரமிப்பாளன் என்று சரியாகவே கணித்தார்கள். அமெரிக்கா ஈராக்கின் மீது போர் தொடுத்தவுடன் சதாம் உசேனை பாதுகாப்பாக பின்னால் மறைத்துக் கொள்கிறார்கள்.*

*ஈராக் அரசையும் சதாம் உசேனையும் குவைத்தை விட்டு வெளியேறுமாறு இந்த நேரத்தில் நிர்பந்திக்கக் கூடாது என்கிறார்கள். அமெரிக்காவிற்கெதிரான உலக மக்களின் ஒருமித்த தாக்குதலை அது திசை திருப்பிவிடும் என்கிறார்கள். இல்லை; திசை திருப்பி விடாது; இருவரும் ஒரே தாக்குதல் திசையில் இருப்பவர்கள் என்பதை மக்களுக்கு தெளிவாக புரிய வைக்கும்.*

*எதிரி மீள முடியாத நெருக்கடியில் மாட்டிக் கொண்டிருக்கும்போது தான் நாம் நமது, சக்தி முழுவதையும் திரட்டி வீழ்த்த வேண்டும் என்னும் மார்க்சிய அரிச்சுவடியை வசதியாக மறைத்துக் கொள்கிறார்கள். உதாரணத்திற்கு இலங்கையை இந்தியா ஆக்கிரமித்துக் கொண்டிருக்கும்போது இலங்கையிலிருந்து வெளியேற சொல்லி இந்தியா மீது அமெரிக்கா போர் தொடுத்தால் இவர்கள் வாதப்படி இலங்கையை மேலும் இறுக்கமாக இந்தியா பிடித்துக் கொண்டு அமெரிக்காவை அடிக்க வேண்டும்!*

*இவ்வாறான 'நாட்டு பற்றுள்ள' புரட்சியாளர்களைதான் இந்திய அரசு தேடிக் கொண்டிருக்கிறது. இன்னொரு வாதத்தை பார்ப்போம். பிரிந்துபோன பாகிஸ்தானை, இந்து மதவெறி அரசு வலுக்கட்டாயமாக சேர்த்துக் கொள்ளும் போதும் இதே சதாம் உசேன் அளவுகோலைதான் பிரயோகிக்க வேண்டும். செய்வார்களா?*

*இல்லை, இல்லை. சதாம் உசேன் பாலஸ்தீனியர்களுக்கு குரல் கொடுக்கிறார் என்றால், ராஜீவ் ஈழ விடுதலைக்கு குரல் கொடுப்பதை மட்டும் ஏன் எதிர்க்கிறார்கள், இந்த புரட்சியாளர்கள்?*

*அமெரிக்க போரில் இப்போது ஈராக் மக்கள் செய்ய வேண்டியது எல்லாம், சதாம் உசேனை குவைத்திலிருந்து வெளியேற நிர்பந்தித்து அமெரிக்காவுக்கு எதிரான தற்காப்பு போரில் ஊன்றி நிற்பது தான்!*

படிப்பகம்

www.padippakam.com




போர் வெறியர்களுக்கு எதிராக உலகெங்கும் பற்றிப் பரவும் மக்கள் ஆர்ப்பாட்டம்.

றுக்கு உபயோகப்படுத்தும் எண்ணெயின் அளவு 78 கோடி டன்)

நிலத்தடி உலக எண்ணெய் இருப்பில் 10% குவைத்தில் இருக்கிறது. மொத்த அரபு நாட்டிலும் 60% இருக்கிறது. குறிப்பாக ஈராக்கும் குவைத்தும் இணைந்த மத்திய கிழக்கு அரபு நிலத்தடி பரப்பில்தான் 40%, அதாவது ஒப்பீட்டளவில் அதிகம் இருக்கிறது என்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இந்த வளத்தில் சுரண்டிய பணத்தை அமெரிக்கா மற்றும் அதன் கூட்டாளி நாடுகளில்தான் குவைத்தின் மன்னர் அமிர் குவித்து வைத்துள்ளார். அமெரிக்காவில் 30 பில்லியன் டாலர்! அதாவது 51,000 கோடி ரூபாய்! (ரகசிய பணம் எவ்வளவோ?) ஜப்பானிலும் ஜெர்மனியிலும் மிக மிக அதிகம் மூலதனம் போட்டுள்ள ஒரு சில ஷேக்குகளில் குவைத்தின் அமிரும் ஒருவர்.

இவையில்லாமல், தமது குவைத் அரசு சார்பிலும் இந்நாடுகளில் 20,000 கோடி டாலரை கடனாகவும் மூலதனமாகவும் போட்டு வைத்துள்ளார். சமீபத்திய ஆண்டுகளில் அமிருக்கு எண்ணெய் வருமானத்தை விட வெளிநாடுகளில் போட்டு வைத்துள்ள மூலதனத்திலிருந்து வரும் வருமானம் தான் அதிகம் என்று பல புள்ளி விவரங்கள் வருகிறது. இதுபோல் அரபு நாடுகள் மொத்தமும் இந்நாடுகளில் குவித்துள்ள பணம் 67,000 கோடி டாலர்!

ஆயுத விற்பனைக்கும் நிதி மூலதனத் தேவைக்கும் அரபு நாடுகள் இவர்களுக்கு காமதேனு மாதிரிக் கறக்கின்றன. இதை எங்கே சதாம் உசேன் கைப்பற்றிக் கொள்வாரோ என்ற வெறியில்தான் இந்நாடுகள் தங்கள் பற்களையும் நகங்களையும் கொண்டு ஈராக்கை குதறியெறிய கிளம்பியுள்ளன.

இந்த வளைகுடா யுத்தத்தில் இவர்கள் விலை மதிப்பிட முடியாத இன்னொரு பலனையும் அடைகின்றனர். இரண்டாம் உலகப் போருக்கு பிறகு, ஏறக்குறைய அரை நூற்றாண்டுக்கு பிறகு உலக அளவில் அதிகார பூர்வமாக துவங்கியிருக்கும் மாபெரும் யுத்தம் இது.

அமெரிக்கா மட்டும் கடந்த 10 ஆண்டுகளில் தயாரித்திருக்கும் யுத்த தளவாடங்களின் மதிப்பு 3,00,000 கோடி டாலர்! அதாவது 510,00,00,000 கோடி ரூபாய்! இந்த அதி நவீன தானியங்கி மின்னணு ஆயுதங்களை அதன் முழு மதிப்பு, இலக்கு நாசம் இவற்றையெல்லாம் சோதித்துப் பார்க்க ஈராக் மக்களை நாசம் செய்கிறார்கள். மூன்றாம் உலக நட்சத்திரப் போருக்கு முன் நடக்கும் வரலாறு காணாத மிகப் பெரிய முதல் மின்னணு போர் இது! மூன்றாம் உலகப் போருக்கான வெள்ளோட்டம் ஈராக் மக்களின் ரத்தத்தில் நடத்தப்படுகிறது.

போர் ஆரம்பித்த சில நாட்களிலேயே இதில் மிகச்சிறந்த ஆயுதங்கள் எவை, எவை; அதைத் தயாரிக்கும் நிறுவனங்கள் எது எது என்று பிரிக்கப்பட்டு அக்கம்பெனிகளின் பங்கு மதிப்புகள் அமெரிக்கப் பங்கு சந்தையில் கிடுகிடு என்று உயர்ந்தது. இந்த கிடுகிடு உயர்வில் முன்னணியில் இருப்பது அமெரிக்காவுக்கு 'பேட்ரியாட்' நாசகார ஏவுகணையை தயாரித்துக் கொடுத்த ரேத்யான் நிறுவனமும் எஃப்-15 ரக குண்டு வீச்சு விமானத்தை தயாரித்துக் கொடுத்த மக்டோனல் டக்ளஸ் நிறுவனமும் தான்.

ஈராக் மக்களின் ரத்தத்தை வைத்து காட்டுமிராண்டித்தனமான இன்னொரு வியாபாரமும் கொடிகட்டிப் பறக்கிறது. ஈராக்கில் அமெரிக்கா குண்டுகளை கொட்டக் கொட்ட அது அமெரிக்காவிலும் உலகம் முழுவதும் பணமாக கொட்டுகிறது.

ஏ.பி.சி., சி.பி.எஸ்., என்.பி.சி., சி.என்.என்., என்ற பன்னாட்டுப் பகாசுர தகவல் - தொடர்பு, மேற்கத்திய செய்தி நிறுவனங்கள் யுத்தத்தை நேரடியாக படம் பிடித்து செயற்கை கோள் மூலம் அவற்றை உலகம் முழுவதும் சினிமா போல் விற்கின்றன். இந்த யுத்தப் படங்களுக்கு நடுவே காட்டப்படும் நுகர்பொருள் விளம்பரங்கள் கோடி கோடியாக டாலர்களை கொட்டுகின்றன, ஏ.பி.சி. நிறுவனம் மட்டும் இவ்வாறு 2.3 கோடி டாலர் சம்பாதித்தது.

இன்னொரு புறம், இப்போரைக் காரணம் காட்டி மூன்றாம் உலக நாடுகளின் அரசுகள் அனைத்தும் அத்தியாவசியப் பொருட்களின் விலையை 'ராக்கெட்' வேகத்துக்கு ஏற்றிவிட்டன. அரசின் சேவைத் துறைகள், சமூகநலத் திட்டங்கள் அனைத்தையும் பாதியாக வெட்டி விட்டன. அரசுகளின் துணையுடன் வர்த்தக சூதாடிகள் விலையை உயர்த்தி பதுக்க ஆரம்பித்து விட்டார்கள்.

வங்க தேசத்தில் 100 மடங்கு போக்குவரத்து கட்டணங்கள் உயர்ந்து விட்டது. இந்தியாவில், சந்திரசேகர் அரசு ரயில் மற்றும் பேருந்து போக்குவரத்துகளை 25% குறைத்து விட்டது. சங்கிலித் தொடராக எல்லா பொருட்களின் விலையும் விஷம் போல் ஏறிவிட்டது. 'தேசிய நிவாரண நிதி' என்று அரசே மக்கள் முன் கையேந்த ஆரம்பித்து விட்டது.

யுத்தம் கொடியது! அநீதியான யுத்தம் மனித குலத்திற்கே பெரும் நாசத்தை ஏற்படுத்தும் குரூர வேதனை நிறைந்தது. ஈராக் மக்கள் பதுங்கு குழிகளில் தினம் தினம் ஈசல் போல் இறந்து கொண்டிருக்கிறார்கள். உலக மக்கள் வீரத்துடன் ஆதிக்க, ஆக்கிரமிப்பு போர் வெறியர்களுக்கெதிராக பழிதீர்க்க வீதிகளில் கலகக் கொடி உயர்த்தி விட்டார்கள்.

இறுதி வெற்றி அமெரிக்காவுக்கோ, சதாம் உசேனுக்கோ அல்ல, உலக மக்களுக்கு! இந்திய சகோதரர்களே, ஆதிக்க வெறியர்களுக்கெதிரான போரில் உலக மக்களின் போராட்டங்களுக்கு நாமும் தோள் கொடுப்போம். புரட்சிகர கட்சியின் பின்னால் அணிதிரண்டு போர் வெறியர்களுக்கெதிரான எதிர்ப்பு போருக்கு தலைமை தாங்குவோம்!

●பச்சையப்பன்

ரசாயனப் போருக்கு பாதுகாப்புக் கவசம்; மக்களுக்கு?





படிப்பகம்

www.padippakam.com

# வளைகுடா போருக்கு எதிராக....

வளைகுடா யுத்தத்தை எதிர்த்து அமெரிக்க வல்லூறை அங்கிருந்து வெளியேற கோரி சென்னையில் ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது. முற்போக்கு மாணவர் சங்கம் (RSU), மக்கள் கலை இலக்கியக் கழகம் (PALA), புரட்சிகர இளைஞர் முன்னணி (RYF), இ.பொ.க. (மா.லெ) செங்கொடி, மாணவர் இஸ்லாமியர் இயக்கம் (SIM) ஆகிய அமைப்புகள் இதில் பங்கெடுத்துக் கொண்டன.

22.1.91 அன்று காலை சென்னை அண்ணாசாலை காயிதே மில்லத் கல்லூரியில் இருந்து புறப்பட்ட ஆர்ப்பாட்ட ஊர்வலம் அமெரிக்க தூதரகத்தை நோக்கி முன்னேறியது. ஆரம்பம் முதலே போலீசு அதிகாரிகள் கூட்டம், வீண் கெடுபிடிகளில் இறங்கி தொடர்ந்து ஆத்திரமூட்டியது. பலமுறை வலியுறுத்தியும், அமெரிக்க அதிபர் ஜார்ஜ் புஷ் கேலி உருவ அட்டைகளை, கொடும்பாவியை ஊர்வலத்தில் எடுத்து செல்ல தடை விதித்தது. ஏறக்குறைய 150 போலீசு, அரை டஜன் ஜீப்புகளில் ஊர்வலத்தை கைதிகள் கூட்டம் போல் சுற்றிவளைத்து பாதுகாப்பு தருகிறோம் என்று நக்கல் செய்தது! ஊர்வலத்தின் வழிநெடுக இவ்வாறு தன்னுடைய சில்லறை புத்தியை காட்டியது.

இருந்தும், தோழர்கள் ஆத்திரமூட்டலுக்கு பலியாகாமல் தங்கள் ஆர்ப்பாட்ட இலட்சியத்தில் ஊன்றி உணர்ச்சிமிகு முழக்கங்களிட்டனர். தூதரகத்திற்கு 100 அடிக்கு எதிரில் ஆர்ப்பாட்டம் செய்ய சட்டப்படி அனுமதி இருந்தும் போலீசு திமிருடன் மறுத்தது. இதைப்பற்றி ஊர்வலத் தலைமை தோழர்கள் போலீசுடன் விவாதித்துக் கொண்டிருந்த போது, மீண்டும் போலீசு தோழர்களை முறைகேடாக அணுகியது.

போலீசு, கட்டவிழ்த்துவிட்ட வெறிநாய் கூட்டம் போல் கூட்டத்தை அப்படியே சுற்றி வளைத்துக் கொண்டு மூர்க்கமாக தடியடி நடத்தியது. சுமார் 12 தோழர்களை மயக்கமடையும் வரை அடித்து நினைவிழந்த நிலையில் ஜீப்பில் தூக்கி வீசியது. ரத்த காயத்துடனேயே 40 தோழர்களை கைது செய்தது. அந்த இடமே பெரும் பதற்றமடைந்து, பாதசாரிகள் பீதியில் உறைந்தனர்.

காயம்பட்ட தோழர்களிடமிருந்து போலீசு சூறையாடிய பொருட்களின் விவரம்: கைக்கடிகாரம் 6, மூக்கு கண்ணாடி 4, சைக்கிள் 15, பல புத்தகங்கள், கைக்குறிப்பேடுகள்.

உலக போலீசுகாரன் அமெரிக்காவைப் போலத்தான் உள்ளூர் போலீசுக்காரர்களும் ஒரே மாதிரி சிந்திக்கிறார்கள், செயல்படுகிறார்கள். தாக்குவதிலும் திருடுவதிலும்கூட!

● ● ●

ஆதிக்க வெறியன் அமெரிக்காவுக்கு எதிராகவும் ஆக்கிரமிப்பாளன் ஈராக், குவைத்தை விட்டு வெளியேறவும் கோரி திருச்சியில் 22.1.91 அன்று ஆர்ப்பாட்ட ஊர்வலம் நடத்தப்பட்டது. இதில், மக்கள் கலை இலக்கியக் கழகம், பகத்சிங் இளைஞர் முன்னணி, ரயில்வே ஒர்க்கர்ஸ் யூனியன் ஆகிய அமைப்புகளின் தோழர்கள் கலந்து கொண்டனர். சிந்தாமணி அண்ணாசிலையிலிருந்து முழக்கங்களுடன் ஊர்வலம் புறப்பட்டு தெப்பக்குளம் அஞ்சல் அலுவலகத்தை வந்தடைந்தது. அங்கு எழுச்சிமிகு ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது. ஆர்ப்பாட்டத்தின் இறுதியில் உரையாற்றிய தோழர் தமிழ்மணி, அமெரிக்க கழுகு இதுவரை உலகநாடுகள் பலவற்றின் மீது செய்த ஆக்கிரமிப்புகள், அரசியல் கிரிமினல் குற்றங்களை தோலுரித்தார். இப்போது அது குவைத்தை மீட்க போடும் ஜனநாயக அரிதாரத்தை கலைத்து அதன் ஆதிக்க வெறியை அம்பலப்படுத்தினார். போர்வெறியர்களுக்கு எதிரான இந்த ஆர்ப்பாட்ட ஊர்வலம் மக்களிடம் சிறப்பானதொரு வரவேற்பைப் பெற்றது.

போலீசால் தாக்குண்டு, அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெறும் தோழர்கள். படத்தில் இடதுபக்கமிருந்து தோழர் ஜெயகாமராஜ் (ம.க.இ.க.), தோழர் நீண்ட பயணம் சுந்தரம் (இ.பொ.க. மா.லெ. செங்கொடி), தோழர் கிருஷ்ணன் (மு.மா.ச) இவர்களை பேட்டி எடுக்க வந்த முதலாளித்துவ பத்திரிக்கையாளர்களைக் கூட மிரட்டி, வெளியேற்றியது, போலீசு.



# காவிரி நீர்: வஞ்சகத் தீர்ப்புக்கு எதிராக

காவிரியில் நீரில்லை; முறையாக பருவ மழை பெய்யும் கர்நாடகா அரசின் அடாவடித்தனத்தால் போதிய நீர்வரத்தில்லை. தமிழகத்தில் குறிப்பாக தஞ்சையில் சம்பா பயிர் வாடுகிறது. ஆனால், இந்நிலையில் தமிழகத்திற்கு இடைக்கால நீர் வழங்க உத்தரவிட காவிரி நீர் நடுவர் மன்றத் தலைவரான நீதிபதி சி.முகர்ஜி மறுத்துள்ளார். இதைக் கண்டிக்கும் வகையில் முகர்ஜியின் கொடும்பாவி எரிப்புப் போராட்டம் தஞ்சை - திருக்காட்டுப்பள்ளி, அதிரை முதலிய இடங்களில் நடந்தன.

திருக்காட்டுப்பள்ளி காந்திசிலை முன்பாக 11.1.91 அன்று திருவையாறு வட்ட விவசாயிகள் விடுதலை முன்னணி இப்போராட்டத்தை நடத்தியது.

கொடும்பாவி எரிப்பு போராட்டத்திற்கு முன்னதாகவே போலீசு வந்து குவிந்தது. கொடும்பாவி எரிக்க அனுமதி மறுத்து பிரச்சாரம் மட்டும் செய்ய அனுமதித்தது போலீசு. ஆனால், வி.வி.மு.வினர் கொடும்பாவி எரித்தே தீருவோம் எனக்கூறி போராட்டத்தை நடத்தினர். 150க்கும் மேற்பட்டவர்கள் கூடினர். தோழர் ஜெயசீலன், காவிரி நீரில் உள்ள தமிழக மக்களின் உரிமை - கர்நாடகா அரசின் அடாவடித்தனம் - மத்திய அரசின் இரட்டை வேடம் - தமிழக அரசின், ஓட்டுக் கட்சிகளின் பிழைப்புவாதம் முதலானவற்றை விளக்கி உரை நிகழ்த்தினார். இறுதியாக தோழர்கள் கொடும்பாவி எரிக்க முற்பட்ட பொழுது கைது செய்து அழைத்துச் சென்று பின்னர் ஒரு மணி நேரத்திலேயே விடுவித்தது போலீசு.

அதிரையில் 13.1.90 அன்று பட்டுக்கோட்டை வட்ட வி.வி.மு.வால் கொடும்பாவி எரிப்பு போராட்டம் நடத்தப்பட்டது. முகர்ஜியின் கொடும்பாவியுடன் அதிரை பள்ளிவாசல் அருகிலிருந்து ஊர்வலம் தோழர் சந்திரசேகரன் தலைமையில் புறப்பட்டது. கொடும்பாவி எரிப்பதன் நோக்கத்தை தோழர் காமராஜ் விளக்கிப் பேசினார். ஊர்வலம் கடைவீதி வழியாக வந்தவுடன் ஆத்திரமடைந்த போலீசு இன்ஸ்பெக்டர் முத்துகிருஷ்ணன், கொடும்பாவியையும் தோழர்களையும் கைது செய்ய முற்பட்டார்! உடன் தோழர்கள் கொடும்பாவியை எரித்தனர். போலீசு சில தோழர்களை கைது செய்தும் கொடும்பாவி தீயை அணைத்து, வண்டியில் தூக்கி போட்டுக் கொண்டும் போனது. அதன் பின் பகுதி மக்களின் பெரும்பான்மை ஆதரவுடன் பிற தோழர்கள் ஊர்வலத்தை தொடர்ந்தனர். போலீசு, 9 பேர் மேல் வழக்குப் பதிவு செய்து கொண்டு அன்று இரவே விடுவித்தது.

தஞ்சையில் முகர்ஜியின் கொடும்பாவி எரிப்புப் போராட்டம் மக்கள் கலை இலக்கிய கழகத்தினரால் நடத்தப்பட்டது. ஆறு தோழர்கள் கைது செய்யப்பட்டு அன்றே விடுவிக்கப்பட்டனர்.

படிப்பகம்

www.padippakam.com

# ராஜீவின் சந்தேக நோய்

**பாசிசத்தின் கூடவே பிறந்த நோய் சந்தேகம். பாசிஸ்டுகள் தம் நிழலைக் கூட நம்புவதில்லை. அது தன்னை அழிக்கத்தான் துரத்துகிறதென்று அஞ்சி அஞ்சிச் சாகிறார்கள். பாசிச ராஜீவ் இதற்கு விதிவிலக்கல்ல. சரத்பவாரை வீழ்த்தும் அவரது முயற்சிகள் இதையே காட்டுகின்றன.**

தமிழகத்தில் கருணாநிதி ஆட்சி நிலைக்குமா, கவிழுமா என்ற இக்கட்டான நிலையில் உள்ளதைப் போலவே காங்கிரசு ஆளும் மகாராஷ்டிர மாநிலமும் ஆட்சிக் கவிழ்ப்பு பீதியில் சிக்கிக் கொண்டுள்ளது. முதல்வர் சரத்பவார் மீது அவரது அமைச்சரவையைச் சேர்ந்த 4 மூத்த மந்திரிகளும் சில எம்.பிக்களும் அவர் மீது சில குற்றச் சாட்டுகளை வைத்து பதவி விலகக் கோரி கடந்த மாதத்தில் கலகக் கொடி தூக்கினர். அதைத் தொடர்ந்து ராஜீவ் அனுப்பிய பார்வையாளர்கள் நிலைமையை ஆராய்ந்து அவருக்குத் தெரிவித்த பிறகு, டெல்லி சென்ற முதல்வர் பவார் தனது பதவியை ராஜினாமா செய்துள்ளார். இருப்பினும் புதிய முதல்வராக யாரை நியமிப்பது என்று இன்னமும் தீர்மானிக்க முடியாமல் காங்கிரசு தலைமை குழம்பிக் கிடக்கிறது.

முன்னாள் மகாஷ்டிர முதல்வர்களான அந்துலே, எஸ்.பி.சவாண், மந்திரிகள் அதிக், ஷிண்டே மற்றும் காங்கிரசுப் பொதுச் செயலாளர்களில் ஒருவரான வி.என்.காட்கில் ஆகியோரைக் கொண்ட அதிருப்தி கோஷ்டியினர் ராஜீவின் ஆலோசனைப்படியே பவாருக்கு எதிராகக் கலகம் செய்கின்றனர் என்றும், ராஜீவின் உதவியாளர் ஆர்.கே.தவாண் இதைத் தூண்டிவிட்டு நடத்துகிறார் என்றும் பத்திரிக்கைகள் எழுதுகின்றன. இத்தனை நாளும் உறங்கிக் கிடந்த பவாரின் ஊழல்களை அதிருப்தி கோஷ்டியினர் அவிழ்த்து விடுவதைக் காட்டியும், ராஜீவ் அனுப்பிய பார்வையாளர்கள் பவாரின் ஆதரவாளர்களிடம் கருத்து கேட்காமல் புறக்கணித்ததைக் காட்டியும் ராஜீவின் உத்திரவு இல்லாமல் இவ்வாறு நடந்திருக்க முடியாது என்றும் கூறுகின்றனர்.

தென் மாநிலங்களில், அதுவும் மிகக் குறைந்த மூன்று மாநிலங்களில் மட்டும் மூச்சு விட்டுக் கொண்டிருக்கும் காங்கிரசு ஆட்சிகளில், மகாராஷ்டிர ஆட்சியை அதன் தலைவர் ராஜீவே கவிழ்க்க முயற்சிப்பது ஏன்? பவாருக்கு எதிராக அதிருப்தி கோஷ்டியை கலகம் செய்யத் தூண்டுவது ஏன்? இதற்கு முன் கர்நாடக முதல்வர் வீரேந்திர பட்டீலையும், ஆந்திர முதல்வர் சென்னா ரெட்டியையும் பதவியிலிருந்து நீக்கியதுபோல இப்போது சரத்பவாரையும் நீக்கக் காரணம் என்ன?

### அதிருப்தி கோஷ்டியின் குற்றச்சாட்டும் பவாரின் பதவி பறிப்பும்

சரத்பவார் கட்சிக் கட்டுப்பாட்டை மீறிச் செயல்படுகிறார்; தலைமைக்கு (ராஜீவுக்கு) விசுவாசமாக நடந்து கொள்ள மறுக்கிறார். ராஜீவுக்கு மாற்றுத் தலைவராக உருவாகும் நோக்கத்துடன் கட்சிக்குள் கோஷ்டி கட்டிக்கொண்டு ரகசிய சதிகளில் இறங்குகிறார் என்பதுதான் அதிருப்தியாளர்களின் முக்கிய குற்றச்சாட்டுகள்.

☆ முந்தைய ஆந்திர, கர்நாடக முதல்வர்களான சென்னா ரெட்டி, வீரேந்திர பட்டீலுடன் சேர்ந்து கொண்டு ராஜீவுக்கு எதிராக தனிக்குழுவாக வளர சரத்பவார் முயற்சித்தார். மண்டல் அறிக்கை பற்றி ராஜீவின் கருத்துக்கு எதிராக தென் மாநிலங்கள் சுதந்திரமாக முடிவெடுக்க வேண்டுமென வாதிட்டார்.

☆ வகுப்புவாத சக்திகளான பாரதீய ஜனதா, சிவசேனாவுக்கு எதிராக காங்கிரசு தலைமை பிரச்சாரம் செய்துவரும்போது, அதற்கு எதிரான வகையில் பவார் மாநில அளவில் வகுப்புவாத சக்திகளிடம் இணக்கமாக நடந்து கொள்கிறார்.

☆ ராஜீவின் விருப்பத்துக்கு மாறாக சந்திரசேகருடன் பவார் கூடிக் குலாவுகிறார். இதன்மூலம் அகில இந்திய அரசியலில் செல்வாக்கு பெறத் துடிக்கிறார். இந்த நோக்கத்துடன் கோஷ்டிகளை உருவாக்கி வளர்த்துக் கட்சியை கடத்திச் செல்லப் பார்க்கிறார்.

— இப்படி அடுக்கடுக்கான குற்றச்சாட்டுகளைச் சுமத்தி அதிருப்தி கோஷ்டியினர் பவாரை பதவியிலிருந்து விலகக் கோரினர். ராஜீவின் தயவில் இக்கோஷ்டி கலகம் செய்தாலும், அது பலவீனமாகவும், பவாரின் கோஷ்டி பலமாகவும் இருந்தது. இருப்பினும் பவாரை நீக்குவதில் குறியாக இருந்த ராஜீவ், காங்கிரசு பார்வையாளர்களை அனுப்பி நிலைமையை ஆராய்வதாக நாடகமாடிவிட்டு அவசரமாக பவாரை பதவி நீக்கம் செய்துள்ளார். பவார் பதவி விலக முன்வராவிட்டால் அவரது வீட்டு மனை பேர ஊழலை அவிழ்த்துவிடப் போவதாக கூறி மிரட்டிப் பணிய வைத்துள்ளார்.

எல்லாவற்றையும்விட, சந்திரசேகர் ஆட்சியில் காங்கிரசு கட்சி பங்கேற்க வேண்டும் என்ற கருத்துடன் பவார் வேலை செய்து வருகிறார். இதனை முன்னாள் காங்கிரசு மத்திய மந்திரியான வசந்த் சாத்தேயும் சில எம்.பிக்களும் ஆதரிக்கின்றனர். இந்தக் கருத்தும் கோஷ்டியும் வலுப்பட்டு சில காங்கிரசு எம்.பி.க்கள் சந்திரசேகர் அரசில் மந்திரிகளாகி விட்டால் ராஜீவின் திட்டம் தவிடு பொடியாகி விடும். அதாவது, சந்திரசேகர் அரசை நிபந்தனையுடன் ஆதரித்து, தேர்தல் தயாரிப்புகளைச் செய்துகொண்ட பிறகு அதைக் கவிழ்த்துவிட்டு தனி மெஜாரிட்டியுடன் வெற்றி பெறுவது என்ற காங்கிரசின் நோக்கம் சிதைந்துவிடும். அதைவிட சந்திரசேகர் ஆட்சியில் சில காங்கிரசுக்காரர்கள் மந்திரிகளாகிவிட்டால் பின்னர் அவர்கள் சந்திரசேகர் கட்சியுடன் சேர்ந்து காங்கிரசைப் பிளவுபடுத்தி விடுவார்கள் என்ற பீதியின் காரணமாகவே ராஜீவ் இந்த அவசர நடவடிக்கையை எடுத்துள்ளார்.

### விசுவாசம்தான் ஒரே தகுதி

காங்கிரசுக் கட்சியில் நேரு பரம்பரைக்கு ஒரு விசேச குணம் உண்டு. எப்பேர்ப்பட்ட ஊழல், கிரிமினல், மோசடிப் பேர்வழிகளாக இருந்தாலும் சரி; தமக்கு விசுவாசமாக - எடுபிடியாக உள்ள முதல்

ராஜீவை அச்சுறுத்தும் சந்தேகம்: சந்திரசேகருடன் சரத்பவார்.





படிப்பகம்

www.padippakam.com

வர்களை அங்கீகரித்து ஆதரிப்பது என்பது நேரு - இந்திரா - ராஜீவ் பரம்பரை ஆட்சியின் பிறவிக் குணம். கடைந்தெடுத்த ஊழல் பெருச்சாளிகளும், அடக்குமுறையாளர்களுமான பஜன்லால், கருணாகரன், ஜே.பி. பட்நாயக், பீகாரின் கொலை வெறியன் ஜெகன்னாத் மிஸ்ரா முதலானோர் மக்கள் மத்தியிலும் ஏன், கட்சியிலும்கூட அம்பலப் பட்டு தனிமைப்பட்ட போதிலும்கூட தொடர்ந்து ஆட்சியில் நீடிக்க முடிந்ததற்கு இதுவே காரணம். ஆனால், இத்தகைய ஊழல் பெருச்சாளிகள் மாநில அளவில் சுயமாக நிற்குளவுக்கு கோஷ்டிகட்டி பலமாக வளரும்போது அவர்களைப் பதவியிலிருந்து தூக்கியெறிவதை பாசிச இந்திரா - ராஜீவ் கும்பல் வளமையாகக் கொண்டுள்ளது. முன்பு மகாராஷ்டிராவில் அந்துலேவும், இப்போது புதிதாக வந்த கர்நாடக முதல்வர் வீரேந்திர பாட்டீலும், ஆந்திர முதல்வர் சென்னாரெட்டியும் வீழ்த்தப்பட்டதற்கு இதுவே காரணம். பதவி இழந்த சில காங்கிரசு பெருச்சாளிகள் தனிக் கட்சி தொடங்கி பின்னர் மீண்டும் காங்கிரசுக்குத் தாவி விசுவாசமாக நடந்துகொண்ட போது, மீண்டும் அவர்களுக்குப் பதவிகள் தரப்படுகின்றன. இப்போது சரத் பவாருக்கு எதிரான அதிருப்தி கோஷ்டியிலுள்ள அந்துலே, காங்கிரசிலிருந்து விலகி தனிக்கட்சி தொடங்கி, பின்னர் மீண்டும் காங்கிரசுக்கு வந்து இப்போது அமைச்சராகவும் உள்ளார்.

### சரத் பவாரின் அரசியல் 'சாணக்கியம்'!

தனக்கு விசுவாசம் காட்டாத முதல்வர்களைத் தூக்கியெறியும் ராஜீவின் வக்கிரமான சர்வாதிகார வெறி ஒருபுறம் இருக்கட்டும். ஆனால், ராஜீவின் தயவை நம்பிக் கொண்டிராமல், சுயமாக வளர்ந்து செல்வாக்கு பெறத் துடிக்கும் சரத் பவாரின் யோக்கியதை என்ன? அழுகி வரும் பாசிச காங்கிரசின் தலைமையை எதிர்த்து கலகம் செய்து, மக்களைத் திரட்டி அவர் போராடுகிறாரா? அல்லது காங்கிரசுக்கு எதிராகத் தனிக்கட்சி தொடங்கி ஆட்சியைப் பிடிக்குமளவுக்கு மாநில மக்களின் செல்வாக்கு பெற்றவரா? நிச்சயமாக இல்லை.

ஓட்டுப் பெறுக்கி அரசியலின் அனைத்து கலைகளிலும் வல்லவராக விளங்கும் பவாரின் 'சாணக்கியத்தனம்' தான் அவரது செல்வாக்கிற்குக் காரணம். 12 ஆண்டுகளுக்கு முன் காங்கிரசிலிருந்து விலகி, அதிருப்தியாளர்களுடன் கூட்டுச் சேர்ந்து, அன்றைய ஜனதா கட்சித் தலைவராக இருந்த சந்திரசேகரின் ஆதரவுடன் 'மக்கள் ஜனநாயக முன்னணி'' ஆட்சியை நிறுவி மாநில முதல்வரானார் சரத் பவார். பின்னர் ஆட்சி கவிழ்ந்ததும் மீண்டும் காங்கிரசுக்குத் தாவினார். ராஜீவ் பிரதமரானதும் அவருடன் நெருக்கத்தை ஏற்படுத்திக் கொண்டு மீண்டும் முதல்வராகியுள்ளார்.

இதன்மூலம் பம்பாய் தரகுப் பெருமுதலாளிகளுடன் நெருக்கத்தை ஏற்படுத்திக் கொண்டு அவர்களின் நம்பகரமான அரசியல் பிரதிநிதியாக மாறினார். இதேபோல மகாராஷ்டிர அரசியலை ஆட்டிப்படைக்கும் சர்க்கரை ஆலை அதிபர்களின் நம்பிக்கையைப் பெற்று, முன்னாள் முதல்வர் வசந்தாதா பட்டீலுக்குப் பிறகு அவர்களிடம் பேரம் நடத்துமளவுக்கு வளர்ந்தார். எதிர்க் கட்சியினருடன் ரகசியமாக உறவு கொள்வது; அவர்களிடம் விட்டுக் கொடுத்து சாந்தப்படுத்தி நண்பர்களாக்கிக் கொள்வது; அரசு பதவிகள், சன்மானங்கள், காண்டிராக்டுகள் முதலான எலும்புத்துண்டுகளை அவர்களுக்கும் கொஞ்சம் வீசி குரைக்காமல் பார்த்துக் கொள்வது என்பதுதான் பவாரின் அரசியல் சாணக்கியம். ''அரசியலில் உங்களுடன் மாறுபட்ட கருத்து கொண்டவர்களுடன் கூட நீங்கள் நட்பு கொள்ள வேண்டும்'' என்பதுதான் அவரின் கொள்கை. இத்தகைய அணுகுமுறை மூலம் எதரிக்கட்சியாக உள்ள வகுப்புவாத சக்திகளான சிவசேனா மற்றும் பாரதீய ஜனதாவுடன் நெருங்கிய உறவு கொண்டு அவர்களை அடக்கி வாசிக்குமாறு பார்த்துக் கொண்டார்.

> **ராஜீவின் ஏகபோகத் தலைமையின் கீழுள்ள காங்கிரசு இன்னும் எவ்வளவு காலம் ஒரே கட்சியாக நிலைகுலையாமல் நீடிக்க முடியும் என்ற கேள்வி பெரிதாகிக் கொண்டே வருகிறது. தனிநபர் துதி, விசுவாசத்தின் மூலம் காங்கிரசை தொடர்ந்து ஐக்கியப்படுத்தி வைத்திருக்கவும் முடியாது.**

### மாஃபியாக்களின் கூட்டாளி; ஊழலில் முதல்வர்

எதிர்க்கட்சியினர் மட்டுமல்ல; ராஜீவ் கும்பலின் எதிர்த்தரப்பு முதலாளியான நுஸ்லி வாடியா கூட பவாரின் நண்பர்தான். அதேபோல பம்பாய் ரகசிய உலகப்பேர்வழிகள், மாஃபியா குண்டர்களுடன் பவாருக்கு நெருங்கிய தொடர்பு உண்டு. பம்பாயின் பிரபல கடத்தல் — மாஃபியா பெரும்புள்ளிகளான மஸ்தான், யூசுப் பட்டேல் முதலானோர் தமது கருப்புப் பணத்தை ரியல் எஸ்டேட் தொழிலில் முதலீடு செய்து சட்டப்பூர்வ முதலாளிகளாக வளர பவார் பேருதவி செய்தார். அவரது ஆட்சியில் பம்பாய் மாஃபியா குண்டர்கள் சுதந்திரமாகக் கொட்டமடிக்கின்றனர். இது கட்டுப்படுத்த முடியாத அளவுக்குப் பெருகியபோது, பம்பாயில் பயங்கரவாதத் தடைச்சட்டம் ஏவப்பட்டது. ஆனால், மாஃபியா குண்டர்களுக்குப் பதில் அது ஆலைத் தொழிலாளர்கள் மீதே பாய்ந்தது.

இப்படி தரகுப் பெரு முதலாளிகள், மாஃபியாக்களின் ஆதரவைப் பெற்ற பவார், அதன்மூலம் தனது ஊழல் கொள்ளையைத் திறமையாக மறைத்தார். வசாய்-விரார் வீட்டு மனை பேர ஊழலிலும், மராட்டிய வீட்டு வசதி வாரிய ஊழலிலும் ஊறித் திளைத்த பவார் இதன் மூலம் கோடி கோடியாய் சுருட்டினார். மகாராஷ்டிர கடற்கரையை ஒட்டிய பகுதிகளை ஐந்து நட்சத்திர ஓட்டல் கட்ட தரகுப் பெருமுதலாளிகளுக்கு அற்ப விலைக்கு தாரை வார்த்துக் கொடுத்தும், நெடுஞ்சாலைகளைப் பராமரித்து வரி வசூல் செய்வதை தனியார் முதலாளிக்கு கொடுத்தும் கோடிக்கணக்கில் பவார் கொள்ளையடித்தர். இதையெல்லாம் மூடிமறைக்க மராத்தா சாதியினரை தனக்கு அரணாக அமைத்துக் கொண்டு சாதி அரசியலை ஊட்டி வளர்த்தார்.

இப்படி ராஜீவுக்கு அடுத்து மிகப்பெரிய பணக்கார அரசியல் வாதியாக உயர்ந்த சரத்பவார், இதன் மூலம் பல காங்கிரசு, எம்.பிக்களை தன்பக்கம் வளைத்துப் போட்டுக் கொண்டார். அவரது ஊழல் கொள்ளையைப் பற்றி நன்கறிந்தபோதிலும்கூட எதிர்க் கட்சிகள் இதற்கெதிராகப் போராடாமல் கவனித்துக் கொண்டார். இப்படி, ராஜீவின் தயவை நம்பிக் கொண்டிராமல் சுயமாக தன்னால் நிற்க முடியும் என்பதை பவார் தனது 'ராஜதந்திரத்தின்' மூலம் நிருபித்துக் காட்டினார்.

இப்போது, பவார், தலைமையின் முடிவுக்குக் கட்டுப்படுவதாக் கூறி முதல்வர், பதவியை ராஜினாமா செய்துள்ளார். அதற்குக் காரணம் இல்லாமல் இல்லை. இப்போதைக்கு அவரை விட்டால் மகாராஷ்டிராவில் பிரபலமான தலைவர்கள் யாரும் கிடையாது. அதிருப்தி கோஷ்டியும் பலமானது அல்ல. மகாராஷ்டிர மாநிலத்தில் காங்கிரசு கட்சியும் அறுதிப் பெரும்பான்மை பெற்ற கட்சி அல்ல. சில சுயேட்சைகளின் ஆதரவோடு மயிரிழைப் பெரும்பான்மையில் தான் உள்ளது. சுயேட்சைகளிடம் பேரம் பேசியும் எதிர்க்கட்சியான சிவசேனா, பாரதீய ஜனதாவுடன் இணக்கமாக நடந்து கொண்டு சரிக்கட்டியும்தான் காங்கிரசு ஆட்சி இத்தனை நாளும் நீடிக்க முடிந்தது. பவாரை நீக்கிவிட்டால் சுயேட்சைகளின் ஆதரவை இழந்து காங்கிரசு ஆட்சியே கவிழ்ந்து விடும். எனவே, தன்னிடம் அனுசரித்துப் போவதைத் தவிர ராஜீவுக்கு வேறு வழியில்லை என்று பவார் கருதுகிறார்.

அதே சமயம், பவாரை பதவியிலிருந்து நீக்கி பத்து நாட்களாகியும்கூட புதிய முதல்வரை நியமிக்க முடியாமல் ராஜீவ் கையைப் பிசைந்து கொண்டிருக்கிறார். மீண்டும் பவாரை தனியே அழைத்து பேரங்கள் நடத்துகிறார். புதிய முதல்வர் நியமிக்கப்பட்டாலும், அல்லது பவார் தொடர்ந்து முதல்வராக நீடித்தாலும், ராஜீவின் ஏகபோகத் தலைமையின் கீழுள்ள காங்கிரசு இன்னும் எவ்வளவு காலம் ஒரே கட்சியாக நிலை குலையாமல் நீடிக்க முடியும் என்ற கேள்வி பெரிதாகிக் கொண்டே வருகிறது. தனிநபர் துதி, விசுவாசத்தின் மூலம் காங்கிரசை தொடர்ந்து ஐக்கியப்படுத்தி வைத்திருக்கவும் முடியாது. பெருகிவரும் நாடாளுமன்ற அராஜகத்தின் விளைவாக தலைமைக்கு எதிரான கோஷ்டிகளின் கலகமும், குழிபறிப்பும், கட்சித் தாவுவதும் தொடரவே செய்யும்.

● மனோகரன்.



படிப்பகம்

www.padippakam.com

# பா.ஜ.க.வின் பாசாங்கு கலைந்தது

**உட்கட்சித் தேர்தல்களை நடத்தி முடித்துள்ளது பாரதீய ஜனதா கட்சி. இது உட்கட்சி ஜனநாயகத்தைக் காட்டவில்லை. ஏனென்றால் ஆர்.எஸ்.எஸ். விசுவாசிகளையும் பார்ப்பன - பனியா தலைமையையும் உத்திரவாதப்படுத்திக் கொள்வதற்கே நடந்தது.**

பாரதீய ஜனதா கட்சியில் தற்போது நடந்து முடிந்த உட்கட்சி தேர்தல்கள் அதன் மர்ம மாளிகையிலிருந்து பல உண்மைகளை வீதிக்கு இழுத்து வந்துள்ளது. அதன் உயர்சாதி பார்ப்பன வெறி, பாசிச தன்மை, ஆர்.எஸ்.எஸ். ஊழியம் இவற்றை கண்ணாடியாக காட்டியது! அக்கட்சி தலைவர்கள் கூறும் ஒழுங்கு கட்டுப்பாடு, உட்கட்சி ஜனநாயகம், பதவி நாட்டமின்மை தியாகம் என்பதெல்லாம் பாசாங்கு என்பது நிருபணமானது.

இப்போதைய கட்சித் தலைவர் அத்வானியின் பதவிக் காலம் இந்த ஆண்டு ஜனவரியோடு முடிவடைகிறது. அக்கட்சி விதிப்படி இரண்டு முறைக்குமேல் தொடர்ச்சியாக 4 ஆண்டுகாலம் பதவி வகித்து விட்டார். எனவே, புதிய தலைமைக்கான போட்டோ போட்டி வலுத்தது.

மிதவாதி வாஜ்பாய் விசுவாசியாகிய சுந்தர்சிங் பண்டாரிதான் தலைமைக்கு வருவார் என்று 3 மாதத்திற்கு முன்பிருந்தே ஊகங்களும் கிசுகிசுக்களும் நிலவியது. இல்லை! இல்லை! 'ராஜமாதா' விஜய ராஜ சிந்தியாதான் வருவார்; கிருஷ்ணலால் சர்மாதான் வருவார் என்று பத்திரிகைகள் காதைக் கடித்தன. கடைசியில் இவையாவும் தோற்றுப் போனது. 35 ஆண்டுகாலம் ஆர்.எஸ்.எஸ்.க்கு ஊழியம் செய்த டாக்டர் முரளி மனோகர் ஜோஷி போட்டியின்றி(!) தேர்ந்தெடுக்கப் பட்டதாக அறிவிக்கப்பட்டது. இவர் 1950 ஆம் ஆண்டுகளில் ஆர்.எஸ்.எஸ். நாடு தழுவிய அளவில் நடத்திய 'பசு வதை தடுப்பு' கலவரங்களில் கலந்து கொண்டவர். அப்போதைய ஆர்.எஸ்.எஸ். தலைவர் ராஜேந்திர சிங்கின் நேரடி சீடர்! ஆர்.எஸ்.எஸ்.சின் சித்தாந்த தலைவர் தீனதயாள் உபத்தியாயாவின் 'ஏகாத்ம மானவ தர்சனம்' (Integral Humanism) என்ற இந்து ராஷ்ட்டிரக் கோட்பாட்டில் நம்பிக்கை உடையவர். அதாவது, கம்யூனிசம், சோசலிசம் இவற்றில் இருக்கும் ரத்த வன்முறையை தவிர்த்தும் முதலாளித்துவத்தில் இருக்கும் இலாப வெறியை ஒழித்தும் இரண்டிலும் இருக்கும் ஒருங்கிணைந்த தூய ஜனநாயக சோசலிச பண்புகளை உள்ளடக்கியதுதான் — இந்துத்துவம் ஏகாத்ம மானவ தர்சனம், காந்திய சோசலிசம்; சுருக்கமாக ராம ராஜ்யம்!

பௌதீகத்தில் டாக்டர் பட்டம் பெற்று அலகாபாத் பல்கலைக் கழகத்தில் பேராசிரியரான இவர் பா.ஜ.க.வின் பொறுப்புகளில் குறைவான ஆண்டுகள்தான் இருந்தார்; ஆர்.எஸ்.எஸ். உயர் தலைவர்களின் பின்பலமாகவும், அவர்களது மூளையாகவும்தான் அதிக நாட்கள் பணி புரிந்தார். பா.ஜ.க.வில் இப்போது இருக்கும் உட்கட்சி ஜனநாயகம்(!) இந்து ராஷ்ட்டிரம் என்னும் அதன் இலட்சியத்தையே சீர்குலைக்கும் பெரும் சுமையாகும் என்று பகிரங்கமாக கூறும் பாசிஸ்ட் இவர்.

உட்கட்சித் தேர்தல், பெரும்பான்மைக்கு சிறுபான்மை கட்டுப்படுவது என்ற ஜனநாயகக் கொள்கையெல்லாம் கட்சியையே தின்றுவிடும்; மற்ற ஓட்டுக் கட்சிகளைப் போல பிழைப்புவாதிகள், இந்துமத விரோதிகளின் கூடாரமாகி விடும் என்கிறார். இந்துமத மடாலயங்களின் அமைப்பு முறைதான் நம் நாட்டுக்கானது. அதுதான் இந்து ராஷ்ட்டிரம். மற்ற எல்லா அமைப்பு முறைகளும் மேற்கத்திய நாடுகளிலிருந்து இறக்குமதியானது என்று சாடுகிறார்.

அதாவது பெரும்பான்மையாக இருக்கும் பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட சாதிகளை சார்ந்த எவரும் கட்சித் தலைமைக்கு வந்துவிடாத அளவுக்கு உத்திரவாதப் படுத்தும் அமைப்பு முறைதான் மடாலய அமைப்பு முறை. நிரந்தரமான உயர்சாதி பார்ப்பன வாரிசுத் தலைமை — அதன் நியமன அதிகாரத்துக்கு உட்பட்ட கீழ்மட்ட அமைப்புகள் என்று பகிரங்கமாக இந்துமத பாசிச நிறுவனங்களுக்கு உயிர் கொடுக்கிறார்.

**முரளி மனோகர் ஜோஷி; ஆர்.எஸ்.எஸ். பாம்பு.**



இந்த வகையில், இவர் அத்வானியை விட இந்து மத தீவிரவாதி என்று ஆர்.எஸ்.எஸ். பெருமைப்படுகிறது. வெற்றி வீரர்களிடையே முன்னணியில் நிற்பவர் என்று மகிழ்ந்து போகின்றன முதலாளித்துவப் பத்திரிக்கைகள்.

கட்சியின் சகல மட்டங்களிலும் இப்படிப்பட்ட நம்பகமானவர்களைத் தலைமைக்குத் தேர்ந்தெடுத்து ஆர்.எஸ்.எஸ். நியமித்துள்ளது. போட்டியின்றி தேர்வு செய்வது, இளைஞர்களுக்கு வழிவிடுவது என்ற பெயரில் இதை சாதித்தது. ''ராமஜென்ம பூமி'' கலவரங்களுக்குத் திட்டம் வகுத்துக் கொடுத்தவர்கள், அத்திட்டத்தை மதவெறியோடு விடாப் பிடியாக நடைமுறைப்படுத்தி முஸ்லீம்களின் ரத்தத்தில் கை நனைத்தவர்கள்; கட்சி கட்டியவர்கள் என்று பொறுக்கி எடுத்து தலைமைப் பதவி கொடுத்து கௌரவித்துள்ளது.

வரும் தேர்தலில் வெற்றியின் வாயிலில் தனித்தே நுழைந்து விடுவது என்ற அபரிமிதமான நம்பிக்கையோடு இவற்றை செய்கிறது; தேவையேற்பட்டால், வெற்றியை உத்திரவாதம் செய்ய மீண்டும் ஒரு ரத்தகளரியை ஏற்படுத்தவும் துணிவுள்ள தலைமையைக் கவனமாக தேர்ந்தெடுத்தது ஆர்.எஸ்.எஸ்.

இதற்குமாறாக, முறையான உட்கட்சித் தேர்தல், ஆரோக்கியமான ஜனநாயக பூர்வமான போட்டி, பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட கீழ்மட்ட தலைவர்களை போட்டியின்றி தலைமைக்கு உயர்த்துவது என்று கோரியவர்களையும், இவ்வாறான கருத்துக்களையும் நபர்களையும் பின்னணியாகக் கொண்டு பதவி கோரியவர்கள் மீதும் அவதூறு பரப்பி தனிமைப்படுத்தியது. பா.ஜ.க.வில் நீண்டநாள் விசுவாசமாக உழைத்திருந்தால் போதும்; அவர்கள் ஆர்.எஸ்.எஸ்.சில் அவ்வளவு நாட்டமில்லாமல் இருந்தாலும் அவர்களுக்கும் தேர்தலில் போட்டியிட வாய்ப்பளிக்க வேண்டும் என்ற கருத்தை மூர்க்கமாக எதிர்த்தது. மண்டல் கமிஷன் - இட ஒதுக்கீடு கொள்கையை ஆதரித்த உள்ளூர் தலைமைகளை வெறியோடு சாடியது.

குறிப்பாக, பீகார் மாநிலத்தில் பா.ஜ.கவை சேர்ந்த பிற்படுத்தப்பட்ட சாதிகளைச்



படிப்பகம்

www.padippakam.com

சேர்ந்த 10 எம்.எல்.ஏக்கள் கட்சியின் முடிவுகளுக்கு எதிராக மண்டல் கமிஷன் அமுலாக்கத்தை ஆதரித்தனர். அப்பிரச்சனையில் கவிழவிருந்த பீகார் லல்லு பிரசாத் அரசாங்கத்தை ஆதரித்து காப்பாற்றினர். இதற்காக அவர்கள் அனைவரையும் கட்சியை விட்டு நீக்கியது, பா.ஜ.க. அவர்கள் கவலைப்படாமல் ''சம்பூர்ண கிரந்த தளம்'' என்ற புது அமைப்பை நிறுவிக் கொண்டனர்.

மறுபுறம் மாநிலத்திற்கு மாநிலம், பார்ப்பன, பனியா, மார்வாரி போன்ற உயர் சாதிக்காரர்களால் கட்சி பதவிகள் ஏராளமாக விருப்பம்போல் சூறையாடப்பட்டன. குறிப்பாக, வலுவாகவும் ஏகபோகமாகவும் உள்ள கட்சி இடங்களை குறிபார்த்து பதவி வேட்டையில் இறங்கினார்கள்.

☆ நாட்டின் அதிகார பீடமான டில்லி நகரக் கிளையைப் பிடிக்க பார்ப்பன, பனியா, மார்வாரி உயர்சாதி தலைமைகளுக்குள் பயங்கர குடுமிப்பிடி சண்டை! மதன்லால் குரானா, விஜய் குமார் மல்ஹோத்ரா, கேதார்நாத் சஹானி ஒருபுறமும், ராம் பாஜை மற்றும் மேவாராம் ஆர்யா மறுபுறமும் சிண்டை பிடித்துக் கொண்டனர். இவர்களுக்குள் அத்வானி புகுந்து தனது ஆள் ஓம்பிரகாஷ் கோஹ்லியை பதவியில் உட்கார வைத்து விட்டார்.

☆ ராஜஸ்தானில், கட்சியின் மூத்த தலைவர் என்று பெயர் எடுத்தவரும், அமைப்பு கட்டுவதில் நிபுணர் என்று போற்றப்பட்டவருமான சதீஷ் அகர்வாலை, குப்பைக் கூடையில் வீசிவிட்டு, அம்மாநிலத்திலேயே வசிக்காத ஒரிசா மாநிலத்தின் கொழுத்த பணக்காரர் லக்கிராம் அகர்வாலை, கட்சித் தலைமை தேர்ந்தெடுத்தது.

☆ மத்தியப் பிரதேச மாநிலத்தில், உட்கட்சித் தேர்தல் காங்கிரசு கட்சித் தேர்தலை விடக் கேவலமாக நடந்தது. இந்நாள் முதல்வர் சுந்தர்லால் பட்வா கும்பலும், முன்னாள் முதல்வர் சக்லேச்சா கும்பலும் கைகலப்பில் இறங்கியது. இரண்டு கும்பலும் மத்திய தலைமையைச் சரமாரியாக சாடின.

கட்சிக் கட்டுப்பாடு, கட்சி விசுவாசம், பதவி நாட்டமின்மை என்ற கொள்கைகள் இப்படி நார் நாராக கிழிவதை கட்சித் தலைமை கண்டு கொள்ளவேயில்லை. பீகாரில் கட்சிக் கட்டுப்பாட்டை மீறியவர்கள் மீது பாய்ந்தது போல், இந்த உயர் சாதி கும்பல் மீது தலைமை பாயவில்லை! அதனுடைய கவனமெல்லாம், பிற்படுத்தப் பட்டவர்கள் எவரும் கட்சித் தலைமைக்கு வந்துவிடக் கூடாது என்பதில்தான் குறியாய் இருந்தது.

ஆனால், மகாராஷ்ட்டிர மாநிலத்தில் மட்டும் ஆர்.எஸ்.எஸ். பார்ப்பன தலைமையின் கணக்கு பலிக்கவில்லை. அங்கு அதிகாரம் செலுத்தும் இந்துமத வெறி சிவசேனா பெருவாரியாக பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப் பட்டவர்களைத் திரட்டியுள்ளது.

**கட்சியின் சகல மட்டங்களிலும் இப்படிப்பட்ட நம்பகமானவர்களைத் தலைமைக்குத் தேர்ந்தெடுத்து ஆர்.எஸ்.எஸ். நியமித்துள்ளது. ''ராமஜென்ம பூமி'' கலவரங்களுக்குத் திட்டம் வகுத்துக் கொடுத்தவர்கள், அத்திட்டத்தை மதவெறியோடு விடாப்பிடியாக நடைமுறைப்படுத்தி முஸ்லீம்களின் ரத்தத்தில் கை நனைத்தவர்கள்; கட்சி கட்டியவர்கள் என்று பொறுக்கி எடுத்து தலைமைப் பதவி கொடுத்து கௌரவித்துள்ளது.**

அவர்களுக்குக் கட்சியிலும், ஆட்சியிலும் (பம்பாய் மாநகராட்சி) பதவிகள் கொடுத்து மடக்கி வைத்துள்ளது. எனவே, அவர்களை இழுக்க என்.எஸ்.ஃபராண்டே என்ற பிற்படுத்தப்பட்ட சாதி தலைவரை கட்சித் தலைவராக தேர்ந்தெடுத்து ஆசை காட்டியுள்ளது.

இந்து மதவெறி ஆர்.எஸ்.எஸ். பிறப்பெடுத்த நாளிலிருந்தே அரசியலுக்கு அப்பாற்பட்டு தான் இயங்குவதாக காட்டிக் கொள்கிறது. இந்து மதத்தை பாதுகாப்பது, வளர்ப்பது, தேசநலன் மற்றும் சமூக சேவைகளில் ஈடுபடுவதுதான் தமது பணி என்கிறது.

ஆனால், தமது நிழல் அரசியல் அமைப்புகள் மூலம் அரசியலில் மூர்க்கமாக தலையிடுகிறது. சட்டப்பூர்வ மற்றும் சட்டவிரோத, பகிரங்க மற்றும் ரகசிய, காந்தீயம் மற்றும் வன்முறை போராட்டங்கள் மூலம் இந்துராஷ்டிரத்தை நிறுவுவதை இலட்சியமாகக் கொண்டு இயங்குகிறது.

இதற்கு அரசியலில் முன்னணி அமைப்புகளாக முன்னாளில் பாரதீய ஜனசங்கத்தையும், இந்நாளில் பாரதீய ஜனதா கட்சியையும் நடத்துகிறது. மத ரீதியில் உள்ள மக்களையும் வளைத்துப்போட விஷ்வ இந்து பரிஷத், இந்து முன்னணி, பஜ்ரங் தளம் என்று 12க்கும் மேற்பட்ட அமைப்புகளை பகுதி, பிராந்திய, தேசீய அளவில் நடத்துகிறது!

இவையில்லாமல் அகில பாரத மாணவர்கள் சங்கம், விவசாயிகள், தொழிலாளர்கள், பழங்குடிகள் என்று பல்வேறு சங்கங்களை நிறுவியுள்ளது. இதன்மூலம் முன்னாள் ஜனதா ஆட்சியில் கூட்டாக மத்திய, மாநில அரசுகளை பங்கு போட்டுக் கொண்டது, அப்போதே, ராஜஸ்தானிலும், ம.பி. மாநிலத்திலும் தன்னுடைய தலைமையின் கீழ் ஆட்சியை நிறுவியது.

அதேபோல் இப்போது தேசீய முன்னணி கூட்டணியைப் பயன்படுத்தி 3 மாநிலங்களில் அதிகாரத்தைப் பிடித்தது. வரும் தேர்தலில் ஒட்டு மொத்தமாக இந்தியாவையே பிடித்துவிட வலை வீசுகிறது. அதற்காக, இறுக்கமாக, கவனமாக தனது ஆர்.எஸ்.எஸ். தலைமையை முன்னோட்டமாக பாரதீய ஜனதா கட்சியில் இப்போது வெறியோடு திணித்துள்ளது.

● குணசேகரன்.

## இந்து மதவெறிக்கெதிராக

இந்து மதவெறி பாசிசம் மதங்கொண்டு வளர்ந்து வருகிறது. மனித ரத்தம் குடிக்க உயிர்பலி கேட்டு சூலாயுதம் ஏந்தி திரிகிறார்கள் ஆர்.எஸ்.எஸ். மதவெறி குண்டர்கள். இக்கும்பலை இனங்காட்டி - அம்பலப்படுத்தி பிரச்சாரம் செய்து வரும் புரட்சிகர அமைப்புகளின் செய்திகள் தொடர்ச்சியாக...

நல்லம்பள்ளியில் புதிய ஜனநாயக வாசகர் வட்டத்தின் சார்பாக சுவரெழுத்து, தட்டி, பிரசுரம் வாயிலாக பிரச்சாரம் மேற்கொள்ளப் பட்டது. பெருவாரியான மக்கள் குறிப்பாக முஸ்லீம் இளைஞர்கள் ஆதரித்து தாமாக முன்வந்து நிதியுதவி அளித்தனர்.

திருப்பத்தூர் பகுதியில் புதிய கலாச்சார வாசகர் வட்டத்தின் சார்பாக 6.1.91 அன்று டி.எம்.எஸ். திருமண மண்டபத்தில் அரங்குக் கூட்டம் நடத்தப்பட்டது. 'இந்து - இந்தி - இந்தியா' என்ற தலைப்பில் நடத்தப்பட்ட இக்கூட்டத்தில் தோழர் காளியப்பன் (மாநிலப் பொருளாளர், ம.க.இ.க) சிறப்புரையாற்றினார். திரளாக மக்கள் கூடி ஆதரவளித்தனர்.

கறம்பக்குடியில் 20.12.90 அன்று திருவோணம் வட்டார விவசாயிகள் விடுதலை முன்னணி பொதுக்கூட்டம் நடத்தியது. தோழர்கள் காளியப்பன், துரைமாணிக்கம், குருமூர்த்தி, சாகுல் அமீது மற்றும் வழக்குரைஞர் தோழர் இராமலிங்கம் ஆகியோர் உரையாற்றினர். பகுதி மக்கள் உற்சாகத்துடன் வரவேற்று ஆதரவு தந்தனர்.

சீர்காழியில் புதிய கலாச்சார வாசகர் வட்டத்தின் சார்பாக 7.1.91 அன்று தெருமுனைப் பிரச்சாரம் நடத்தப்பட்டது. 6 இடங்களில் நடத்தப்பட்ட இப்பிரச்சாரத்திற்கு ஒவ்வொரு இடத்திலும் 100-க்கு மேற்பட்டவர்கள் கூடி ஆதரவு தந்தனர்.



படிப்பகம்

www.padippakam.com




● *தரகு அதிகார முதலாளி வர்க்கம் என்றால் என்ன? இதுபற்றி மாவோவின் கருத்து என்ன?* — ஏ.என்.ஆர்.கல்லை

☆ அமெரிக்கா, ருசியா, இங்கிலாந்து, ஜப்பான், ஜெர்மனி போன்ற ஏகாதிபத்திய ஏகபோக முதலாளிகள், தேசங்கடந்த் மற்றும் பன்னாட்டு ஏகபோக தொழில் கழகங்கள், வங்கிகளுடன் கூட்டுச் சேர்ந்து இந்த நாட்டைக் கொள்ளையிடும் பெருமுதலாளிகளைத் தரகு அதிகார முதலாளி வர்க்கம் என்கிறோம். இதுவும் நிலப்பிரபுத்துவ வர்க்கமும் தமது சொந்த நலன்களுக்காக நமது நாட்டின் அரசியல், பொருளாதாரம் மற்றும் பிற உரிமைகளை ஏகாதிபத்தியங்களுக்கு அடகுவைத்து, இந்த அமைப்பைக் கட்டிக்காக்கின்றன. ஆகவே, இவ்விரு வர்க்கங்களும் நமது நாட்டுக்கும் மக்களுக்கும் புரட்சிக்கும் எதிரிகளான ஆளும் வர்க்கங்கள் என்கிறோம்.

சீனாவில் 1924 - 27 ஆண்டுகளில் நடந்த ஜனநாயகப் புரட்சி தோல்வியுற்றது. அப்புரட்சியின் கடும் எதிரிகளாக இருந்த ஏகாதிபத்திய ஏஜெண்டுகளை தரகு முதலாளிகள் என்று மாவோவும், ஸ்டாலினும் குறிப்பிட்டனர். அதாவது அந்நிய ஏகாதிபத்திய ஏகபோக மூலதனத்திற்கும் உள்ளூர் சந்தைக்கும் இடையில் இடைநிலையாளர்களாக செயல்படும் தரகர்கள், உள்நாட்டு பெரு வணிக முதலாளிகள் என்கிற பொருளில் குறிப்பிட்டனர். ஏகாதிபத்தியம் மற்றும் அந்நிய மூலதனத்துடன் நெருங்கிய தொடர்புடையவர், அந்நியப் பொருளாதார நலன்களுக்குச் சேவை செய்கிறவர், அந்நிய வியாபார நிறுவனத்தின் உயர்தர சீன அதிகாரி அல்லது சீன நிர்வாகியாக இருப்பவர் என்று அப்போது மாவோ சொன்னார்.

1924 - 27 புரட்சிக்கு தேசிய முதலாளித்துவ வர்க்கத்தின் மேல்தட்டுப் பிரிவினரான பெருமுதலாளிகள் தலைமையேற்றிருந்தனர். அவர்கள் புரட்சிக்குத் துரோகமிழைத்து நிலப்பிரபுக்கள் மற்றும் ஏகாதிபத்தியத்துடன் சேர்ந்து கொண்டு தாமும் தரகு முதலாளிகளாக மாறினர். அதன்பிறகு சியாங்-கே-ஷேக் தலைமையில் கோமிங்டான் ஒரு கட்சி சர்வாதிகாரம் நிறுவப்பட்டது. நாட்டின் பொருளாதாரத்தை ஏகபோகமாகக் கைப்பற்றிய தரகு பெரு முதலாளிகள், அந்நிய ஏகாதிபத்தியம், உள்நாட்டு நிலப்பிரபுத்து வர்க்கம் மற்றும் பழைய பாணி பணக்கார விவசாயிகளுடன் நெருக்கமாகப் பிணைந்த தரகு, நிலப்பிரபுத்துவ, அரசு ஏகபோக மூலதனக் கட்டமைப்பை உருவாக்கிக் கொண்டனர். வியாபாரம், வங்கி மற்றும் உற்பத்தித் தொழில் ஆகிய துறைகளில் ஏகபோகமாக சீனத்தைக் கொள்ளையிட்டனர். சீனத் தரகு பெரு முதலாளிகளின் தன்மையிலும் செயற்பாடுகளிலும் ஏற்பட்ட இந்தப் பரிணாம வளர்ச்சிக்கேற்ப அவர்களைப் பற்றிய வரையறுப்புகளை மாவோ மாற்றிக் கொண்டார். அவர்களைத் தரகு அதிகார வர்க்க முதலாளிகள் அல்லது அதிகார முதலாளிகள் என்றே குறிப்பிட்டார். மாவோவின் இந்த வரையறுப்பு இந்திய ஏகபோக பெருமுதலாளிகளுக்கும் பொருந்தக் கூடியதாக உள்ளது.

● *மக்களின் வாழ்க்கைத் தரம் உயராமல் இருப்பதற்குக் காரணம், தங்களது உரிமைகளை உணராத மக்களா? கடமை தவறும் ஆட்சியாளர்களா?* — மன்னை நன்னன், மன்னார்குடி.

☆ மக்களது வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதைத் தமது கடமையாக ஆட்சியாளர்கள் எப்போது ஏற்றுக் கொண்டார்கள்? தேர்தலுக்குத் தேர்தல் அப்படிப் பொய்யான வாக்குறுதியைத் தெரிந்தே வாரி வாரி வழங்குகிறார்கள் என்பதுதானே உண்மை! ஆளும் வர்க்கங்களும் அவற்றைப் பிரதிநிதித்துவப் படுத்தும் ஆட்சியாளர்களும் நமது மக்களை அடக்கி ஒடுக்கிச் சுரண்டுவதுதான் இவர்களின் வாழ்க்கைத் தரம் உயராமல் இருப்பதற்குக் காரணம். இந்த நிலை தொடர்ந்து நீடிப்பதற்கான காரணங்களில் ஒன்றுதான் மக்கள் இதை உணராமல் இருப்பது.

● *ஒரே நிலப்பகுதி, பொதுவான சமூக, கலாச்சார வாழ்க்கை, பேசும் ஒரே மொழி, பொதுவான அரசு என அடிப்படை குணாம்சத்தில் தான் ஒரு தேசிய இனம் இருக்க முடியும். ஆதலால் மத அடிப்படையில் காஷ்மீர் மக்களின் தேசிய சுயநிர்ணய உரிமைகளைத் தாங்கள் ஆதரிப்பதானது 1947ல் மத அடிப்படையில் பாகிஸ்தான் பிரிவினை செய்ததை மாஜி சி.பி.ஐ. கட்சியின் மானக்கேடான ஆதரவைப் போன்றதல்லவா?*

— பி.கணேசன், திருத்தங்கல்.

☆ பாகிஸ்தான் பிரிவினையும் காஷ்மீர் இன சுயநிர்ணய உரிமைக் கோரிக்கையும் அடிப்படையிலேயே வேறுபட்டவை. பலூச்சி, சிந்தி, பஞ்சாபி, வங்காளி என வெவ்வேறு தேசிய இனங்களைச் சேர்ந்த மக்களையும் பிரதேசங்களையும் முஸ்லீம் என்கிற ஒரே மதத்தவரைப் பெரும்பான்மையினராகக் கொண்டிருக்கும் ஒரே காரணத்துக்காக ஏகாதிபத்திய சூழ்ச்சி, காங்கிரசு - போலிக் கம்யூனிஸ்டு துரோகம் காரணமாகத் தனி நாடாக பாகிஸ்தான் உருவாக்கப்பட்டது. வங்க தேசப் பிரிவினையும் பாகிஸ்தானில் இப்போதும் நடக்கும் தேசிய இனப் போராட்டங்களும் அதைத் தவறானதென நிரூபித்துள்ளன. அதேபோல்தான் இந்தியாவிலும் இந்துக்கள் பெரும்பான்மையினராக இருப்பதாலேயே இங்குள்ள வெவ்வேறு தேசிய இனங்களுக்கும் சுய நிர்ணய உரிமையின்றி பலாத்காரமாக இணைத்து

வங்க தேச இயக்கத்தில் பெரும்பான்மையினர் முஸ்லீம்கள். ஆனால், அதற்காக அங்கே நடந்த சுய நிர்ணய உரிமை மற்றும் பிரிவினைப் போராட்டங்களை மத அடிப்படையிலானது என்றா நாம் கருதினோம்? இல்லையே! மார்க்சியக் கண்ணோட்டப்படி தேசிய சுய நிர்ணய உரிமைக்கான தகுதிகள் அவர்களுக்குண்டு என்றே கருதினோம். அதே போலத்தான் காஷ்மீரும்.

வைத்து ஒருமைப்பாட்டையும், ஐக்கியத்தையும் உடைய ஒரே நாடாக நீடித்துவிட முடியும் என்பதும் தவறானது; இங்கே காஷ்மீர் உட்பட பல்வேறு தேசிய இனங்களும் சுய நிர்ணய உரிமைப் போர் - போராட்டத்தில் குதித்திருப்பதே இதை நிரூபிக்கிறது.

வங்க தேச இயக்கத்தில் பெரும்பான்மையினர் முஸ்லீம்கள். ஆனால், அதற்காக அங்கே நடந்த சுய நிர்ணய உரிமை மற்றும் பிரிவினைப் போராட்டங்களை மத அடிப்படையிலானது என்றா நாம் கருதினோம்? இல்லையே! மார்க்சியக் கண்ணோட்டப்படி தேசிய சுய நிர்ணய உரிமைக்கான தகுதிகள் அவர்களுக்குண்டு என்றே கருதினோம். அதேபோலத்தான் காஷ்மீரும் தேசிய இனத்துக்குரிய மொழி, பொதுப்பண்பாடு, பொதுப் பொருளாதாரம், பொதுவான பூகோள அமைப்பு ஆகியவற்றைக் காஷ்மீர் இனமக்கள் பெற்றுள்ளனர். அதுமட்டுமல்ல, அவர்களது சுயவிருப்பத்துக்கு எதிராக அவர்கள் இந்திய ஒன்றியத்தில் பலாத்காரமாக இணைக்கப்பட்டனர். ஆகவே, அவர்கள் நடத்தும் இனவிடுதலைப் போரும், கோரிக்கையும் நியாயமானவை. அதைத் தமது ஆதாயம் கருதி இந்து - முஸ்லீம் கலவரமாக மாற்றிவிடத் தமது அடிவருடி அமைப்புகளைக் கொண்டு இந்திய - பாகிஸ்தான் ஆளும் வர்க்கங்கள் முயலுகின்றன. சுய நிர்ணய உரிமைக்கான போரை ஜம்மு - காஷ்மீர் விடுதலை முன்னணி நடத்துகிறது. எனவே, அதை ஆதரிக்க வேண்டியது அனைத்துப் புரட்சிகர, ஜனநாயக சக்திகளின் கடமையாகிறது.

● *புரட்சிகர அமைப்புகளுக்கிடையே ஒருமித்த கருத்து இல்லையே! ஏன்? (உதாரணமாக மண்டல் கமிசன் மீதான பு.ஜ.வின் நிலைப்பாடு ஆந்திராவில் உள்ள மக்கள் யுத்தக் குழுவினுடையதை விட மாறுபட்டுள்ளது)* — வசந்தன், கம்பம்.



படிப்பகம்

www.padippakam.com

☆ ஆம்! பல்வேறு அரசியல், சித்தாந்தப் பிரச்சினைகளிலும் இரு அமைப்புகளும் மாறுபாடான நிலைப்பாடுகளைக் கொண்டிருக்கின்றன. பலவற்றிலும் ம.யு. குழுவின் கண்ணோட்டம் மார்க்சிய - லெனினிய அடிப்படையிலானவை அல்ல; சந்தர்ப்பவாதமானவை என்று நாம் கருதுகிறோம். உதாரணத்திற்கு மண்டல் கமிசன், இட ஒதுக்கீட்டையே எடுத்துக் கொள்வோம்.

மண்டல் அறிக்கை அமலாக்கத்தை ஒட்டி, ''இன்று இந்தியா இரண்டு முகாம்களாக 1. பார்ப்பனீய - மேல்சாதி ஆதிக்க சக்திகள், 2. தாழ்த்தப்பட்ட - பிற்படுத்தப்பட்ட மக்கள் என்று சரியாகவே பிளவு பட்டுவிட்டன'' என்று ம.யு.குழு எழுதியுள்ளது. ஆர்.எஸ்.எஸ். பி.ஜே.பி. இந்து முன்னணி, ஜனதா தளம் (எஸ்), காங்கிரசு, பூநூல் கம்யூனிஸ்டு கட்சி ஆகியன பார்ப்பனீய - மேல்சாதி ஆதிக்க சக்திகளின் முகாம் என்கிறது. அப்படியானால், இன்னொரு முகாம் எது? ஜனதாதளம், தி.மு.க., அ.தி.மு.க., பாட்டாளி மக்கள் கட்சி, அம்பேத்கார் - பெரியார் இயக்கங்கள் உட்பட மண்டல் கமிசனை ஆதரிக்கும் அனைவரும் தாழ்த்தப்பட்ட - பிற்படுத்தப்பட்ட மக்களது முகாம் என்கிறது. இதிலே ம.யு. வும் அதன் தலைமையிலான அமைப்புக்களும் அடங்கும் என்கிறது. ஜனதாதளம், தி.மு.க., அ.தி.மு.க., பா.ம.க. ஆகிய கட்சிகள் இட ஒதுக்கீடு பிரச்சினை, போராட்டத்தை தமது ஓட்டுக்குப் பயன்படுத்தவும், ஆட்சிக்குப் போனபிறகு அதை நட்டாற்றில் விட்டுவிடவும் வாய்ப்புள்ளது. அவ்வாறின்றி இக்கட்சிகளும், அம்பேத்கார் - பெரியார் இயக்கங்களும் உறுதியாகப் போராட வேண்டும்; அதே சமயம் இட ஒதுக்கீட்டிற்கு ஆதரவாக சிறிய குரல் எங்கிருந்து, யார் கொடுத்தாலும் ம.யு.வும் அதன் கீழுள்ள அமைப்புகளும் அவர்கள் தோளோடு தோள் நிற்கும் என்கிறது.

இதிலிருந்து தெரிவதென்ன? ஜனதா தளம், தி.மு.க., அ.தி.மு.க., போன்ற கட்சிகள், ஆளும் மேல் சாதிப் பிரிவுகளில் ஒன்றைப் பிரதிநிதித்துவப் படுத்துவதாகக் கருதவில்லை. அதுமட்டுமல்ல; ''இட ஒதுக்கீட்டிற்கு எதிராக உள்ள முகாமின் பின்னணியை ஆராய்ந்தால் இந்தியாவில் சாதியும் வர்க்கமும் ஒன்றோடு ஒன்று பின்னிப் பிணைந்துள்ளதைத் தெளிவாக உணராலாம்'' என்பதன் மூலம் இந்தக் கட்சிகள் ஆளும் வர்க்கங்களில் ஒரு பிரிவைப் பிரதிநிதித்துவப் படுத்துவதாகவும் கருதவில்லை.

ஆனால், ஜனதாதளம், தி.மு.க., அ.தி.மு.க போன்ற கட்சிகள் ஆளும் மேல்சாதி - வர்க்கப் பிரிவுகளில் ஒரு பிரிவைப் பிரதிநிதித்துவப் படுத்துவதாக பு.ஜ. கருதுகிறது. ஆகவே, இந்தக் கட்சிகள் பற்றிய ம.யு.வின் கண்ணோட்டமும், இவற்றின் முகாமில் ம.யு.சேருவதும் கடைந்தெடுத்த சந்தர்ப்பவாதமென்று கூறுகிறோம். மண்டல் கமிசன் - இட ஒதுக்கீடு ஒரு சீர்திருத்தம்தான் என்று ஒருபுறம் ம.யு. ஒப்புக் கொள்கிறது. ஆனால், இப்படிப்பட்ட முதலாளித்துவ சீர்திருத்தப் போராட்டத்தில் ஜனதாதளம் தி.மு.க., அ.தி.மு.க. போன்ற கட்சிகளுக்கும் ம.யு.வுக்கும் இடையிலான வேறுபாடு அது ஒரு சமூக நீதி அல்ல, சீர்திருத்தம்தான் என்று அம்பலப்படுத்துவதில் இல்லை. அக்கட்சிகளை விடத் தீவிரமாக போராடுவதில்தான் காட்டுகிறது. இன்னும் ஒருபடி மேலே போய் ''மண்டல் கமிசனை எதிர்ப்பவர்கள் மக்கள் எதிரிகள்'' என்றும் அவர்களுக்குத் ''தமிழ்நாட்டில் இடமில்லை; விரட்டுவோம்'' என்றும் முழங்குகிறது. அப்படியானால், மக்கள் எதிரிகள் - புரட்சியின் எதிரிகள் யார்? இந்தக் கட்சிகள் பிரதிநிதித்துவப்படுத்தும் மேல்சாதி ஆளும் வர்க்கப் பிரிவும் மக்கள் எதிரிகள் - புரட்சியின் எதிரிகள் அல்லவா? ஒரு முதலாளித்துவ சீர்திருத்தத்துக்காக இவ்வளவு தூரம் வரிந்து கட்டிக்கொண்டு போராடுவதன்மூலம் அது ஏற்கனவே அழுந்திப் போயுள்ள. போர்க்குணமிக்க பொருளாதார வாதத்துக்குள் மேலும் மூழ்கிப் போகிறது. ஒவ்வொரு பிரிவு மக்களது சொந்தக் கோரிக்கைக்கான போராட்டங்களையே தீவிரமாக நடத்துவதன்மூலம் புரட்சிக்குத் திரட்டிவிட முடியும் என்பதுதான் போர்க்குணமிக்க பொருளாதாரவாதம்.

''பிற்படுத்தப்பட்டோருக்கு இட ஒதுக்கீடு வழங்குவதன் மூலம், மேல் சாதிக்காரர்கள் தனிமைப்படுத்தப்படுவதோடு அவர்கள் ஆதிக்கம் ஓரளவு குறையும். இது தாழ்த்தப்பட்ட பிற்படுத்தப்பட்ட மக்களின் ஒற்றுமைக்கு முதல்படியாக அமையும். எனவே, அனைத்துப் புரட்சிகர ஜனநாயக சக்திகளும் மண்டல் பரிந்துரையைக் கட்டாயம் வரவேற்க வேண்டும்'' என்கிறது ம.யு.குழு. முன்பு தமிழ்நாட்டில் வர்க்க எதிரிகள் என்று அழிக்கொழிக்கப்பட்டவர்கள் பட்டியலில் எவ்வளவு பேர் ''பிற்படுத்தப்பட்ட'' சாதி நிலப்பிரபுக்கள் என்பதை இவர்கள் பார்க்கட்டும். தர்மபுரி - வடஆற்காடு புரட்சிகர அமைப்புகள் - மக்களுக்கு எதிராக போலீசுடன் கூட்டுச் சேர்ந்து ''தாக்குதல்படை'' அமைத்த ''பால் டிப்போ'' வடிவேலு, ரங்கன், வெள்ளக் கவுண்டர் எந்தச் சாதியினர் என்பதை எண்ணிப் பார்க்கட்டும்.

பீகாரில் முற்பட்ட சாதிகளான பூமிகார் - பார்ப்பனரது பிரம்மார்ஷி சேனா, ராஜபுத்திரரது குன்வார் சேனா, ''பிற்படுத்தப்பட்ட'' சாதிகளான யாதவரது லோரிக்சேனா, குர்மிக்களது பூமிசேனா ஆகிய தனியார் படைகள் அந்தச் சாதிக்களின் நிலப் பிரபுக்களுக்காக புரட்சியாளர்கள் - தாழ்த்தப்பட்ட மக்களைக் கொன்று வந்தன. சாதி அடிப்படையில் அந்தந்த சாதி உழைக்கும் மக்களும் கூட இந்தப் படைகளில் திரட்டப்பட்டிருந்தனர். மண்டல் கமிசன் அமலாக்கத்தில் இந்த சாதிகள் எதிரெதிராக நின்று போராடினர். ஆனால், இப்போது புரட்சிகர அமைப்புகளுக்கு எதிராக மேற்கண்ட நான்கு சேனைகளும் கிஷான் (விவசாயிகள்) சங்கம் என்ற ஒரே அமைப்பாக இணைந்துள்ளனர். தாழ்த்தப்பட்ட கூலி - ஏழை விவசாயிகள் நான்கு பேரை டிசம்பர் இறுதி வாரம், பாட்னா மாவட்டம் தரியாப்பூரில் கொன்றதன் மூலம் அக் கூட்டுச் சேனை தனது நிறுவன தினத்தைக் கொண்டாடியுள்ளது. இதனால்தான் பீகாரில் உள்ள புரட்சிகர அமைப்புகள் மட்டும் தலைமைக்குக் கட்டுப்பட மறுத்து இடஒதுக்கீட்டுக்கு எதிரான நிலைப்பாடு எடுத்துள்ளன. ஆகவே, இட ஒதுக்கீடு என்பது சாதிய அடிப்படையில் தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்களது ஒற்றுமையையும் கட்டாது; புரட்சிக்கான முதற்படியாகவும் இராது.

இட ஒதுக்கீடு எந்த நோக்கங்களுக்காக, எந்த அடிப்படையில், எந்த சாதி, வர்க்க நலன்களுக்காகக் கொண்டு வரப்படுகிறது? இந்த அரசு ஆட்சி நியாய உரிமை பெறவும், தனது சமூக அடித்தளத்தை விரிவுபடுத்தவும், அதன்மூலம் நீடித்திருக்கவும், பல்வேறு சாதி, மத,

**மேற்கு வங்கம், கேரளாவில் போலிக் கம்யூனிஸ்டுகள் அரசாங்கம் அமைத்து, மேலிருந்து அரசில் பங்கேற்பதைச் சாடும் ம.யு. குழு, இட ஒதுக்கீடு மூலம் கீழிருந்து பங்கேற்பதை ஏற்கிறது. சாராம்சத்தில் இரண்டுமே ஒன்றுதான்! மார்க்சிய -லெனினியக் கண்ணோட்டத்தை நிராகரித்து, பொருளாதார வாதம், சந்தர்ப்பவாதம் ஆகியவற்றை மேற்கொள்வதன் விளைவுதான் இது!**

இன, மொழிப் பிரிவினருக்கும் பொதுவானது; அவர்கள் அனைவரையும் பிரதிநிதித்துவப் படுத்துகிறது; அனைவரும் அரசில் பங்கேற்க உரிமை உண்டு என்கிற மாயையை உருவாக்க வேண்டியுள்ளது. அதற்காகத்தான் அம்பேத்காருடன் சேர்ந்து குன்சுரு, நேரு போன்ற பார்ப்பனத் தலைவர்களும் வாதிட்டு இட ஒதுக்கீட்டை அரசியல் சட்டத்தில் சேர்த்தனர். இப்போதும் பார்ப்பனத் தலைவர் மது தண்டவதே, ராஜபுத்திர வி.பி.சிங் ஆகியோர் ஆதரிக்கின்றனர். ஆனால், தமது சொந்த உடனடி, நலன்கருதி பார்ப்பன - மேல்சாதிகளிலேயே ஒரு பிரிவினர் இட ஒதுக்கீட்டை எதிர்க்கின்றனர். அனைவருக்கும் பங்கேற்பு, பிரதிநிதித்துவம், ஜனநாயகம் என்கிற மாயையை உருவாக்குவதற்காக, புரட்சிகர மக்களின் எழுச்சியைத் திசை திருப்புவதற்காகத்தான் ம.யு.குழுவை ஜனநாயக வழிக்கு, ஜனநாயக நீரோட்டத்திற்கு வரும்படி ஆந்திராவில் சென்னாரெட்டி, என்.டி.ஆர். ஆட்சிகள் அழைப்பு விடுத்தன. புரட்சிகர மக்களும், அமைப்புகளும் அதை ஏற்க முடியாது. அது வெறும் பித்தலாட்டம் என்று சரியாகவே ம.யு. நிராகரித்தது. ஆனால், அதே நோக்கத்துக்காக இட ஒதுக்கீடு மூலம் அரசில் அனைவருக்கும் பிரதிநிதித்துவம், பங்கேற்பு, ஜனநாயகம் என்கிற ஆளும்வர்க்க அழைப்பை சாதி - வகுப்புரிமை என்கிற பெயரில் தீவிரமாக ஆதரிக்கிறது ம.யு.குழு. மேற்கு வங்கம், கேரளாவில் போலிக் கம்யூனிஸ்டுகள் அரசாங்கங்கள் அமைத்து, மேலிருந்து அரசில் பங்கேற்பதைச் சாடும் ம.யு.குழு, இட ஒதுக்கீடு மூலம் கீழிருந்து பங்கேற்பதை ஏற்கிறது. சாராம்சத்தில் இரண்டுமே ஒன்றுதான்! மார்க்சிய - லெனினியக் கண்ணோட்டத்தை நிராகரித்து, பொருளாதார வாதம், சந்தர்ப்பவாதம் ஆகியவற்றை மேற்கொள்வதன் விளைவுதான் இது! ●

படிப்பகம்

www.padippakam.com

# அரசின் சில்லறைத்தனம்!

அரசு, வீட்டு வரி, தண்ணி வரி, சுங்க வரி, வருமான வரி, விற்பனை வரி, தொழில் வரி... இப்படி பல வரிகள் மூலமும் மின் கட்டணம், பஸ் - ரயில் கட்டணம், தபால் (தலை) - தந்தி - தொலைபேசி கட்டணம், சரக்கு கட்டணம்... இப்படி பல கட்டணங்கள் மூலமும் வருமானம் பெறுகிறது.

அரசு, இரும்பு, எஃகு, நிலக்கரி, அலுமினியம், தங்கம், வெள்ளி, உரம், மருந்து. மின்சாதன - மின்னணுப் பொருட்கள், பால், மீன், முட்டை, ரொட்டி.... என சகலவற்றையும் உற்பத்தி செய்து விநியோகிப்பதோடு ஏகபோகமாகவும் இருந்து வருகிறது.

இதுவல்லாமல் அரசு, சேவைத்துறையிலும் அத்தியாவசியப் பொருட்கள் விநியோகத்திலும் சில்லரைத்தனமாக நமது சிறுவாடு காசை பிடுங்கிக் கொள்கிறது. இவற்றின் கட்டணத்தையும், விலையையும் தன் இஷ்டப்படி ஆண்டு தோறும் கூட்டிக் கொள்கிறது.

● ரயில்வே நிர்வாகம் - 'அதிவேக ரயில்களுக்கு' கூடுதல் கட்டணம், நிலையத்தினுள்ளே நுழைவதற்கு நடை பாதை கட்டணம், படுக்கை வசதிக்கு தனிக் கட்டணம் ... இப்படி ஏராளமாக வசூலிக்கிறது. ஆனால், ரயிலிலே பயணிகளுக்கு தண்ணீர் வசதி கூட செய்து தரப்படுவதில்லை. முழுச் சாப்பாடு வாங்கும் பயணிகளுக்கு மட்டுமே 'பாக்கெட்டில்' குடிநீர் வழங்குகிறது. தயிர் சாதம் - கட்டுசாதம் வாங்கும் பயணிகளுக்கு குடிநீர் வழங்க மறுக்கிறது. காரணம் கேட்டால் ''தயிர்சாதத்தின் விலையை அதனால் தானே குறைத்து (முழுச் சாப்பாட்டைக் காட்டிலும்) விற்கிறோம்'' என்று திமிர்த்தனமாக கூறுகிறது.

● போக்குவரத்து (பேருந்து) துறை - பயணத்திற்கு முன்பதிவு செய்வதற்கும் தனிக் கட்டணம் வசூலிக்கிறது. ஆனால், முன்பதிவு செய்தவர்கள் குறிப்பிட்ட நேரத்தில் பேருந்து வராததால் பலமணி நேரம் ஏன் சில நாட்களும் கழித்துத்தான் மாற்றுப் பேருந்தில் பயணம் செய்ய முடிகிறது.

● தொலைபேசியகத்தால் வெளியிடப்படும் 'டைரக்டரி' - புத்தகத்தில் ஒன்றுக்கும் மேற்பட்ட நபர்களின் பெயர்களில் தொலைபேசி என் வரவேண்டுமானால் கூடுதலாக ரூ.40/- கட்ட வேண்டும். இதையும் எவ்வித முன்னறிவிப்பும் இல்லாமல் 150 ரூபாயாக உயர்த்தி விட்டது.

● தபால் துறையின் மூலம் கடிதப் பொருட்கள் தயாரிப்பு செலவுக்கென (ஸ்டேசனரி சார்ஜ்) தனிக்கட்டணத்தை கூடுதலாக வசூலிக்கிறது அரசு. ஆனால், தபால் ஆபீசில் பசையில்லாமல் கடிதங்களை எச்சிலால் ஒட்டுகிறோம்.

● இந்தியன் ஆயில் கார்ப்பரேசன், சமையல் எரி வாயு 'சிலிண்டர்' பெறுபவர்களிடம் எவ்வித காரணமுமே இல்லாமல் 500 ரூபாயை முன் பணமாக பெறுகிறது. இதை வங்கியில் வட்டிக்கு விட்டு சம்பாதிக்கிறது.

● தேர்வு நுழைவுக்கட்டணம், நூலகம் - ஆய்வகம் பராமரிப்பு கட்டணம், தேர்வுத்தாள் மறு மதிப்பீடு கட்டணம்... என ஏகப்பட்டதை கல்வித்துறை வசூலிக்கிறது. ஆனால் கல்வியின் தரமும், கல்வி பெறுபவர்களின் எண்ணிக்கையும் ஒப்பீட்டளவில் ஆண்டுதோறும் குறைந்து கொண்டே வருகிறது. படித்தவர்கள், வேலைக்கான தேர்வுகள் எழுதுவதற்கே 2 ரூபாய் இருந்தால்தான் விண்ணப்ப படிவம் பெற முடியும். அரசு வேண்டுமென்றே குறைவான எண்ணிக்கையில் விண்ணப்ப படிவத்தை விநியோகித்து தனியார்கள் இதில் கொள்ளையடிக்க வழி வகுத்து தருகிறது.

● நகராட்சிக்கோ, மாவட்ட ஆட்சித் தலைவருக்கோ புகார் மனு கொடுப்பவர்களிடம் நீதிமன்ற தபால்தலை மூலம் பணம் பிடுங்குகிறது. ஒவ்வொரு அலுவலகத்திலும் தினம் ஆயிரக்கணக்கான மனுக்கள் 'முத்திரை குத்தி' சவ அடக்கம் செய்யப்படுகின்றன.

● பேருந்து நிலையத்திலோ, பொது இடத்திலோ அவசரத்தில் ஒதுங்கினாலும் காசு பிடுங்கிக் கொள்கிறது நகராட்சி. கட்டண கழிவறைகளின் சுகாதாரம் பற்றி சொல்லவே தேவையில்லை.

● கட்டிடங்கள், பாலங்கள், சைக்கிள் நிறுத்தங்கள், பொருள் பாதுகாப்பு அறைகளை காண்டிராக்ட் விடுகிறது நகராட்சி. காண்டிராக்ட்காரன் 'தண்டல்' முறையில் கூடுதலாக வசூலிப்பதை கண்டு கொள்வதில்லை.

● இதுவல்லாமல் கண்காட்சி, புத்தகக் காட்சி, பொருட்காட்சி, சுற்றுலா... என ஆண்டுதோறும் நடத்தி ஏராளமாக சுருட்டுகிறது அரசு.

நின்னா வரி, நடந்தா வரி, நெளிந்தால் வரி என்ற பாணியிலே இப்படி நம்மிடம் காசு பிடுங்குகிறது, அரசு.

1986-ல் நுகர்வோர் பாதுகாப்புச் சட்டமும் மாவட்டந் தோறும் நுகர்வோர் நீதிமன்றங்களும் அரசால் கொண்டு வரப்பட்டது. சில சமூக நல விரும்பிகளால் நடத்தப்படும் நுகர்வோர் குழுக்கள் இவற்றைப் போராடிப் பெற்றன. மக்களை பாதிக்கும் பிரச்சனைகள் அனைத்தையும் எடுத்து வழக்காடி உடனடித் தீர்வை தருகின்றன, இக் குழுக்கள். இவற்றின் செயல்பாடுகளை 'புரட்சி' என்றெல்லாம் பத்திரிக்கைகள் புகழ்ந்து தள்ளுகின்றன. ஆனால், உண்மை என்ன?



அரசுத்துறை சம்பந்தப்பட்ட மோசடி - சுரண்டல் - முறைகேடுகள்தான் பெரும்பாலும் நுகர்வோர் நீதி மன்றங்களுக்கு வருகின்றன. ஆனால், அரசு அதிகாரிகள் இந் நீதிமன்றங்களின் தீர்ப்பை மதிப்பதுமில்லை; சட்டை செய்வதுமில்லை. இழுத்தடிப்பு, அதிகார துஷ்பிரயோகம், குறுக்கு வழிகளைப் பயன் படுத்தியே தப்பித்துக் கொள்கிறார்கள். உதாரணத்திற்கு சில.....

● அண்மையில், தயிர்சாதம் வழங்குவோருக்கும் ரயில்வே நிர்வாகம் குடிநீர் தர வேண்டும் என்று சென்னை மாகாண நுகர்வோர் குழுவால் போடப்பட்ட வழக்கு விசாரணைக்கு வந்தது. சென்னை நுகர்வோர் நீதிமன்றம், 1.1.91 முதல் ரயில்வே நிர்வாகம் நீர் வழங்குவதை அமுலாக்க வேண்டும் என்றும் மீறினால் ரயில்வே பொது மேலாளர் ஆர்.நரசிம்மன் ஒரு வருட சிறைத் தண்டனை அனுபவிக்க வேண்டும் என்றும் தீர்ப்பு வழங்கியது. ரயில்வே நிர்வாகம் இதை ஏற்க மறுத்து 'அப்பீல்' செய்துள்ளதோடு எதிராகவும் அறிக்கை வெளியிட்டது.

● தொலைபேசி என் கூடுதல் பதிவுக் கட்டண உயர்விற்கு எதிராக நடந்த வழக்கில் தொலைபேசியகத்தினர் விசாரணைக்கே வரவில்லை. எனவே, இதற்கு அபராதம் விதித்து கட்டத் தவறினால் 3 வருட சிறைத் தண்டனையை தலைமைப் பொது மேலாளர் ஜெயராமன் அனுபவிக்க வேண்டும் என சென்னை நுகர்வோர் நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியது. தொலைபேசி நிர்வாகம் உடன் சம்பந்தபட்ட மாநில கவுன்சிலையும் மாவட்ட கவுன்சிலையும் அணுகி தீர்ப்பு அமுலாவதைத் தள்ளி வைத்துவிட்டது.

● சமையல் எரிவாயு - சிலிண்டர் பெறுபவர்களிடம் வசூலித்த முன் பணத்திற்கு வட்டிப்போட்டு தரும்படி திருச்சி நுகர்வோர் பாதுகாப்புக் குழுவால் போடப்பட்ட வழக்கு கவனிப்பாரற்று கிடக்கிறது.

● அரசு வழங்கிய பாக்கெட் பாலில் புழுக்கள் இருந்தது சில மாதங்களுக்கு முன்பு கண்டுபிடிக்கப்பட்டு செய்தி பத்திரிக்கைகளில் வெளிவந்தது. இதற்கு எதிரான நடவடிக்கை எதுவுமில்லை.

அரசுத் துறையின் ஊழல்கள் - மோசடிகள் - முறைகேடுகள் பகிரங்கமாகி நாறும் பொழுது அரசு, தனிப்பட்ட நபர்கள் மீது நடவடிக்கை எடுக்கவும் செய்கிறது. இதையே உதாரணமாகக் காட்டி தனி நபர்களும் தனியார் துறையினரும்தான் அனைத்து பிரச்சினைகளுக்கும் காரணம் என கை காட்டுகிறது. அதிகாரிகளும் ஆட்சியாளர்களும் தான் மோசமானவர்கள் ஆனால் அரசு புனிதமானது என்ற கருத்தே வலிந்து பரப்பப்படுகிறது.

ஆனால், அரசு - 'தூணிலும் துரும்பிலும் இருக்கும் கடவுளாக' சகல துறைகளிலும் பல வழிகளிலும் மக்களைச் சுரண்டிக் கொழுக்கிறது என்பதுதான் நிதர்சனமான உண்மை. சுயநலம், லஞ்சம், ஊழல், முறைகேடுகளையே தமது மொத்த உருவமாகக் கொண்ட அதிகாரிகளையும், ஆளும் கும்பலையும் பாதுகாக்கும் நிறுவனமும் அரசு தான். ● ராசு



படிப்பகம்

www.padippakam.com



## வீட்டுமனைப் பிரச்சினை:

# தாழ்த்தப்பட்டவர்களுக்கு எதிராக சாதிவெறியர்கள் கோட்டம்

தென்னாற்காடு மாவட்டம், விருத்தாசலத்திற்கு அருகில் உள்ளது, கோ. ஆதனூர் என்ற கிராமம். இக்கிராமத்தைச் சேர்ந்த தாழ்த்தப்பட்ட மக்கள் 1973-ம் ஆண்டு வீட்டு மனை கேட்டு அரசுக்கு விண்ணப்பித்தனர். 1983-ம் ஆண்டு சிதம்பரம் சாலையின் வடபுறம் உள்ள சில நிலங்களை ஆதி திராவிட நலத்துறை தாழ்த்தப்பட்டவர்களுக்கு வழங்குவதற்காக கையகப்படுத்தியது. நிலச் சொந்தக்காரர்கள் சென்னை உயர் நீதி மன்றத்தில் தொடர்ந்த வழக்கின் காரணமாக ஏழாண்டுகளுக்குப் பின்னர் 28.4.90 அன்றுதான் தாழ்த்தப்பட்டவர்களுக்கு 104 மனைப் பட்டாக்களை அரசு வழங்கியது.

பட்டா வழங்கப்பட்டதும் ராமன் என்பவர் தனது நிலத்தை தாழ்த்தப்பட்டவர்களுக்கு வழங்குவதற்கு எதிராக சென்னை உயர்நீதி மன்றத்தின் மூலம் இடைக்கால தடை வாங்கினார். இவருடைய 66 சென்ட் நிலம் போக எஞ்சிய இடத்தை ஆதி திராவிட நலத்துறை அதிகாரிகள் 1990 செப்டம்பர் 12, 13 தேதிகளில் அளந்து 'கல்' போட்டனர். இதன் பின்னர் ராமர் 66 சென்ட் நிலத்தை உயர்நிலைப் பள்ளி கட்டுவதற்கென்று மாவட்ட முதன்மை கல்வி அலுவலருக்கு தானமாக வழங்கினார். ''ஊருக்கு ஒதுக்குப்புறமாக இருக்க வேண்டியவர்கள் சாலையை ஒட்டி குடியேறுவதா? அந்நிலத்திற்கு தாழ்த்தப்பட்டவர்கள் உரிமை பெறுவதா? கூடாது. வேறு எதற்காவது தர்மமாவது செய்தாலும் செய்வேன்; தாழ்த்தப்பட்டவர்கள் அனுபவிக்க அனுமதிக்கவே மாட்டேன்'' என்ற சாதிய வெறியோடுதான் பள்ளிக்கென்று வலிய தானமாக வழங்கினார் ராமர். இதில் என்ன வேடிக்கையென்றால் இந்த 66 சென்ட் நிலமும் திருவேங்கடம் என்பவர் தனக்கு வாரிசு இல்லாத காரணத்தினால் தமது உறவினர் ராமருக்கு தானமாக வழங்கப்பட்டது என்பதுதான். அதுவும் 1983ம் ஆண்டு அரசால் நிலங்கள் கையகப்படுத்தப்பட்ட பின்னர்தான் திருவேங்கடம் தானமாக வழங்கினார்.

இப்பகுதியில் அம்முக்கியச் சாலையின் தென்புறம் தற்போதுள்ள பள்ளிக்கூடம் தாழ்த்தப்பட்டவர்களின் நிலத்தில் தான் கட்டப்பட்டுள்ளது. தாழ்த்தப்பட்டவர்கள் சாலையோரம் குடியேறி விடுவார்கள் என்று அஞ்சிய மேல்சாதி வெறியர்கள் சாலைக்கு வடபுறம் இருந்த பள்ளியை தென்புறத்திற்கு மாற்றி தாழ்த்தப்பட்டவர்களின் நிலத்தை தாமாக ஆக்கிரமித்து கட்டிடம் கட்டினார்கள். பள்ளிக்கூடம் என்பதால் தாழ்த்தப்பட்டவர்களும் மனமுவந்து விட்டுக் கொடுத்தனர். ஆனால் தற்போது சாலையின் வடபுறத்திலும் தாழ்த்தப்பட்டவர்கள் குடியேறிவிடக் கூடாது என்பதற்காகவே அந்நிலத்திலும் பள்ளிக்கூடம் கட்டுவதாகக் கூறி தானமாக வழங்கியுள்ளனர்.

ஆனால் இம்முறை தாழ்த்தப்பட்டவர்கள் 14.9.90-ல் அவ்விடத்தில் வீடுகட்ட முனைந்தனர். விருத்தாச்சலம் கோட்டாட்சியர் மற்றும் வட்டாட்சியாளரால் தடுத்து நிறுத்தப்பட்டனர். மீண்டும் தாழ்த்தப்பட்டவர்கள் 18.10.90 அன்று அந்நிலத்தில் அடிக்கல் நாட்டு விழா நடத்த சிதம்பரம் பாராளுமன்ற உறுப்பினர் வள்ளல் பெருமாள் தலைமையில் ஏற்பாடு செய்தனர். இதையறிந்த மேல்சாதி வெறியர்கள் அதே தேதியில் அதே நபரைக் கொண்டு (அவருக்குத் தெரியாமலேயே) அந்நிலத்தில் 'உயர்நிலைப் பள்ளிக்கு கால்கோள் விழா' என்று பிரசுரம் வெளியிட்டனர். எனவே, சட்டம் - ஒழுங்'கைக் காரணம் காட்டி இம்முறையும் கோட்டாட்சியர் தடுத்து விட்டார்.

பின்னர் இருதரப்பாரையும் இணைத்து அமைதிக் குழு மூன்று முறை கூட்டப்பட்டு இறுதியாக கம்மாபுரம் போலீசு பாதுகாப்போடு தாழ்த்தப்பட்டவர்கள் வீடு கட்டுவதென தீர்மானிக்கப்பட்டது. இதன் பேரில் 21.12.90 அன்று தாழ்த்தப்பட்டவர்கள் வீடு கட்ட முனைந்த பொழுது ஊராட்சித் தலைவரின் தகப்பனார் கிருஷ்ணசாமி என்பவர் தலையீட்டின் அடிப்படையில் கோட்டாட்சியரும், வட்டாட்சியரும் பறந்து வந்து வீடு கட்டுவதைத் தடுத்தனர். மீறிக் கட்டினால் போலீசை வைத்து தாக்குவதாக கூறினர். பின்னர் தாழ்த்தப்பட்டவர்கள் தமிழக முதல்வருக்கும், மாவட்ட ஆட்சியருக்கும் தந்தி கொடுத்தனர். மாவட்ட ஆட்சியர் கோ. ஆதனூருக்கு விஜயம் செய்து பின் 22.1.91 அன்று வீடு கட்டுமாறும் கூறிவிட்டுச் சென்றுள்ளார். ஆனால் மக்கள் இதுவும் கண்துடைப்பே என்று அடுத்த கட்ட நடவடிக்கைக்கு தயாராகி வருகின்றனர்.

தாழ்த்தப்பட்டவர்களின் மீதான மேல்சாதி வெறியர்களின் அடக்குமுறைக்கு - அநீதிக்கு இது மேலும் ஒரு உதாரணம்.

## பேருந்து நிலைய வசதிகோரி....

திருக்காட்டுப்பள்ளி பேருந்து நிலையம் இன்றைய போக்குவரத்து வளர்ச்சிக்கு தக்கபடி விரிவு படுத்தாத நிலையிலும் இதுவே டாக்சி - வேன்களின் நிறுத்தமாகவும் உள்ளது. இதனால் பேருந்துகள் உள்ளே நுழைய முடியாமல் ரோட்டிலேயே திரும்பிச் செல்வதும், முகூர்த்தம் மற்றும் விசேட நாட்களிலும் மழைக் காலங்களிலும் நிற்கவே இடமில்லாமல் மக்கள் அவதிக்குள்ளாவதும் நடக்கிறது. மாற்று இடத்தில் டாக்சி - வேன் நிறுத்தம் கட்டித் தருவதாகக் கூறி பேருராட்சி நிர்வாகம் டாக்சிக்கு ரூ.175-ம், வேனுக்கு ரூ.200-ம் பணம் வசூலித்துள்ளது. ஆனால் இதுவரை நிறுத்தம் கட்டித் தராததோடு கட்டுவதற்கு பணமில்லையென்று கூறி அடாவடித்தனம் செய்கிறது. மேலும் பேருந்து நிலையத்தின் கழிப்பிடம் மற்றும் சுகாதாரக் கேட்டை கண்டித்து பல முறை போராட்டம் நடத்தப்பட்டும் பிரச்சினையை பேரூராட்சி கண்டு கொள்வதேயில்லை.

எனவே இதற்கு எதிராக சர்வ கட்சியினரும் இணைந்து கண்டன ஊர்வலம் ஒன்று நடத்துவதற்காக திருவையாறு வட்ட விவசாயிகள் விடுதலை முன்னணி முயற்சி எடுத்தது. எம்.சி.பி.ஐ. கட்சியின் இளைஞர் பிரிவான தமிழக இளைஞர் முன்னணி அமைப்பைத் தவிர எவரும் இதற்கு முன்வரவில்லை. குறிப்பாக சி.பி.எம். கட்சியினர் உள்ளூர் ஆதிக்க சக்திகள் மற்றும் ஆளுங் கட்சி பிரமுகர்களுடன் உள்ள 'தோழமை' உறவு பாதிக்கும் என்ற நோக்கத்தில் கூட்டு செயல்பாட்டிற்கு வர மறுத்தனர். எனினும் வி.வி.மு.வும், த.இ.மு.வும் இணைந்து 31.12.90 அன்று திருக்காட்டுப்பள்ளி கடைத் தெருவில் கண்டன ஊர்வலம் நடத்தின. 225க்கும் மேற்பட்டோர் ஊர்வலத்தில் கலந்து கொண்டனர். பேரூராட்சியின் ஊழல் - அடாவடித்தனம் - அலட்சியப் போக்கைக் கண்டித்து வி.வி.மு. சார்பாக தோழர் ஜெயசீலனும், த.இ.மு. சார்பாக திரு. பன்னீரும் உரையாற்றினர். தொடர்ந்து இப்பிரச்சினைக்காக போராடுவோம் என தோழர்கள் உறுதி கூறியதை மக்கள் வரவேற்றனர்.



படிப்பகம்

www.padippakam.com

# நெருப்பின் மேல் இந்தியா!

## மதக்கலவரங்களால் இந்தியா சாம்பலாகிறது; 3 மாதத்தில் ரூ.200 கோடி நாசம்! 600 உயிர்கள் பலி!

இந்தியா நெருப்பின் மேல் இருக்கிறது. மதக் கலவரங்களும் படுகொலைகளும் நிரந்தரமாகி போய்விட்டது. இங்கொன்றும் அங்கொன்றுமாக அல்ல; காட்டுத் தீ போல் பரவுகிறது. சேதங்களும் இழப்புகளும் பெரிதாகிக் கொண்டே போகிறது. சேதாரங்களைத் தடுப்பதற்கு அரசு செய்வதாக கூறும் முன்னேற்பாடுகளுக்கும் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கும் ஆகும் செலவுகளும் இணையாக வளர்ந்து கொண்டேயிருக்கிறது.

உத்தரபிரதேச மாநிலத்தின் 3 மாத கணக்கு இது! அங்கு சென்ற வருடத்தில் மட்டும் சிறியதும் பெரியதும் பூதாகரமானதாக 160 கலவரங்கள் நடந்துள்ளது. இதில் 80 சதவிகிதம் செப்டம்பரிலிருந்து டிசம்பர் 15ந் தேதிக்குள் நடந்தது. அத்வானி ரதயாத்திரை சென்ற இடமெல்லாம் கொலைகள் விழுந்தன. அலிகாரில் 88 பேர் படுகொலை செய்யப்பட்டனர். கோண்டாவில் 50, பிஜுனூர் 55, மீரத் 32, பூலான்சாஹர் 29, ராம்பூரி 20 என்று 600 பேர் கொலையுண்டனர்.

அத்வானி கைது செய்யப்பட்டதையொட்டி வெடித்த கலவரங்களால் பல நாட்கள் நிரந்தரமாக 27 மாவட்டங்களில் ஊரடங்குச் சட்டம் போடப்பட்டது. 32 மாவட்டங்களில் ராணுவத்தின் அணிவகுப்புகள் நடத்தப்பட்டது. டிசம்பர் முதல் 15 நாட்களில் 17 மாவட்டங்களில் 180 பேர் கொல்லப்பட்டனர்.

அயோத்தி கலவரத்தால் இம்மாநிலத்தில் மட்டும் கொளுத்தப்பட்ட, சேதப்படுத்தப்பட்ட, சூறையாடப்பட்ட சொத்துக்களின் மதிப்பு ரூ.100 கோடி! இது அரசின் அதிகார பூர்வ புள்ளி விபரம். தொழில், வியாபாரம், அரசின் நிர்வாகம் மாதக்கணக்கில் சீர்குலைந்து செயலிழந்து போனது. எங்கும், திரும்பிய பக்கமெல்லாம் போலீசு, ராணுவம் குவிக்கப்பட்டது.

அக்டோபர் 15லிருந்து நவம்பர் 15 வரை சட்டம் ஒழுங்கைப் பாதுகாக்க அதிகார வர்க்கம், போலீசு - இரண்டும் மாநிலத்தில் குறுக்கும் நெடுக்குமாக போய் வந்ததற்கான பயணச்செலவு, தினப்படி முதலானவற்றுக்கு அரசு செய்த செலவு மட்டும் ரூ.50 கோடி! அந்த நாட்களில் கலவரங்களால் நகர எல்லைகளை - தேசீய நெடுஞ்சாலைகளை மூடியதாலும் அரசுக்கு ஏற்பட்ட வருமான இழப்பு ரூ.40 கோடி!.

**இவர்களுடைய குடும்பத்தவர்களை மதக் கலவரம் பலிகொண்டது; யாரிடம் நீதி கேட்பது?**



கலவரங்களை ஒடுக்க மத்திய அரசிடமிருந்து அழைக்கப்பட்ட துணை ராணுவப் படைகளுக்கு மாநில அரசு செய்த செலவு ரூ.20 கோடி! மத்திய ரிசர்வ் போலீசு, எல்லைப் பாதுகாப்புப் படை, தேசியப் பாதுகாப்புப் படை, ரிசர்வ் போலீசுப்படை, கர்நாடக ஆயுத போலீசு, இந்தோ-திபெத் எல்லைப் பாதுகாப்புப் போலீசு — இப்படி ஏராளமான துணை ராணுவங்கள் மாநிலத்தின் பல பகுதிகளில் நிறுத்தப்பட்டன. இவையில்லாமல், உ.பி. மாநிலத்தின் 2,50,000 சிவில் அதிகார வர்க்கம் சட்டம் - ஒழுங்கைப் பராமரிக்கப் பணிக்கப்பட்டது.

1990-ஆம் ஆண்டில் உத்தரப்பிரதேசத்தில் ஏப்ரல் மாதத்திலிருந்து நடைபெற்ற பெரும் கலவரங்கள்: (அரசால் பதிவு செய்யப்பட்டது)

| | |
|---|---|
| ஏப்ரல், 19 - | கான்பூர் கலவரம் |
| ", 29 - | அலகாபாத் கலவரம் |
| மே 9 - | சங்கராச்சாரியின் விடுதலையை ஒட்டி நடந்த கலவரங்கள் |
| ஜூன் 26 - | ஆக்ரா கலவரம் |
| " 28 - | லக்னோ கலவரம் |
| ஆகஸ்ட் 3 - | சுல்தான்பூரில் ஊரடங்கு |
| " 15 - | இடஒதுக்கீடு எதிர்ப்பு வன்முறை, |
| அக்டோபர் 1 - | கலோனல்கஞ்ச் கலவரம் |
| " - | பிஜுனூர் மதக் கலவரம் |
| " 25 - | அலகாபாத், கான்பூர், மீரத், ராணுவ அணிவகுப்பு, பைசாபாத்தில் ஊரடங்கு. |
| " 27 - | 7 நகரங்களில் ராணுவ ஊரடங்கு |
| " 29 - | ராம்பூரில் 3 பேர் படுகொலை, லக்னோவில் ஒருவர் கொலை. |
| " 30 - | அயோத்தியில் சுமார் 15 பேர் கொல்லப்பட்டனர். 13 மாவட்டங்களுக்கு வன்முறை பரவியது. |
| நவம்பர் 1 - | 30 பேர் படுகொலை, அலிகார், பிஜுனூரில் ராணுவ கொடி அணிவகுப்பு |
| " 2 - | அயோத்தியில் 30 பேர் கொலை, மற்ற நகரங்களில் 31 பேர் படுகொலை |
| " 5 - | பல இடங்களில் வன்முறை, 22 பேர் படுகொலை |
| " 12 - | மீரத் கலவரம், 2 பேர் கொலை |
| டிசம்பர் 5 - | எடாவில் கலவரம் |
| " 7 - | கான்பூர், மீரத்தில் கலவரம் |
| " 13 - | வாரணாசி, மீரத்தில் ஊரடங்கு |
| " 13 - | ஜகாங்கீர்பூரில் 11 பேர் உயிரோடு எரிக்கப்பட்டு கொல்லப்பட்டனர். |
| " 16 - | ஜகாங்கீர்பூரில் வீடுகள் கொளுத்தப் பட்டதில் 9 குழந்தைகள் உயிரோடு கொல்லப்பட்டனர். |
| " 16 - | ஆக்ராவில் 9 பேர் கொலை, துப்பாக்கி சூடு. இதில் 6 பேர் பலி. |
| ஜனவரி-1 '91 | லக்னோவில் ஊரடங்கு |
| ஜனவரி 7 - | லக்னோவில் கலவரம் |

மதக்கலவரங்களில் கொல்லப் பட்டவர்கள் கொலையுண்டவர்கள், உடமைகளை இழந்தவர்கள், அநாதைகளானவர்கள், அகதிகளானவர்கள், போலீசால் இறந்தவர்கள் யார்... யார்? உழைக்கும் மக்கள்!

இன்னும் கொலைகள் விழும் முன்னே, இன்னும் நாடு சூறையாடப்படும் முன்னே மதவெறிக்கு எதிராகக் கொதித்தெழுவோம்!



படிப்பகம்

www.padippakam.com

# செருப்படி மந்திரி துரைமுருகன் கருணாநிதியின் கருப்புப்பூனை!



ஜெயலலிதா சேலை கிழிப்பு புகழ் துரைமுருகன் தற்பொழுது மேலும் ஒரு பட்டத்தைச் சூட்டிக் கொண்டார்; செருப்படி மன்னன் என்று! ஜனவரி 7 - 8 தேதிகளில் அரிஜனங்களுக்கு கட்டப்பட்ட கான்கிரீட் வீடுகளைத் திறக்க கருணாநிதி செங்கை, வடஆற்காடு, திருவண்ணாமலை மாவட்டங்களில் ரத யாத்திரை மேற்கொண்டார். அந்த சமயத்தில் வட ஆற்காடு அம்பேத்கார் மாவட்ட அ.தி.மு.க. செயலர் கோ.விசுவநாதன், எம்.ஜி.ஆர். நினைவு நாளன்று ஜெயலலிதாவுக்கு தகுந்த பாதுகாப்பு தரவில்லை என்ற காரணத்திற்காக கறுப்புக் கொடி காட்டப் போவதாக அறிவித்தார். ஆனால், போலீசு அனுமதி மறுத்து விசுவநாதனையும் பல தலைவர்களையும் கைது செய்தது.

தடையை மீறி ராஜா, கிருஷ்ணன், நடராசன் ஆகியோர் வேலூரில் சாரதி மாளிகை அருகே பார்வையாளர்களுடன் நின்று பனியனுக்குள் மறைத்து வைத்திருந்த கறுப்புக் கொடியினை எடுத்துக் காட்டினர். உடனே ரதத்தில் இருந்த கருணாநிதி ''என்னடா கறுப்புக் கொடி காட்டுறான்; பார்த்துக்கிட்டிருக்கீங்க'' என்று உசுப்பிவிடவே அமைச்சர் துரைமுருகனும், வ.ஆ.அ. மாவட்ட தி.மு.க. செயலாளர் முகமது சகியும் ரதத்திலிருந்து இறங்கி வந்து மூவரையும் ஆபாசமாகத் திட்டிக் கொண்டே சரமாரியாக தங்கள் செருப்பால் அடித்தனர். ஒருவர் அந்த இடத்திலேயே மூர்ச்சையாகி விட்டார். மற்ற இருவரையும் D.I.G. வேனில் பயணியர் மாளிகைக்கு கொண்டு சென்று அங்கு வைத்து பலமாக தாக்கினர்.

துரைமுருகன் போன்றவர்கள் தான் கருணாநிதியின் 'கருப்புப் பூனைகள்'! இதற்கென்றே பேட்டை ரௌடிகளையும், கிரிமினல்களையும் கவனம் கொடுத்து பொறுக்கியெடுத்து வளர்க்கிறார் கருணாநிதி! தி.மு.க. மட்டுமல்ல; அ.தி.மு.க. உட்பட அனைத்து மாநில - தேசிய ஓட்டு பொறுக்கிக் கட்சிகளின் நடைமுறையும் இதுவாகத்தான் இருக்கிறது. முன்பு எம்.ஜி.ஆர். ஆட்சியில் பரங்கிமலை தொகுதி எம்.எல்.ஏ. (அ.தி.மு.க) அப்பாவி ஒருவரை செருப்பால் அடித்த விஷயம் அன்று நாறியது! இன்று அதே பாதையில் துரைமுருகன் கிளம்பியுள்ளார்.



# கோ.சி.மணிமிரட்டல் போலீசு காவடி!

கரம்பக்குடி - சூரக்காடு பேருந்து நிலையத்தில் சாலையோரமாக சென்று கொண்டிருந்த கூலி விவசாயியான பெரியான் மகன் ராமையா என்பவரை TN55 - 1860 என்ற கார் மோதி கீழே தள்ளி பலத்த காயத்தை ஏற்படுத்தியது. காரில் வந்தவர்கள் ராமையாவை காரிலேயே தூக்கிச் சென்று பொய் கூறி மருத்துவமனையில் சேர்த்து விட்டு தப்பிக்க முயன்றனர். அதற்குள் செய்தியறிந்த அவரது மனைவியும் மற்றவர்களும் போலீசில் புகார் கொடுக்கவே போலீசும் காரில் வந்தவர்களை விசாரித்தது. காரில் வந்த ஒருவர், நான் அமைச்சர் கோ.சி.மணியின் நேர்முக உதவியாளர். வழக்கெல்லாம் போடக்கூடாது என மிரட்டவே போலீசு ராமையா குடும்பத்தினர் மீது பாய்ந்தது. வழக்குப் பதிவு செய்யாமல் முதல் தகவலறிக்கை படிவத்திலும், வெற்று காகிதங்களிலும் கையெழுத்து வாங்கிவிட்டு அனுப்பியது.

பின்னர் ராமையா, வழக்கறிஞர் உதவியுடன் மேலதிகாரிகளுக்கு புகார் கொடுக்கவே கரம்பக்குடி போலீசுக்கு மேலதிகாரிகளிடமிருந்து நடவடிக்கை எடுக்கும்படி உத்திரவு வந்தது. மறுபுறம் கோ.சி.மணி போலீசுடன் தொடர்பு கொண்டு வழக்குப் போடக்கூடாது என மிரட்டினார். போலீசோ பாம்புக்கு தலையையும் மீனுக்கு வாலையும் காட்டியது போல் TN55 - 11860 என்ற போலியான எண்ணுள்ள (5 இலக்க எண்களில் மோட்டார் வாகனங்களே தமிழகத்தில் பதிவு செய்யப்படுவதில்லை) கார்மீது வழக்கு பதிவு செய்தது. கோ.சி.மணியின் நேர்முக உதவியாளர் என்பது மட்டுமல்லாமல் எம்.பி. சுந்தர்ராஜனின் உறவினர் என்பதாலும் உண்மையான குற்றவாளியை தப்பிக்க விட்டு இப்படி பொய் வழக்குப் பதிவு செய்து, ராமையாவை ஏமாற்றியுள்ளான் கரம்பக்குடி சப் இன்ஸ்பெக்டர் சாம்ராஜ். போலீசும் ஓட்டுப் பொறுக்கிகளும் கூட்டு சேர்ந்து சாதாரண பிரச்சினைகளில்கூட எப்படி அப்பாவி மக்களை தாக்குகிறார்கள் என்பதற்கு இச்சம்பவம் இன்னுமொரு சான்று.

தகவல்: கபிலன், புதுகை.

# தவறும் விடுபட்ட செய்தியும்

அன்பார்ந்த வாசகர்களே!

கடந்த 16-31 ஜனவரி புதிய ஜனநாயகம் இதழில் ''சாலையார் மீதான மதிப்பீடு சரிதான்'' என்கிற திறந்த கடிதம் ஒன்று அச்சிட்டிருந்தோம். அதன் அச்சமைப்பில் சில தவறுகள் நேர்ந்துவிட்டது குறித்து வருந்துகிறோம். அவற்றைத் திருத்திப் படிக்கும்படி கோருகிறோம்.

முதல் பத்தி, நான்காவது பாராவில், எட்டாவது வரியில் ''பகுத்தறிவுத் தமிழர்'' என்றும், மூன்றாவது பத்தி, ஆறாவது பாரா, 11வது வரி ''ஆங்காங்கே இருக்கக்கூடும்'' என்றும் திருத்திக் கொள்ளும்படி கோருகிறோம்.

அதன் மூன்றாவது பத்தி, மூன்றாவது பாரா, முழுமையான மேற்கோளாக வெளியிட வேண்டியது அச்சமைப்பின் போது விடுபட்டு விட்டது. அந்த மேற்கோள் பின் வருமாறு:


''நான் முற்றும் துறந்தவனல்ல; பதவியே கூடாது என்று ஓடுபவனும் அல்ல. முப்பது ஆண்டுக்காலம் பதவிகள் வகித்து, மற்றவர்களால் நடத்தி வைக்க முடியாத தமிழ்ப் பெரும் பணிகளை நடத்தி வைத்தவன்தானே! ஆனால், பதவி என்னைத் தேடிக் கொண்டு வரவேண்டும்; நான் அதைத் தேடிக் கொண்டு செல்ல முடியாது! இப்போது அரசியலில் பதவியில் இருப்பவர்களுக்கும், அவர்களின் பக்கத்தில் இருப்பவர்களுக்கும், அவர்களைச் சுற்றிக் கொண்டு திரிபவர்களுக்கும் என்னைப் பற்றித் தெரியாதா என்ன? தெரிந்திருந்தும் என்னை ஒரு பதவியில் ஏற்ற அவர்கள் முனையவில்லை. அப்படி இருக்க, ''பொதுத் தொண்டு, தமிழ்த் தொண்டு,- அது இது'' என்று ஏதோ காரணம் சொல்லிக் கொண்டு,- இந்த விழிகண் குருடர்களைத் தட்டி எழுப்ப நான் முனைவது என்னுடைய தன்மானத்திற்கே இழிவு அல்லவா? ஓர் அறிஞனை, அவனுடைய ஆற்றல்களுக்காக, மற்றவர்கள் அறிந்து போற்ற வேண்டும். அப்படிப் போற்ற மனமில்லாத,- தெளிவு இல்லாத மக்களிடம் போய், 'நான் அறிஞன்' என்று அவனே சொல்ல முற்படுவது பன்றிகளின் முன் முத்துக்களைப் பரப்பி வைப்பது போன்றது அல்லவா? ஆகவே, மனநிறைவோடு தனியாக இருந்து கொண்டு, சாலினியார் துணையுடன் என்னால் இயன்ற தமிழ்ப்பணி - பொதுப்பணிகளை இடையறாமல் செய்து கொண்டு இருக்கிறேன்.'' (வீரநடய் அறிவியக்கம், 1989 அக்டோபர், பக்.14)

தவறுக்கும் சிரமத்திற்கும் வருந்துகிறோம்.

— ஆசிரியர் குழு, புதிய ஜனநாயகம்.

படிப்பகம்

www.padippakam.com



# சிவந்த கண்கள் கவனிக்கட்டும்

விவசாய மற்றும் சுற்றுலாத் துறை மந்திரி தேவிலால் உத்திரவுப்படி, இந்திய சுற்றுலா வளர்ச்சித் துறையின் கீழுள்ள ஐந்து நட்சத்திர ஓட்டல்களில் வேட்டி கட்டி வரும் விவசாயிகள் உண்ணும் விருந்துக்கு 50% தள்ளுபடி செய்யப்படும் என அரசு அறிவித்துள்ளது. தமது கிராமப் பஞ்சாயத்துத் தலைவரிடமிருந்து அடையாள அட்டையுடன் வரும் விவசாயக் குடும்பங்களுக்கு மட்டுமே இச்சலுகை தரப்படுமாம். அதுசரி, ஒரு சாபி 25 ரூபாய்க்கு விற்கும் ஐந்து நட்சத்திர ஓட்டலில் விருந்துண்ணும் அளவுக்கு எந்த கிராமத்து விவசாயி இந்தியாவில் பொருளாதார வசதியுள்ளவராக இருக்கிறார்? ஆட்சியாளர்களின் பார்வையில் விவசாயிகள் என்பவர்கள் பணக்கார விவசாயிகளும் நிலப்பிரபுக்களும்தான்! அந்தக் கண்ணோட்டத்தில்தான் அவர்கள் சிந்திக்கிறார்கள்; செயல்படுகிறார்கள் என்பதற்கு இதைவிட வேறென்ன சான்று வேண்டும்?

கிழக்கு ஐரோப்பாவில் வீசிய 'புதிய காற்று' இப்போது வலது கம்யூனிஸ்ட் கட்சியின் இளைஞர் அமைப்பிற்குள்ளும் வீசத் தொடங்கியுள்ளது. கிழக்கு ஐரோப்பாவிலும் ரஷ்யாவிலும் இப்போது மார்க்சிய - லெனினியம் 'காலாவதி'யாக்கப்பட்டு புதுமை பூத்துக் குலுங்குகிறது அல்லவா? எனவே அதைப் பார்த்து இவர்களும் தமது கொள்கைத் திட்டத்தில் மார்க்சிய - லெனினியத்தை சித்தாந்த வழிகாட்டியாக ஏற்பதை நீக்கவும், "தேசிய ஜனநாயகப் புரட்சி" லட்சியத்தைக் கைவிடவும் தீவிரமாக ஆலோசித்து வருகின்றனர். இதையொட்டி இந்த அமைப்பின் மே.வங்கத் தலைவரான பிரவீர் தேவ், இளைஞர் அமைப்பை வெகுஜனத் தன்மை கொண்டதாக மாற்ற, கலாவதியான லட்சியம், கொள்கைகளை நீக்க வேண்டும் என வெளிப்படையாகப் பேட்டியளித்துள்ளார். ஏன் இப்படி ஆலோசனை - விவாதம் நடத்தி தலையைப் பிய்த்துக் கொள்ள வேண்டும்? பேசாமல் பாசிச காங்கிரசின் ரௌடிப் படையான இளைஞர் காங்கிரசில் சேர்ந்து விடலாமே!

இந்திய அரசு, இவ்வாண்டு 'குடியரசு' தினத்திற்கு இந்தோனேஷிய ராணுவ சர்வாதிகாரி சுகார்டோவை தலைமை விருந்தினராக அழைக்க முடிவு செய்திருந்தது. 1960களில் இந்தோனேஷியாவில் 10 லட்சத்துக்கும் மேற்பட்ட கம்யூனிஸ்டுகளையும் தேச பக்தர்களையும் கொன்றொழித்து அமெரிக்க ஆதரவு ஆட்சியை நிறுவிய ராணுவ சர்வாதிகாரிதான் சுகார்டோ. இவனை அழைக்கக்கூடாது என்று எதிர்ப்பு வந்ததும் இப்போது மாலத்தீவு அதிபரான அப்துல் கயூமை சிறப்பு விருந்தினராக அழைக்க அரசு முடிவு செய்துள்ளது. ஆனால் மாலத்தீவிலும் ஜனநாயகம் என்பது மருந்துக்குக் கூட கிடையாது. இத்தகைய சர்வாதிகாரியை விருந்தினராக அழைத்து, 'சுதந்திர - ஜனநாயக - சோசலிச இந்தியக் குடியரசு' தின விழாவை அரசு நடத்தவுள்ளது. வெட்கக்கேடு!

ஊழல் அதிகாரிகளைத் தண்டிக்கு மாறும் அதற்குமுன் தன்னிடம் அனுமதி பெறுமாறும் ஒரிசா முதல்வர் பிஜு பட்நாயக் சவடால் அடித்த விவகாரம் இப்போது அவருக்கே எதிராகத் திரும்பி விட்டது. துணைக் கலெக்டர் அலுவலகத்தில் பணியாற்றி வந்த உடல் ஊனமுற்ற இளைஞரான சுசில் மொஹந்தி ஆறு மாதங்களுக்குப் பிறகு பணியிலிருந்து நீக்கப்பட்டார். இது பற்றி முதல்வரிடம் கடந்த ஆண்டில் முறையிட்டபோது ஆவண செய்வதாக உறுதி அளித்திருந்தார். ஆனால், இன்றுவரை அவருக்கு வேலை கிடைக்கவில்லை. எனவே, "வாக்களித்து ஏமாற்றிய முதல்வரான உங்களை குடியரசு தினமான ஜனவரி 26 அன்று உதைக்க எனக்கு அனுமதி தர வேண்டும்" எனக் கோரியுள்ளார். இதுதவிர அண்மையில் புகார் கொடுக்க வந்த மூன்று இளைஞர்களை முதல்வரே உதைத்து அனுப்பியுள்ளார். அவர்களில் ரத்தக் காயமடைந்த ஒருவர் இப்போது மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். இனிமேலும், ஓட்டுப் பொறுக்கிகளின் 'ஜனநாயக' சவடால்களை நம்புவதில் பலனில்லை; ஊழல் அதிகாரிகளோடு சேர்த்து இவர்களையும் உதைப்பதைத் தவிர வேறு வழியில்லை.



கர்நாடக அரசின் தலைமைச் செயலாளராக இருந்த சங்கர நாராயணன் என்ற அதிகாரி, கடந்த ஜனவரி முதல் வாரத்தில் பணிமாற்றம் செய்யப்பட்டு, முதல்வர் பங்காரப்பாவின் விசுவாசியான பிரபாகர் இப்பொறுப்பில் நியமிக்கப்பட்டுள்ளார். உண்மையில் சங்கரநாராயணனை விரட்டுமாறு நிர்ப்பந்தித்தது சாராய முதலாளிகள்தான்! இவர்களின் கொள்ளை லாபத்துக்காக அரசின் கொள்கையை மாற்றியமைத்து ஆதாயமடைந்த ஒரு பிரிவு அதிகார வர்க்க கும்பலும் காங்கிரசுப் பெருச்சாளிகளும் அவரை நீக்குவதில் குறியாய் இருந்தனர். பணி மாற்றப்பட்ட ஐ.ஏ.எஸ். அதிகாரி சங்கர நாராயணன் இந்த அநியாயத்துக்கு எதிராக இப்போது புலம்பிக் கொண்டிருக்கிறார். கர்நாடக அரசியலை ஆட்டிப்படைக்கும் சாராய அதிபர்கள் வீரேந்திர பாட்டீலைத் தூக்கியெறிந்துவிட்டு தமக்குச் சாதகமாக பங்காரப்பாவை முதல்வராக நியமிக்கும்போது, பாசிச ராஜீவ் சாராய அதிபர்களிடம் சோரம் போகும்போது, பாவம், இந்த அதிகாரியால் புலம்புவதைத் தவிர வேறென்ன செய்ய முடியும்?

குஜராத் மாநிலத்தில் கட்டப்படவுள்ள சர்தார் சரோவர் எனப்படும் நர்மதா அணைக்கட்டு திட்டத்தால் பல்லாயிரக் கணக்கான பழங்குடி மக்களின் வாழ்வு பறிக்கப்படுவதை எதிர்த்து பாபா ஆம்தே என்ற சமூக சேவகர் தலைமையில் தன்னார்வக் குழுக்கள் தொடர்ந்து போராடி வருகின்றன. பாபா ஆம்தே மகாராஷ்டிராவில் ஆனந்தவன் எனுமிடத்தில் ஒரு ஆசிரமம் நடத்தி வருகிறார். அங்கு தொழு நோயாளிகள், பார்வையற்ற குழந்தைகள், உடல் ஊனமுற்றவர்கள் என 5000க்கும் மேற்பட்ட நிராதரவானவர்களைப் பராமரித்து வருகிறார். தமக்கு ஆதாயமான நர்மதா திட்டத்தை பாபா ஆம்தே எதிர்ப்பதால், இதுநாள்வரை ஆண்டுக்கு ரூ.2 கோடி அளவுக்கு அவரது ஆசிரமத்துக்கு பொருளுதவி, நன்கொடை அளித்து ஆதரித்து வந்த அரசும், பெருமுதலாளிகளும், நிலப்பிரபுக்களும் இப்போது அதை நிறுத்தி விட்டனர். இதனால், ஆசிரமத்தில் உள்ளவர்களைப் பராமரிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இந்த ஆசிரமத்துக்கு நன்கொடை அளித்து ஆதரித்த கனதனவான்களின் 'கருணை'யும் கூட வர்க்க நலனுக்கானதுதான் என்பதை இந்நிகழ்ச்சி நிரூபித்துக் காட்டிவிட்டது.

ஒரு சாதாரண பியூன்கூட மூன்று மாடி பங்களா கட்டிக் கொள்ளும் அதிசயம் மகாராஷ்டிர மாநிலத்தில் நடந்துள்ளது. துலே மாவட்டக் கலெக்டர் அலுவலகத்தில் எழுத்தராகப் பணியாற்றும் பாஸ்கர் என்பவன் தன்னை ஆண்டவனின் அருள் பெற்றவனாக கூறிக் கொண்டு, தன் பெயரை 'தர்ம பாஸ்கர்' என்று மாற்றிக் கொண்டு, இம்



படிப்பகம்

www.padippakam.com

மாவட்டத்தில் ஒரு கோயில் கட்டி, அதற்கு நன்கொடையாக காண்டிராக்டர்கள் முதல் மந்திரிகள் - அதிகாரிகள் வரை அனைவரிடமும் கறந்து வந்தான். முன்னாள் மகாராஷ்டிர மந்திரிகளான எஸ்.பி.சவாண், ஸ்வரூப் சிங் நாயக், ரோகிதாஸ் பட்டில் முதலானோருடன் நெருங்கிய தொடர்பை ஏற்படுத்திக் கொண்டு அதன்மூலம் இம்மாவட்ட வளர்ச்சித் திட்டப் பணிகளுக்கு ஒதுக்கப்பட்ட பல கோடி ருபாயை சுருட்டி விட்டான். இவன் மீது நடவடிக்கை எடுக்க முயன்றபோது அதிகாரிகளும் ஓட்டுக் கட்சித் தலைவர்களும் அதை செயல்படுத்தாமல் முடக்கி விட்டனர். இவனுக்கு கையாளாக இருந்த தினகர் போரேல் என்ற பியூன் இதிலே கொஞ்சம் கமிஷன் அடித்து இப்படி மூன்று மாடிப் பங்களாவைக் கட்டியுள்ளான். தமிழகத்தில் திடீரென கிளம்பிய மேல் மருவத்தூர் பங்காரு பண்டாரம் அதிகாரவர்க்க - ஓட்டுக் கட்சித் தலைவர்களுடன் கூட்டுச் சேர்ந்து விரைவிலேயே பிரபலமாகி, கல்லூரி, பாலிடெக்னிக் நடத்தும்போது, மகாராஷ்டிராவில், 'தர்ம' பாஸ்கரால் ஏன் செய்ய முடியாது?

**மே**ற்கு ஆப்பிரிக்காவிலுள்ள கேமரூன் நாட்டின் லியோஸ் என்ற ஏரி அண்மையில் விஷவாயுவைக் கக்கியதில் 1700 பேர் ஒரே நாளில் மாண்டனர். கரியமில வாயு எனப்படும் கார்பன் - டை - ஆக்சைடு ஏரியிலிருந்து புகை மூட்டமாகக் கிளம்பி அருகிலுள்ள கிராம மக்களுக்கு மூச்சுத் திணறலை ஏற்படுத்தி மரணத்தை விளைவித்துள்ளது. கேமரூனிலும் நைஜீரியாவிலும் இத்தகைய ஏரிகள் அதிகமாக உள்ளதாக சுற்றுச் சூழல் விஞ்ஞானிகள் கூறுகின்றனர். இந்தியாவில் போபர்ஸ் விஷவாயுப் படுகொலையைச் செய்த அமெரிக்கா மற்றும் பிற ஏகாதிபத்தியங்களிடமிருந்து ஆப்பிரிக்காவின் போலி சோசலிச ஆட்சியாளர்களும், ராணுவ சர்வாதிகாரிகளும் அணு உலை நச்சுக் கழிவுகளை தமது நாட்டில் கொட்டுவதற்கு அனுமதியளித்து அதன் மூலம், தமது நாட்டுக்கு பொருளாதார உதவியும் தமக்கு கையூட்டும் பெறுகின்றனர். இதே போல சோமாலியா, சூடான், எத்தியோப்பியா ஆகிய நாடுகளிலும் நடந்துள்ளதாக செய்திகள் வருகின்றன. ஆனால், ஏரியின் அடியிலுள்ள பாறைகள் கரியமில வாயுவைக் கக்குவதாக சாவு வியாபாரிகளான ஏகாதிபத்தியங்களும் அவர்களின் அடிவருடிகளும் புளுகி வருகின்றனர்.

**1917**-ல் நடந்த மகத்தான அக்டோபர் சோசலிசப் புரட்சிக்குப் பிறகு ரஷியாவில் முதன்முறையாக இப்போது கிறிஸ்த்மசுக்கு அரசு பொது விடுமுறையை கோர்பி கும்பல் அறிவித்துள்ளது. இவ்வாண்டு கிறிஸ்துமஸ் விழாவையும், மாதா கோயில் பிரார்த்தனைகளையும் வானொலியும் தொலைக்காட்சியும் நீண்ட நேரம் ஒலி - ஒளி பரப்பின. இதனால், உற்சாகமடைந்த மதவாதிகள் மாஸ்கோ செஞ்சதுக்கத்தில் உள்ள லெனின் நினைவகத்தின் அருகே கிறிஸ்துமஸ் மரத்தை அலங்கரித்துக் கொண்டாடினார்களாம். ஏற்கனவே ஹரே கிருஷ்ணா இயக்கமும், விசுவ இந்து பரிஷத்தும் கூட மாஸ்கோவில் தமது கிளைகளை நிறுவியுள்ளன. இவர்களின் கோரிக்கைப்படி இனி அமாவாசைக்கும், ஆவணி அவிட்டத்திற்கும் 'சோசலிச' ரஷியாவில் விடுமுறை அளிக்கப்பட்டாலும் ஆச்சரியப் படுவதற்கில்லை.



பீகார் சிறைகளில் மூன்றாண்டுகளுக்கும் மேலாக விசாரணையின்றி அடைக்கப் பட்டிருந்த இளஞ்சிறுவர்கள். அப்பாவிகளுக்கு சிறை! கிரிமினல் அரசியல் வாதிகளுக்கும் சாதி வெறி குண்டர்களுக்கும் சுதந்திரம்!

**போ**லிக் கம்யூனிஸ்ட் கட்சியான 'மார்க்சிஸ்ட்' கட்சி கடவுள் - மதம் பற்றிய தனது கொள்கையை மறுபரிசீலனை செய்ய இப்போது ஆலோசித்து வருகிறது. ''வறட்டுச் சூத்திரமாக இல்லாமல் நடைமுறை ரீதியாக மதத்தைப் பார்க்க வேண்டும். இந்தியாவில் மத நம்பிக்கை ஆழமாக வேரூன்றி உள்ளது. ஒவ்வொரு மதத்திலும் உள்ள முற்போக்கான அம்சங்களை ஆதரித்து நாம் பிரச்சாரம் செய்ய வேண்டும். சைதன்யர், ராமகிருஷ்ணர், கபீர் போன்ற மத குருமார்களின் கருத்துக்களை நாம் பிரச்சாரம் செய்து சகிப்புத் தன்மையையும், நல்லெண்ணத்தையும, ஒற்றுமையையும் நாம் வளர்க்க வேண்டும்'' என்று அதன் தலைவர்கள் விவாதித்து வருகிறார்கள். வடமாநிலங்களில் பாரதீய ஜனதாவின் பிடியில் உள்ள இந்துக்களை தம்பக்கம் வென்றெடுத்து ஓட்டுப் பொறுக்க போலிக் கம்யூனிஸ்டுகள் வகுத்துள்ள புதிய உத்திதான் இது. பாரதீய ஜனதாவுக்கும் 'மார்க்சிஸ்டு'க்களுக்கும் அடிப்படை பிரச்சினைகளில் வேறுபாடு கிடையாது என்று நாம் கூறினோம். உண்மைதான்! ''நாங்கள் காவிக்கொடி கம்யூனிஸ்டுகள்தான்'' என்பதை 'மார்க்சிஸ்டு'கள் நிரூபித்து வருகிறார்கள்.



**க**டந்த மூன்றாண்டுகளாக விசாரணையே கிடையாது. ஒரு நாளைக்கு இரண்டுவேளை கஞ்சி ஊற்றப்படும். வேறெந்த உரிமை கேட்டாலும் உதை விழும். இதோடு சிறைக் காவலர்களின் ஓரின சேர்க்கைக்கும் அவர்கள் இணங்க வேண்டும். இப்படி, சிறு குற்றங்கள் - சந்தேக வழக்குகளில் கைது செய்யப்பட்ட 1477 இளஞ்சிறுவர்கள் பீகாரில் கடந்த மூன்றாண்டுகளுக்கும் மேலாக சிறையில் வதைபட்டார்கள். இந்த அநீதியை எதிர்த்து சமூக சேவகர் ஒருவர் தொடுத்த பொதுநல வழக்கின் அடிப்படையில், இச்சிறுவர்கள் அனைவரும் இப்போது விடுதலை செய்யப்பட்டுள்ளனர். பீரங்கித் திருடன் பாசிச ராஜீவ் கும்பலுக்கு என்றால், பதறியடித்துக் கொண்டு ஒரே நாளில் தீர்ப்பு சொல்லி குற்றவாளிகளைப் பாதுகாக்கும் இந்திய 'நீதி'த் துறைதான் இளஞ்சிறுவர்களைச் சிறையிலடைத்து இத்தனை நாளும் வதைத்துள்ளது.

**1986**ல் பாசிச ராஜீவ் கும்பல் கொண்டு வந்த புதிய கல்விக் கொள்கை மேட்டுக் குடியினருக்கு மட்டுமே சேவை செய்துள்ளது என்று அரசால் அமைக்கப் பட்ட ராமமூர்த்தி கமிட்டி, அண்மையில் தனது ஆய்வறிக்கையில் சாடியுள்ளது. இக் கொள்கையை திருத்தி, அமைக்குமாறும் அது கோரியுள்ளது. புதிய கல்விக் கொள்கையின்படி உருவாக்கப்பட்ட நவோதயா பள்ளிகள் குழந்தைகளின் மனநிலைக்கு எதிராகவும், அவர்களின் கிராமப்புற பின்னணிக்கு எதிராகவும் உள்ளது. கிராமப்புற குழந்தைகள் இப்பள்ளிகளில் தொடர்ந்து படிக்க முடியாமல், விலகி விடுவதாலும் அல்லது அவர்களைச் சேர்த்துக் கொள்ள மறுப்பதாலும் பல நவோதயா பள்ளிகளில் 30% இடங்கள் காலியாகவே உள்ளன. இப்பள்ளிகளில் ஒரு குழந்தைக்கு ஆண்டுக்கு ரூ.9000 வரை செலவிடப்படுகிறது. லட்சக்கணக்கான குழந்தைகள் கல்வி கற்க வசதியின்றியும், பெரும்பாலான பள்ளிகளில் உரிய கல்விச் சாதனங்கள் இல்லாத நிலையிலும் மிகுந்த பொருட்செலவில் நவோதயா பள்ளிகளை நிறுவுவது அநீதியானது என்று அந்த அறிக்கை குற்றம் சாட்டியுள்ளது. பாசிஸ்டுகளின் கல்விக் கொள்கை யாருக்குச் சேவை செய்துள்ளது என்று இப்போது புரிகிறதல்லவா?

படிப்பகம்

www.padippakam.com

★ பெரிஸ்த்ரோய்க்காவின் தோல்வி ★ தேசிய இனக்கலகம்

★ பொருளாதார நெருக்கடி ★ ஆட்சிக்கவிழ்ப்பு அபாயம்

# கோர்பச்சேவின் கதி என்ன?



வரலாறு மீண்டும் திரும்புகிறது. 35 ஆண்டுகளுக்கு முன்பு என்ன நடந்ததோ அதுவே இப்போது ரஷியாவில் மீண்டும் தொடர்கிறது. 1956-ல் சூயஸ் கால்வாய் பிரச்சினையை ஒட்டி பிரிட்டிஷ், பிரெஞ்சு ஏகாதிபத்தியங்கள் மோதிக் கொண்ட போது, ரஷிய சர்வாதிகாரி குருச்சேவின் டாங்கிகள் ஹங்கேரி மீது தாக்குதல் நடத்தி அடிமைப்படுத்தின. அதே போல இப்போது உலகின் கவனம் வளைகுடாப் போரில் குவிந்திருக்கும் போது, 'சமாதானத் தூதர்' கோர்பச்சேவின் படைகள் பால்டிக் குடியரசுகள் மீது பாய்ந்துள்ளன.

### கோர்பச்சேவின் ஜனநாயக வேடம் கலைந்தது

ரஷிய ஒன்றியத்திலுள்ள லித்துவேனியா, லாட்வியா, எஸ்டோனியா ஆகிய பால்டிக் குடியரசு நாடுகளில் பிரிவினை கோரும் தேசியவாதிகளின் இயக்கம் வலுப்பெற்று வருகிறது. லித்துவேனியாவில் பலமாக உள்ள இவ்வியக்கத்தினர் கம்யூனிஸ்ட் கட்சித் தலைமையை நிராகரித்து நாடாளுமன்றப் பெரும்பான்மையுடன் தம்மை சுதந்திர அரசாக அறிவித்துக் கொண்டுள்ளனர். அதன் வேகத்துக்கு ஈடு கொடுக்க முடியாத கோர்பச்சேவ், இது பிரிவினை வாதம், ருஷ்ய ஒன்றியத்தைச் சீர்குலைக்கும் முயற்சி என்று படையை ஏவினார். அடுத்த நாளே ரேடியோ, தொலைக்காட்சி, செய்தித் தொடர்பு நிலையங்களை ரஷிய ராணுவம் கைப்பற்றிக் கொண்டு, பிரிவினை இயக்கத் தலைவர்களை கைது செய்தது. இதை எதிர்த்துப் போராடிய மக்கள் மீது ராணுவம் கவச வண்டிகளை ஏற்றி 14 பேரைக் கொன்று, நூற்றுக்கணக்கானோரைப் படுகாயப் படுத்தியது.

லித்துவேனியாவில் ரஷ்ய தலைமையை அங்கீகரிக்கும் 'கம்யூனிஸ்டுகள்' சிறுபான்மையாக தனிமைப்பட்டுப் போயுள்ளனர். அவர்களின் கோரிக்கையை ஏற்று ருஷ்ய ஒன்றியம் பூகோள ரீதியில் பிளவு படுவதைத் தடுக்கவே இந்த நடவடிக்கை எடுத்ததாக ருஷ்ய அரசு கூறுகிறது. ஆனால் எந்தக் கோரிக்கையும் வராத போதிலும், இதர பால்டிக் நாடுகளான லாட்வியா, எஸ்டோனியாவில் ரஷியப் படைகள் குவிக்கப்பட்டு, அங்கேயும் தகவல் தொடர்பு நிலையங்களும், பாராளுமன்றக் கட்டிடமும் ராணுவத்தின் கட்டுப்பாட்டில் கொண்டு வரப்பட்டுள்ளது. இதை எதிர்த்து லாட்வியா பிரிவினைவாதிகள் போராடிய போது 4 பேர் கொல்லப்பட்டுள்ளனர். பலர் படுகாயமடைந்தனர்.

பால்டிக் குடியரசுகள் மட்டுமல்ல, ருஷ்யா முழுவதும் பொங்கி வழியும் தேசிய இனங்களின் எழுச்சி, கோர்பச்சேவின் தலைமைக்கு பெரும் சவாலாக மாறி விட்டது. ஏற்கனவே அர்மீனியா, அஜர்பெய்ஜான், உஸ்பெகிஸ்தான், ஜியார்ஜியா, உக்ரைன், பைலோ ருஷ்யா முதலான தேசிய இனங்கள் மீது அடக்குமுறையை ஏவிய கோர்பியின் அரசு, பதற்றம் நிலவும் 8 தேசிய இன மாநிலங்களில் நிரந்தரமாக செம்படையை நிறுத்தி வைத்து அச்சுறுத்துகிறது. ஒன்று, ராணுவம் - ரகசிய போலிசை வைத்து மீண்டும் படுகொலைகளைச் செய்து தேசிய இன எழுச்சிகளை அடக்க வேண்டும்; அல்லது ருஷ்ய ஒன்றியமே பல பத்து குடியரசுகளாக பிளவுபட்டு சிதைந்து போய் விடும். இந்த நிலைமைக்குத்தான் கோர்பியின் தலைமை தள்ளப்பட்டுள்ளது.

### பெரிஸ்த்ரோய்க்காவின் படு தோல்வி முற்றுகிறது பொருளாதார நெருக்கடி

பெருகிவரும் தேசிய இனப் போராட்டங்கள் ஒருபுறம் நெருக்கும் போது, மறுபுறம் முற்றி வரும் ரஷிய பொருளாதார நெருக்கடி கோர்பியைத் தாக்குகிறது. குருச்சேவ் - பிரஷ்னேவ் கும்பல் ஏற்படுத்திய பொருளாதார நெருக்கடியிலிருந்து நாட்டை மீட்கப் போவதாக கூறிக்கொண்டு கோர்பச்சேவின் அரசு கடந்த ஐந்தாண்டுகளாக அமுல்படுத்தி வரும் பெரிஸ்த்ரோய்கா கொள்கை, எதிர்விளைவுகளையே ஏற்படுத்தியுள்ளது.

பெரிஸ்த்ரோய்கா எனும் மறு சீரமைப்புக் கொள்கையின்படி, ஆலைகள் மீதான கட்டுப்பாடு கம்யூனிஸ்ட் கட்சியிடமிருந்து பிடுங்கி நிர்வாகிகளின் நேரடிப் பொறுப்பில் விடப்பட்டன. நுகர் பொருள் உற்பத்திக்கு முதலிடம் கொடுத்து கூட்டுறவுகளிடம் உற்பத்தியும் விநியோகமும் ஒப்படைக்கப்பட்டது. ஆனால் உற்பத்தியும் பெருகவில்லை. நுகர் பொருட்களும் கிடைக்கவில்லை. அதே போல, கூட்டுப் பண்ணை நிலங்களை 50 ஆண்டுகள் வரை தனியாருக்கு குத்தகைக்கு விட முடிவு செய்யப்பட்டது. ஆனால் கூட்டுப் பண்ணைகளில் அதிகார வர்க்கத்தினராக உள்ள 'பழமைவாதிகள்' விட்டுக் கொடுக்கத் தயாராக இல்லை. தனியாரும் போதிய அளவு மூலதனமிட முன்வரவில்லை. பொருளாதாரத் துறையில் பிரஷ்னேவ் கும்பலின் விசுவாசிகளான பழமைவாதிகளின் பிடியும் தளரவில்லை.

இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு ரஷியாவில் முதன் முறையாக உணவுப் பொருட்கள் மற்றும் நுகர்பொருட்களின் தட்டுப்பாடு காரணமாக இப்போது ரேஷன் முறை கொண்டு வரப்பட்டுள்ளது. ஆனாலும் நீண்ட நேரம் கால் கடுக்க நின்றும் கூட வெறுங்கையோடு மக்கள் திரும்புவதாக உள்ளது. அதே சமயம் கள்ளச் சந்தையும் பதுக்கலும் பெருகியது. இதோடு பல்வேறு தேசிய இனக் குடியரசுகளும் தமது தேசிய பொருளாதாரம் - சந்தையைக் காக்கும் நோக்கத்துடன் உற்பத்திப் பொருட்களை ஏற்றுமதி செய்ய மறுத்து விட்டன. இதனால் ருஷ்யாவின் அங்காடிகள் அத்தியாவசியப் பொருட்கள் கூட இல்லாமல் காலியாகிக் கிடக்கின்றன.

1995க்குள் பல்வேறு வடிவங்களில் தனிச் சொத்துடைமையைச் சட்ட பூர்வமாக்கி சந்தைப் பொருளாதாரத்தை வளர்க்கும் கோர்பியின் திட்டப்படி, கடந்த ஆண்டின் துவக்கத்தில் உணவு தானியங்களின் மொத்த விலை உயர்த்தப்பட்டது. இதன் மூலம் கூட்டுப் பண்ணைகளின் உற்பத்தியும் விற்பனையும் அதிகரிக்கும் என்று நியாயப்படுத்தினர். ஆனால் இதன் விளைவாக அனைத்துப் பொருட்களின் விலையும் தாறுமாறாக உயர்ந்து ருஷ்யப் பொருளாதாரம் பற்றாக்குறை - நெருக்கடியில் சிக்கியது.

பின்னர் கோர்பச்சேவின் பொருளாதார ஆலோசகரும், 'தீவிர சீர்திருத்தவாதி'யுமான ஷடாலின், ரஷிய பொருளாதாரத்தை சீரழிவிலிருந்து முன்னேற்ற 500 நாட்களுக்கான அவசர திட்டத்தைக் கொண்டு வந்தார். ஆனால் இதன் மூலம் பொருளாதார நெருக்கடி தீரவில்லை. மாறாக, தீவிரமாகிவிட்டது.

கடந்த ஆண்டை விட இவ்வாண்டில் மாஸ்கோ தெருக்களில் பிச்சைக்காரர்கள் அதிகரித்து விட்டனர். அத்தியாவசியப் பொருட்களின் தட்டுப்பாடு காரணமாக இப்

லித்துவேனிய தலைநகர் வில்னியசில் ரஷிய டாங்கிப் படையை எதிர்த்து ஆர்ப்பாட்டம்; டாங்கியின் கீழே கொல்லப்பட்ட லித்துவேனிய தேசிய இயக்க ஆதரவாளர்.





படிப்பகம்

போதைய குளிர் காலத்தில் பஞ்சமும் பட்டினிச் சாவும் ஏற்படும் என்று பொருளாதார வாதிகள் அச்சுறுத்துகின்றனர். தேசிய வருமானத்தின் வீழ்ச்சியும் அதிகரித்த பண்புழக்கம் காரணமாக ருஷ்ய பட்ஜெட் பற்றாக்குறை 8400 ரூபிள்களாக உயர்ந்துவிட்டது. பணவீக்கம் 20% க்கும் மேல் உயர்ந்து ருஷ்ய நாணயத்தின் மதிப்பை செல்லாக் காசாக்கி விட்டது. எனவே 50, 100 ரூபிள் கரன்சி நோட்டுக்களை செல்லாது என இப்போது அறிவித்துள்ளது கோர்பி அரசு. எல்லாவற்றுக்கும் மேலாக வேலையின்மை, போதை மருந்து, ஆபாசம், கிரிமினல் குற்றங்கள், மா்ஃபியா குண்டர்கள், கற்பழிப்பு முதலான சீரழிவுகள் பெருகி ருஷ்ய சமுதாயமே புரையோடிப் போய்விட்டது.

### அரசியல் நெருக்கடியும் 'பழமை' வாதிகளின் அச்சுறுத்தலும்

இந்த நெருக்கடிகளைச் சாதகமாக்கிக் கொண்டு ஒருபுறம் தீவிர முதலாளித்துவ மாற்றங்களைக் கோரும் 'சீர்திருத்த' வாதிகளும் மறுபுறம் பிரஷ்னேவ் விசுவாசிகளான 'பழமை' வாதிகளும் கோர்பச்சேவின் தலைமையைக் கடுமையாக எதிர்க்கின்றனர். அவர்களின் பலமும் இப்போது அதிகரித்து வருகிறது. இதிலே கோர்பியையும், 'சீர்திருத்த' வாதிகளையும் மேலை நாட்டு ஏகாதிபத்தியங்கள் ஆதரிக்கின்றன. ஆனால் ரஷியாவில் நீண்டகாலமாக நிலவி வரும் அதிகாரவர்க்க - ராணுவக் கட்டமைப்பின் மூலம் கோர்பியின் திட்டங்களை செயலற்றதாக்கி அதன் மூலம் பழமைவாதிகள் பலமடைந்து வருகின்றனர். குறிப்பாக கூட்டுப் பண்ணைகள், அதிகாரவர்க்கம், செம்படை, ரஷிய கொலைகார உளவு நிறுவனமான கே.ஜி.பி ஆகியவற்றில் பழமைவாதிகளின் பிடி இன்னும் தளரவில்லை. இதன் மூலம் கடந்த ஆண்டு ரஷியாவில் உணவு உற்பத்தி பெருகிய போதிலும் விநியோக முறையில் ஆதிக்கம் செலுத்தும் பழமைவாதிகள், செயற்கையாக உணவுத் தட்டுப்பாட்டை உருவாக்கினர். இதனால் ரஷியா மேலைநாடுகளிடம் கையேந்த வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டது. கோர்பியின் மறுசீரமைப்பு கொள்கை கண்டனத்துக்குள்ளானது.

ரஷியாவின் பொருளாதார நெருக்கடிக்கு காரணமாக பழமைவாதிகள் மீது பழி போட்டு வந்த கோர்பச்சேவ் இப்போது பழமைவாதிகளின் தயவு, ஆதரவு இல்லாமல் எதையும் செய்ய முடியாது என்ற நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார். எனவே தனது அதிகாரத்தைத் தக்கவைத்துக் கொள்ள, தனது தோல்வி - தவறுக்கான காரணங்களைத் தனது சகபாடிகள் மீது சுமத்தியும், தனது எதிராளிகளுக்கு விட்டுக் கொடுத்து சாந்தப் படுத்தியும் அடுத்தடுத்து ஆட்சி மாற்றங்களைச் செய்தார் கோர்பச்சேவ், பிரதமர் ரிஜ்கோவ் அரசாங்கத்தின் பல்லைப் பிடுங்கி, தன்னிடம் அதிகாரங்களைக் குவித்துக் கொண்டு அமைச்சரவை அளவுக்கு அதிகாரம் கொண்ட ஆலோசனைக் குழுவை கட்டியமைத்துக் கொண்டார். பின்னர் ரிஜ்கோவை பதவியிலிருந்து நீக்கிவிட்டு பழமைவாதிகளின் நிபந்தனையை ஏற்று பாவ்லோவை புதிய பிரதமராக்கினார். அதே போல சீர்திருத்தவாதிகளின் மிரட்டலுக்குப் பணிந்து துணை அதிபர் லிகசேவுக்குப் பதில் யேனயேவை அப்பொறுப்பில் அமர்த்தினார்.




ரஷிய மக்களை அச்சுறுத்தும் நெருக்கடி — ரேஷன் கடைகள் காலியாகிக் கிடக்கின்றன.

ஆனால் இந்த சமரசங்களால் பழமை வாதிகள் அடங்கிப் போவதாகத் தெரியவில்லை. அவர்கள் இப்போதைய நெருக்கடியைச் சாதகமாக்கிக் கொண்டு கோர்பச்சேவைத் தூக்கியெறிந்து விட்டு ஒரு ஆட்சிக் கவிழ்ப்பை நடத்துவார்களோ என்ற பீதியே இப்போது நிலவுகிறது. செம்படையையும், உளவு நிறுவனமான கே.ஜி.பி. யையும் தமது ஆதிக்கத்தின் கீழ் வைத்துள்ள பழமை வாதிகள் இப்போதைய ஆட்சியாளர்களையும், சீர்திருத்த இயக்கத் தலைவர்களையும் தூக்கியெறிய ரகசிய திட்டம் தீட்டியுள்ளார்கள் என்றும் இதற்காக கொலைப் பட்டியல் தயாரித்துள்ளனர் என்றும் இதனால் சில முக்கிய தலைவர்கள் தலைமறைவாகி விட்டனர் என்றும் செய்திகளும் வதந்திகளும் வருகின்றன. இவை எந்த அளவுக்கு உண்மையோ, பொய்யோ தெரியவில்லை. ஆனால் அதற்கான சாத்தியங்கள் உள்ளதாகவே தெரிகிறது. இதனால்தான் கோர்பச்சேவின் கூட்டாளியும், வெளியுறவு அமைச்சராகவும் இருந்த ஷெவர் நாட்சே ரஷியாவில் சர்வாதிகார ஆட்சிக்கான அபாயம் நிலவுவதாகக் கூறி பதவி விலகினார்.

இதை உறுதிப்படுத்தும் வகையிலே இப்போது பால்டிக் குடியரசுகள் மீது ரஷிய ராணுவம் படையெடுத்துள்ளது. முதலில் கோர்பச்சேவ் இது பற்றி தனக்கு எதுவுமே தெரியாது என்று கூறிவிட்டு, பின்னர் படையெடுப்பை நியாயப் படுத்தியுள்ளார். உண்மையில் கோர்பச்சேவுக்குத் தெரியாமல் தான் ரஷிய செம்படை இத் தாக்குதலை நடத்தியுள்ளது. தாக்குதல் முடிந்ததும் எல்லோரையும் முந்திக் கொண்டு செம்படைத் தளபதியும், கே.ஜி.பி. யின் தலைவரும் "ருஷ்ய ஒன்றியத்தைப் பலவீனப்படுத்தும் எந்த முயற்சியையும் அனுமதிக்க முடியாது; குறிப்பாக பால்டிக் நாடுகள் மேற்கத்திய ஏகாதிபத்தியங்களுடன் கூட்டுச் சேர்ந்து முதலாளித்துவ சர்வாதிகார ஆட்சியை நிறுவ சதி செய்கின்றன" என்று பத்திரிக்கைகளுக்குப் பேட்டியளித்துள்ளனர். ரஷியாவின் பிரஷ்னேவ், சீனாவின் டெங் பாணியில் கம்யூனிசத்தின் பெயரால் அதிகாரவர்க்க - ராணுவ சர்வாதிகார ஆட்சியை மீண்டும் நிலை நாட்டத் துடிக்கும் பழமை வாதிகளின் கை மேலோங்கியுள்ளதையே இந் நிகழ்ச்சி நிரூபித்துக் காட்டுகிறது.

ஆனால் கோர்பியையும், 'இரும்புக் கதவை' அகலத் திறந்துவிடும் அவரது 'சீர்திருத்த' கொள்கையையும் ஆதரித்து ஏற்றிப் போற்றி வந்த ஏகாதிபத்தியங்கள் இதற்கு ஒருக்காலும் சம்மதிக்காது. பழமைவாதிகளின் பிடியில் சிக்கிவிடாமல் தைரியமாக நடவடிக்கை எடுக்குமாறும், இல்லையேல் ரஷியாவுக்கான பொருளாதார உதவிகளை நிறுத்திவிடுவோம் என்றும் அவை கோர்பியை எச்சரிக்கின்றன. இதைத் தொடர்ந்து ஐரோப்பிய கூட்டமைப்பு நாடுகள் ரஷியாவுக்கு உணவு அனுப்புவதை நிறுத்தி விட்டது. பால்டிக் குடியரசுகளின் மீதான நடவடிக்கைக்கு கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ள அமெரிக்கா, செம்படையை உடனே விலக்கக் கோரியுள்ளது. இது தவிர ரஷியாவில், தீவிர சீர்திருத்தவாதிகள் பால்டிக் நாடுகள் மீதான ராணுவ நடவடிக்கைக்கு எதிர்ப்பு தெரிவித்து ஆர்பாட்டங்களைத் தொடருகின்றனர்.

ஆகவே அரசியல் - சமூக - பொருளாதாரத் துறைகளில் கோர்பியின் கொள்கைக்கு ஏற்பட்டுள்ள தோல்வி - நெருக்கடி; ருஷிய ஒன்றியத்தில் உள்ள தேசிய இனங்களின் கலகம் - எழுச்சி; பழமைவாதிகளின் ஆட்சிக் கவிழ்ப்பு அபாயம்; மேலை நாடுகள் மற்றும் தீவிர 'சீர்திருத்த' வாதிகளின் நிர்பந்தங்கள் - என பலமுனைத் தாக்குதல்களால் கோர்பச்சேவின் அந்திமக் காலம் நெருங்கி விட்டது. ருஷ்ய 'சீர்திருத்த' வாதிகளின் பத்திரிக்கை கருத்துக் கணிப்புப்படி அவரது செல்வாக்கும் மங்கி வருகிறது. அவரால் முதலாளித்துவ 'சீர்திருத்தத்தை' நோக்கி முன்னேறவும் முடியாது; பழமை வாதிகளின் அச்சுறுத்தலால் பின் வாங்கவும் முடியாது; இத்தகைய திரிசங்கு நிலையிலிருந்து கொண்டு அவரால் அதிகாரத்தைத் தக்கவைத்துக் கொள்ளவும் முடியாது. வேறென்ன செய்வது? வினை விதைத்தால் அதைத்தானே அறுவடை செய்ய முடியும்!

● குமார்

ஆசிரியரும் வெளியிடுபவரும்: செ.மதியழகன், 21, [illegible] தெரு, சைதாப்பேட்டை, சென்னை - 600 015.
அச்சிடுபவர்: நீட் பிரிண்டர்ஸ், 2 ஔலியா சாகிப் முதல் சந்து, எல்லிஸ் சாலை, சென்னை - 600 002

www.padippakam.com

PUTHIYA JANANAYAGAM R.N. 42648/85 Regd.No.TN/MS(S) 344




# இதுதான் இன்றைய இந்தியா

இவர்கள் நர்மதா அணைக்கட்டுத் திட்டத்திற்கு எதிராகப் போராடும் உழைப்பாளிப் பெண்கள்! குஜராத் - மத்திய பிரதேச எல்லையில் கட்டப்பட்டு வரும் இத்திட்டம், நர்மதா ஆற்றின் நீரோடும் சுற்றியுள்ள காட்டுவளத்தோடும் தங்கள் வாழ்வை பிணைத்துக் கொண்டிருக்கும் பழங்குடி மக்களை 200 மைல்களுப்பால் விரட்டியடிக்கிறது. இப்படி வாழ்விழக்கும் 52 தாலுகாவைச் சேர்ந்த பழங்குடி மக்களுக்கு உருப்படியான மாற்று நிவாரண திட்டமும் அரசிடம் இல்லை. தங்கள் எதிர்காலத்தை கேள்விக்குறியாக்கும் இத்திட்டத்தை நிறுத்தக் கோரி அண்மையில் (30 - டிசம்பர் '90) பழங்குடி மக்கள் நூற்றுக்கணக்கான மைல்களைக் கொண்ட ஊர்வலம் நடத்தினர். ஆயிரக்கணக்கான மக்கள் உண்ணாவிரதம் மேற்கொண்டுள்ளனர். சமூக சேவகி மேதா பட்கர் உட்பட 8க்கும் மேற்பட்டவர்களின் நிலை இன்று சாவை நோக்கிச் சென்றும் கூட அரசு அலட்சியப்படுத்துகிறது. குஜராத் - ம.பி. மாநில அரசுகள் இப்போராட்டத்தை ஒடுக்க நர்மதா பள்ளத்தாக்கில் ஆயுத போலீசை குவித்துள்ளன; போராடுபவர்களின் மீது பாய்ந்து குதறுகின்றன.



இது பியூட்டி பார்லர் - மேட்டுக்குடி கும்பல் என்றில்லாமல் நடுத்தர வர்க்க மக்களிடையேயும் பரவிவரும் முதலாளித்துவ சீரழிவுக் கலாச்சாரம்! கறுப்புநிற முகத்தை வெள்ளை அல்லது ரோஜாப்பூ வண்ணமாக மாற்றும் 'பவுடர்', 'பாப் கட்டிங்', உதட்டுச்சாயம், புருவ மை, கூந்தல் நறுமணத் தைலம் — இப்படி அனைத்து அழகு சாதனப் பொருட்களாலும் இங்கு உங்களை 'அழகு'படுத்துவார்கள்! உடல் அலுப்பைப் போக்க 'மசாஜ்' செய்தும் விடுவார்கள்! கல்லூரிப் பெண்கள் முதல் நடுத்தர வயது பெண்கள் வரை இங்கு குவிகிறார்கள்! கையில்லாத 'பிளவுஸ்', புதிதாக வந்திருக்கும் 'பாஷன்' ஆடை அலங்காரங்களை தூக்கிக் கொண்டுவந்து தங்களை இங்கு 'அழகு'ப்படுத்திக் கொண்டு போகிறார்கள்! வெயிலால் உடலின் நிறம் குறைவதை போக்க 5 நாட்களுக்கு ஒருமுறை வந்து சாயம் பூசிக் கொள்கிறார்கள். மாப்பிள்ளை விரும்பியபடி அழகு படுத்துவதற்காக மணமகளை இங்கு ஒருநாள் முழுவதும் விட்டு ஆயிரக்கணக்கான ரூபாய்களைக் கொடுக்கிறார்கள்! மொத்தத்தில் இங்கு கழுதை குதிரையாக்கப்படுகிறது; நாய் வால் நிமிர்த்தப் படுகிறது; தற்காலிகமாக!

ஒருபுறம், வாழ்விற்காக உயிரைப் பணயம் வைத்துப் போராடும் உழைப்பாளி பெண்கள்! அவர்களை ஈவிரக்கமின்றி பல்வேறு வகையில் ஒடுக்குகிறது அரசு! மறுபுறம், தமது அவலட்சணத்தை மறைக்க அழகு சாதனங்களைத் தேடியலையும் மேட்டுக்குடிப் பெண்கள்! இதற்கென ஐந்து நட்சத்திர கலாச்சாரத்தையும், அதற்கான உற்பத்தியையும் ஊக்குவிக்கிறது அரசு! இதை துடைத்தொழிப்பது எப்போது?

படிப்பகம்